# அண்ணாவின் அரசியல் பாதை

73

அன்பு நிலையம்

31, பிராட்வே, சென்னை-1.

பதிப்பு 1966, 1969.

1[illegible]660

தயாரிப்பு:
*K. R.* நாராயணன்.

விலை ரூ. 2-00.

ராயன் அச்சகம் சென்னை-1.

# முன்னுரை

தேனைச் சுவைத்தபோது அது இனித்திடவில்லை; கற்கண்டு கலந்த பாலைப் பருகியபோது அதிலே சுவை தெரியவில்லை...... இத்தகு நிலைக்குக் காரணம் பருவக் கோளாறல்ல! தென்னவர் தலைவராம் பேரறிஞர் அண்ணாவின் அரசியல் வாழ்வு தனை விமர்சிக்கும் முறையிலே இந் நூலினை எழுதியபோதுதான் அந்தத் தேனும், பாலும் சுவைத்திடவில்லை. அண்ணாவின் அரசியலி லேயே அத்தனை சுவையும் இணைத்துக் கிடந்தபோது......வேறு சுவைதனை நெஞ்சம் ஏற்றிடவில்லை என்பதனையும் செப்பிடவும் வேண்டுமோ? இந்நூலினைப் படித்திடும் நீங்களும் அச் சுவைதனைப் பெற்றிடப் போகிறீர்கள்...... பெற்றிட வேண்டுமென்று விரும்புகிறேன்.

வெறும் ஏடு புரட்டிடும் நூலல்ல இது எண்ணங்களிலே புரட்சியும், இதயத்திலே மலர்ச்சியும் ஏற்படுத்தித் தரும் மாபெரும் வீர வாழ்வுக் காவியமாகும். இந்த அமர காவியந் தன்னை அகிலத்துக்கு அறிமுகப்படுத்த முன் வந்திருக்கும் திரு. K. R. N. அவர்களுக்கு என் நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

20—12—66
திண்டுக்கல்.

மா. தங்கவேலர்.

# என்னுரை

அண்ணாவின் அரசியல் பாதை சமன் செய்யப்படாதமண் தரை அல்ல; சறுக்கிவிடக்கூடிய வழுக்கு நிலமும் அல்ல! சந்தர்ப்பத்துக்காக வளைந்து கொடுக்கும் சதிக்குழிகள் நிறைந்த பாதாளக் கிடங்குமல்ல என்பதை மாற்றார்கள் கூட நன்றாகத் தெரிந்துவைத்திருக்கிறார்கள்.

அண்ணாவின் அரசியல் பாதை அன்பு என்ற ஜல்லி போட்டு, அடக்கம் என்ற தண்ணீர் ஊற்றி' அரசியல் நாகரீகம் என்ற மண் கலந்து, ஆற்றல் என்ற சிமெண்ட் சேர்த்து) அற்புதமாகப் படைக்கப்பட்டிருக்கும் காங்க்ரிட் (நிலையான, சாலையாகும். அந்தச் சாலையின் ஓரத்திலே சமதர்ம மரங்களும், சமத்துவ விளக்குகளும் நின்று அணி செய்கின்றன. கடமை என்ற தென்றலும் கனிவு என்ற வெளிச்சமும் பாதைப் பயணத்தைப் பயனுள்ளதாகவும் பயமற்றதாகவும் ஆக்கிக் கொண்டிருக்கிறது

அகில இந்தியாவும் இன்றைய தினம் 'அண்ணாவின் அரசியல் பாதை உறுதியானது என்பதையும் உன்னதமானது என்பதையும் ஒப்புக்கொண்டுவிட்டது. அண்ணல் காந்தியின் அடியைப் பின் தொடர்ந்து அவருக்கும் முன்னோடியாக விளங் கக்கூடிய ஆற்றல்மிகு அறிஞரின் ஏற்றமிகு அரசியல் பாதையை எல்லோரும் போற்றிப் புகழ்வது வியப்பல்ல! என்றாலும், தூற்றித் திரியும் சில சூரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கதாநாயகனின் புகழ் பரவுவதற்குக் காரணத்தர்களாகக் காட்சிதரும் கதா வில்லர்கள்; அவர் களின் சொல்லோ, பேச்சோ, அண்ணாவின் அரசியல் பாதைக்கு மாசு கற்பித்துவிட முடியாது.

ஆணித்தரமாகவும், அருமையாகவும், தெளிவாகவும், திறமையாகவும் இந்த 'அண்ணாவின் அரசியல் பாதை'யை ஆக்கித் தந்திருக்கிறார் மா. தங்கவேலர் தமிழகத்துக்கு.

அந்தக் கருணை மன்னரின் அரசியல் பாதை—அறிஞர் திலகத்தின் அரசியல் பாதை—அண்ணாவின் அரசியல் பாதை அனைவரும் பின்பற்ற வேண்டிய ஒன்று, என்ற எண்ணத்திலே தான் இந்த நூலை வெளியிடுகிறேன்.

அன்பன்.

**K. R. நாராயணன்**

## மனநலம் மன்னுயிர்க்காக்கும், இனநலம் எல்லாப் புகழும் தரும்

"லில்பர்ன் என்றோர் எழுத்தாளன் ராஜத்துரோக,மாக எழுதினான் என்று வழக்குத் தொடுக்கப்பட்டது. முச்சந்தியில் நிறுத்தப்பட்டு, அவன் கழுத்தை ஒரு பலகைக்குள்ளே புகுத்தித் தண்டித்தனர்! இது கேவலப்படுத்துவதற்காக இருந்து வந்த தண்டனை முறை சிறு கூட்டம் அவன் எதிரே கூடிற்று! அந்த நெஞ்சழுத்தக்காரன் அங்கு நின்றபடியே; அரசாட்சியிலே உள்ள கேடுகளையும், ஊழல்களையும் விளக்கலானான்! வெட்கப்பட்ட அதிகாரிகள் அவனைச் சிறைக்குள் போட்டு மூடினர், அரசாங்கத்தின் மானம் பறிபோகும் என்ற அச்சத்தால் சிறையிலே லில்பர்ன், பட்டினி கிடந்து சாகட்டும் என்று விட்டுவிட்டனர்; உடனிருந்த கைதிகள், தங்களுக்குத் தரப்பட்ட உணவில் சிறிது சிறிது கொடுத்து, உயிர் பிழைக்க வைத்தனர். இவ்வளவு கொடுமைக்கு ஆளான, லில்பர்ன், இருபதாண்டு நிரம்பிய வாலிபன்! மக்கள் எவ்வளவு உருகியிருப்பர், அவன் பட்ட கொடுமை கண்டு! அந்தக் கண்ணீர், வலுவளிக்கும் மாமருந்து என்பதை மமதையாளர் உணரவில்லை"

......என்று 'மக்கள் கரமும் மன்னன் சிரமும்' என்ற கட்டுரையிலே இதுபோல அண்ணா அவர்கள் முன்னொரு முறை குறிப்பிட்டிருந்தார்கள். ஏகாதிபத்தியவாதிகளின் கெடு

பிடிகளுக்கு, ஆளாகிடும் அரசியல்வாதிகளின் சூழ்நிலையை விளக்கிட, அனைத்துலக அரசியல் தொகுப்பிலே மிகமிக அதிக மான வியப்பிற்குரிய காட்சிகளிருப்பினும்; இதுவொன்றே ஆதிக்கவாதிகளின் நிலையைப் படம் பிடிப்பதிலே சிறப்படைவ தாகக் கருத முடியும். எழுத்து கருத்தாகி, மக்களின் மனநடுக் கத்தைப் போக்கி மறுமலர்ச்சியின் தூதுவர்களாகவும், புரட்சி யின் பாதுகாவலர்களாகவும் அவர்களை ஆக்கிடும் பாங்கினை நாடறிந்த வரலாற்றுக் கதையாகும். உருட்டு விழியினர்-முரட் டுப் போக்கினர் மூக்கறுபட்டு மூலையிலே பதுங்கியதற்குக் காரணம் எழுச்சிக் கருத்து புகைந்து, புரட்சி எரிமலை வெடித்த தனாலேயே தான் !

அண்ணா குறிப்பிட்ட முறையை-குறையை அந்த மமதை யாளர்கள் உணராத காரணத்தாலேயே திரும்பத் திரும்ப அரசியல் நாடகத்திலே ஆதிக்கவாதிகள் வில்லர்களின் பாகந் தாங்க வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுத் தீருகிறது. கண்ணீ ருக்குக் கருணைக் காட்டாதவர்கள் ; நல்லிதயங்களை சுட்டுப் பொசுக்கியவர்கள் ; கேடு போக நாடு வாழத் திட்டமிட்டவர் களை விரட்டியடித்திடும் விசித்திர சித்தர்கள் சந்தித்திடும் அரசியல் பாதை மிக மிக பயங்கரமானதாகத்தான் இருந்துவிடு கிறது. கோபுரத்தின் மீதிருப்பவன் வனப்பையும் வண்ணத்தை யுமே மட்டும் கண்டு மகிழ்ந்திருப்பதுபோல, ஆதிக்க உச்சியில் நிற்போர் ஆபாசங்களின் லயிப்போடு நின்றுவிடுகின்றனர். பேயாட்டத்தின் உச்ச கட்டத்தில் நிலை தடுமாறி தலை சாய்ந்து விழும்போது தான் ஏகாதியத்தியம் தனது தப்புக் கணக்கைப் போட்டு முடிக்கிறது. எத்தனை ராஜத்துரோக வழக்குகள் ஜோடிக்கப்பட்டாலும் அத்தனையும் தூள் தூளாவது அப்போது தான். கண்ணீருக்குப் பின்னே தலை தூக்கும் எழுச்சி வரிகள் மட்டுமேதான் கோபுரவாசிகளின் முடிவுரையாகிடும் தகுதிபெறு கிறது.

இருபதாண்டே நிரம்பப் பெற்ற எழில் சிந்தும் வாலிபன் லீல்பர்ன் இருட் சிறையிலே சிந்தை நொந்து வாடியபோது

எத்துணை அல்லற்பட்டான். அவன் உயிர் வாழக்கூடாது என்பதற்காக உணவு தர மறுத்தனர். 'எங்களைத் தாக்கியது உனது அந்த நாக்குதானே! அதை சுவையறியாமலே சுட்டுப் பொசுக்கி விடுகிறோம்' என்றுகூறுவதுபோல் காரக்கிருகத்திலே உணவளிக்காது உள்ளே தள்ளிப் பூட்டிவைத்தனர். 'அந்தக் கண்கள் தானே எங்களை கேலியோடு பார்த்துச் சிமிட்டிக் கொண்டது. இதோ இந்த இருட் சிறையிலே அந்த ஒளி துப்பும் கண்கள் அணைந்து போகட்டும்! என்று சொல்வது போல வில்பர்ஃபோர்ஸை வாட்டிடத் திட்டமிட்டு செயலாக்கினர். "கட்டிளங் காளை காதலித்தவளோடு கொஞ்சிக் கிடக்க வேண்டியவன் இவனுக்கேன் இந்தப் பித்து? ஊராள வந்தவரோடு போராடிக் கொண்டிருக்கிறானே! இப்படியா இந்த ஊதாரியின் புத்தி அமைய வேண்டும்,"...

இப்படித்தான் ஆதிக்கத்திற்குத் துணை போனவர்கள் அங்கலாய்த்துக் கொண்டிருந்தனர். வில்பர்னோ, 'இது என் நாடு, இங்கே இருக்கக் கூடாது அக்ரமத்தின் கூடு' என்று பரணி பாடினான். 'நீ சொல்வது, எழுதுவது அத்தனையும், தவறு. ராஜபாட்டையை மதிக்க மறுக்கிறாய். குபேரபுரிவாசிகளை நோக்கி எங்கோ ஒரு மூலையிலிருந்து கிறுக்கித் தள்ளும் சின்னஞ் சிறியவனாகிய நீயா போர்க்கொடி உயர்த்துவது. சிறு நரிக்கு சிங்கம் பல்லக்குத் தூக்க முடியுமா? போ...போ!" என்று இதுபோலக் கூறி இருட் சிறையைக் கரம் நீட்டிக் காட்டினர் கெடுமதியாளர்கள்:

'ராஜத்துரோக' குற்றம் வில்பர்ஃபோர்ஸை மிரட்டுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை, பிரையின் என்ற வழக்கறிஞரையும் அது ஆட்டிப்படைக்கத் துவங்கியது. ஒழுக்கத்தைக் கெடுக்கும் ஆடல்; பாடல் களியாட்டங்கள் பிரான்ஸிலிருந்து பிரிட்டனுக்குப் பரவியதைக் கடுமையாகக் கண்டித்த அந்த சன்மார்க்க சீலருக்கு 5000 பவுன் அபராதமும்—ஆயுள் தண்டனையும் கிடைத்தது! கோரமான தீர்ப்புத்தான். நேர்மையாளர்கள் ஒப்புக்கொள்ள முடியாததுதான். ஆனாலும், ஆதிக்க வாதிகள்

ஆடியுள்ளனர் அதிகார போதை கொண்டு, வெறியுள்ளங் கொண்டவர்கள் வெள்ளைமனம் படைத்தவர்களை எத்தகைய கொடுமைக்கு ஆளாக்கினோர்களென்பதையறிய வில்பர்ன், பிரையின் அல்லல் வாழ்க்கையே போதுமானதாகும்.

அடக்குமுறையின் துணை கொண்டு ஏகாதிபத்தியத்தை நிலை நிறுத்திடும் போக்கோடு அரசியல் பாதையில் நடை போட்டவர்கள் அண்ணு குறிப்பிட்டது போல 'அந்தக் கண்ணீர், வலுவளிக் நம் மாமருந்து என்பதை மமதையாளர் உணரவில்லை' என்ற நிலைக்குத்தான் வந்து தீர்ந்தனர். ஒரு வில்பர்ன், பிரையினோடு அவர்களுடைய ஆர்பாட்டமும்; போர்க்குரலும் ஓய்ந்திடவில்லை. ஆயிரமாயிரவரின் சித்ரவதைக்குப் பின்னே தோல்வி அழுதுகொண்டு வந்து நின்றது ஆதிக்க வாதிகளின் அருகிலே,

ஆண்டாண்டு காலத்துக்கு முன்பிருந்த அவல நிலையை விளக்கி 'மக்கள் கரமும் மன்னன் சிரமும்' என்ற கருத்துச் சித்திரத்தை அண்ணு தீட்டியதன் நோக்கம்... இங்குள்ள அரசியல் பாதையை நந்தி போல மறைத்து நிற்கும் நாயகர்களையும் நினைவிற்கொள்ள வேண்டுமென்ற சீரிய முயற்சிக்காகத் தான். "நோக்கம் சிறந்தது தான்! விளைவு ஆதிக்கவாதிகள் பாடம் பெற்றவர்களாக வேண்டும்" என்று தான் நல்லறிவாளர்கள் நம்பினர். நல்ல சூழ்நிலைக்கு மாருக வில்பர்ன், பிரையின் ஆகியோருக்கு ஏற்பட்ட அவதி போலவே இங்கும் பாதை அமைத்துத் தந்தனர். "அகிலமெங்கும் காணுங்கள் ஆதிக்கம் அழிந்துபட்டு வருகிறது. இங்கு மட்டும் ஏகாதிபத்தியத்தின் வெறிச் சிரிப்பு ஏன்' என்று எடுத்துச் சொல்லிய அண்ணுவிடம் ,வில்பர்னும், பிரையினும் பிரிட்டனிலே மட்டும் இருந்துவிடுபவர்களல்ல இங்கும் அவர்களைத் தேடிப் பிடிப்போம், அடக்குமுறையால் அழிப்போம்' என்று கூறுவது போல அராஜகத்துக்குத் தூபமும், அறமுறை அரசியல் பாதைக்குத் தடையும், தருபவர்களாக மாறி வருகின்றனர் இங்குள்ள ஜனநாயகக் காவலர்கள். அரசியலிலே கண்ணிபத்துக்கு முதலிடம்

தந்துள்ள அண்ணா, 'தாக்குவர் தாக்கிக்கொள் ' என்ற கட்டளையே போட்டுவிடுகிறார். எனவேதான் இங்கே பலபேர் லிஸ்பர்னாலும், நூற்றுக்கணக்கான பிரையின்கள் கொடுமைக்காரனாலும், அராஜகம் ஜுவாலைவிட்டு எரியாத அரசியல் நடந்திட முடிகிறது.

ஏகாதிபத்தியத்தின் போர் முறைகளைத் தெரிந்து கொண்டவர்களாலேயே அதை எதிர்த்திடும் தகுதியைப் பொதுவாகப் பெற்றிட முடியும் ஆதிபத்தியத்தின் நாசகாலர்கள் எந்தெந்த முறைகளிலெல்லாம் உருவெடுத்து வலம் வருகிறார்களென்பதை தெரிந்துவைத் திருப்பவர்களால்தான் சுலபமாக மோதிட முடியும். ஆதிக்க நினைவுகொண்டோர் தாங்கள் பெரிதும் நம்பிக்கிடக்கும் ரதகஜதுரகபதாதிகளும் தோல்வி காணும் போது மிட்டா மிராசுகளை ஏவியோ ; மதபோதகர்களை மார்க்க சிரேஷ்டர்களை—அனுப்பியோ ; சாதாரண அப்பாவிகளைத் தூண்டிவிட்டோ காரியத்தை சாதித்துக் கொள்ளவும் நினைப்பதுண்டு. இந்த முறையை அவர்கள் கையாளும் போதுதான் விடுதலை விரும்பிகள் சர்வ ஜாக்கிரதையோடு நடந்து கொள்ள வேண்டிய திருக்கிறது. எந்தப் புற்றிலிருந்து எவ்வளவு பெரிய பாம்பு வந்துதீருமோவென்ற குழப்பத்தையும் ஏற்படுத்துவதாக அது அமைந்துவிடும். காட்டாற்று வெள்ளமோ, கடும்புயலோ என்று எண்ணிடும் அளவுக்கு சூடு பிடிப்பதுமுண்டு, தென்றலாகப் பிறந்து புயலாக சுயரூபம் எடுப்பதுவுமுண்டு.

......இந்த அத்தனை வழி முறைகளையும், பாங்கினையும் புரிந்து வைத்திருக்கும் அண்ணா தொடுத்திருக்கும், விடுதலைப் போர் உண்மையிலேயே ஆதிபத்திய வாதிகளுக்கு பெருமளவு அதிர்ச்சியையும், உளநடுக்கத்தையும் தந்திருப்பது நாட்டவர் அறிந்த சேதியாகும். பொன் பொருள் நீட்டி, புன்னகை காட்டி வசீகரித்திட முடியவில்லை அந்த வாலிபப்பட்டாளத்தின் தளபதியை! 'பட்டம் பதவியா, அது என் கால் தூசுக்குச்சமம்' என்று இன்றல்ல நேற்றல்ல பல்லாண்டு

களுக்கு முன்னரே சங்கொலித்துவிட்டார். பட்டத்திற்குத் தாளம் போட்டோர், பதவிக்குக் கை நீட்டியோர் தன் முன்னே நடைபோட்ட போதுகூட ஆணித்தரமாக மிகத் தெளிவாக தனது நிலையை விளக்கியிருக்கிறார். அண்ணாவின அரசியல் பாதையை சரிவர உணர்ந்தவர்களால் மட்டுமே தான் இதைப்புரிந்து கொள்ளமுடியும் அரசியல் வாழ்விலே அவரைச் சந்தித்த 'சரிகைக் குல்லாய்கள்'......'அண்ணா துரைதானே. பேரம் பேசி வாங்கி விடலாம்' என்றுதான் சாதாரணமாக நினைத்தனர், ஆனால் நடந்ததோ வேறு விதமாக இருந்தது. எலியென நினைத்து வலை விரித்தனர், கண்டதோ புலியாக நின்ற உருவத்தை. 'குடிசை வாசிதானே பணநாதன் அருளால் பணியவைத்திடலாம்' என்ற எழில் நினைவு கனவாகிய நேரம் 'வெண்தாடி வேந்தருக்கு திசை காட்டும் திருப்பமாக இருந்திடுவது இந்த வாலிபருலகின் வசீகரத்தென்றலல்லவா...அதை தமது பக்கமாகத்திருப்பிக் கொண்டால்......' இது போல மேட்டுக்குடியினர் மனப்பால் குடித்த வேளை...

சேலம் நகரில் ஜஸ்டிஸ் கட்சியின் மாநில மாநாடு 20-8-44 ல் நடைபெறு மென்று, வரவேற்புக் கழகத் தலைவரும், சேலம் நகர சபைத்தலைவருமான தோழர் P. இரத்தின சாமி அறிவித்திருந்தார். அந்த மாநில மாநாட்டுக்கு முன்னதாக 13-8-44 ல் அண்ணா தமது கருத்தைத் தலையங்கமாகத் தீட்டினார், இதுபோல...

"அழுகிற குழந்தைக்கு அபின்தரும் அன்னை, பாலூட்டும் தாய், பாடித்துயிலவைக்கும் தையல், பாராமுகமாக இருக்கும் பாவை, பாழாய்ப்போன சனியன் ஏன் இப்படிக் கத்துகிறதோ என்று கூறி அடிக்கும் கோபக்காரி, அழுகைச் சத்தமும் கேட்கமுடியாத நிலையிலே அயர்ந்து தூங்கும் அம்மை—இப்படிப்பல 'ரகம்' உண்டு கட்சித்தலைமைகளிலும் இதுபோல் காணக்கூடும். திராவிட இனம், இன்று தன் மானம்பெற தன் உரிமை அடைய தனிநாடு அமைக்கத்

துடிக்கிறது. ஆரியத் தலைகள் அற்று விழவேண்டும் என்று ஆண்மையுடன் கூறுகிறது. இந்த நிலைமை உண்டாக எந்தவழி சிறந்தது என்பதைச் சிந்தித்து, விவாதித்து சேர்த்து ஆலோசித்துச் சித்தரிக்க வேண்டும், சேலம் வாரீர் என்று அழைப்பது அதன் பொருட்டே! இது போது கூடும் மாநாட்டிலே செய்யப்படும் முடிவுகள் பண்டைய பண்புடன் வாழ்ந்து, இடையே இடர்ப்பட்டு இழிநிலை அடைந்து இன்று விழிப்புற்று விடுதலை கோரும் ஒரு வீரனே கருவிகள் தயாரித்து, முறைவகுக்கும் முக்கியம் வாய்ந்ததாக இருந்தாக வேண்டும். அப்படிப்பட்ட நேரம் இது, கவர்னர்களின் கைலாகு, பதவி மோகம், அரசியல் அதிகாரம் எனும் சம்பிரதாய அரசியல் முறைகள் சரியா, இனஎழுச்சி பெற, எதிரியின் சூழ்ச்சிகளை அழித்தொழிக்கும், பணி புரிவது சரியா என்பது இன்றைய முக்கியமான பிரச்சினை'......காங்கிரசும், சர்க்காரும், திராவிடரின் இறுதி எச்சரிக்கையை கேட்டாக வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதைச் சேலம் எடுத்துக் காட்டியாக வேண்டும்'

எப்படிப்பட்ட எழுச்சிவரிகள்! இதைப்படித்து முடித்ததும் சரிகைக் குல்லாய்களின் பக்கம் சாய்ந்தவர்களின் மனம் படாத பாடுபட்டது. 'கட்சியை ஆலமரத்தடிக்கு அழைத்துச் செல்வது மட்டுமல்லாமல் ஆண்டியுமாக்குவது அழகல்லவே' என்று காய்ந்து கொண்டிருந்தனர். அண்ணாவோ தனது அதியற்புதமான திட்டத்தை பகிரங்கமாக எழுதிக்காட்டியதோடு, திட்டங்களின் வெற்றிக்கான நடை முறைகளையும் கவனிக்கத் துவங்கினார். இந்த முறைகளிலெல்லாம் இயக்க வளர்ச்சிக்கான வழிமுறைகளைத் தேடியபோது, அவரது இதயத்திலே ஏற்றிப் போற்றிய வெண்தாடி வேந்தர்கூட சற்று சபலமடைந்தார். 'இந்த அண்ணாதுரை பட்டம் பதவி பெற்றோரை, மிட்டாமிராசுகளை, மேட்டுக்குடி' யினரை இப்படித்தாக்கி எழுதவும் பேசவும் முற்படுகிறாரே விளைவு என்ன ஆகும்? ஒரு பக்கம் கதர் போர்வையினரின் ஆர்ப்பரிப்பு, மறுபக்கம் ஆஸ்திக ஆஷாடபூதிகளின் அட்டகாசம்

இடையே கிடைத்த பணம் படைத்தோரின் ஆதரவு 'அண்ணு' வின் புரட்சிப்போக்கால் துவண்டு விட்டால்... நிலைமை மோசமாகிவிடுமே யென்றெல்லாம் சஞ்சலமடைத்தார் பகுத்தறிவுத் தந்தை. அண்ணு உண்மையிலேயே அப்போதுதான் சரியான புரட்சிக்காரராக மாற்றமெடுத்தார் எத்தனை நாளைக்குத்தான் இந்த ஜஸ்டிஸ் ஜானகிகளின் மையலிலே சிக்கித்தவித்துத் திண்டாடுவது, நமக்கென்று ஒரு வேலைத்திட்டம் ஆக்க முறை இல்லாமலிருப்பது. வேதனைக் குரியதே என்பதை உணரத் துவங்கினர். அப்போதைய 'ஜஸ்டிஸ்டு,களின் காலத்தில்-அண்ணு மேடையிலே தோன்றும் போது மேனுட்டு உடையழகோடு காட்சி தந்திடவேண்டுமென்று விருப்பம் மிகக் கொண்டிருந்தனர். அவர்களின் அன்புத் தொல்லையைத் தட்ட முடியாமல் அண்ணுவும் 'அந்த' உடையழகுடனேயே ஓரிரு மேடைகளிலே தோன்றி வந்தார். பிறகே சாதாரண வேட்டி ஜிப்பா, துண்டு சகிதமாக மேடைக்கு வரத் துவங்கினர். ஒரு எம். ஏ. பட்டதாரி இப்படியா மேடைக்கு வருவது'. 'சர்களும், பகதூர்களும் நிரம்பிய சபைக்கு சட்டை வேட்டியோடு வந்தால் கௌரவப்படுமா' என்று இரகசியமாக ஜஸ்டிஸ்டுகளின் மேலிடத்திலே பேச்சுக்கிளம்பியது. அண்ணுவின் மீது நம்பிக்கை கொண்டிருந்த பெரியவர்கள் கூட 'அண்ணுதுரை ஈட்டும் கோட்டும் என்னவாயிற்று?' என்று வெளிப்படையாகவே கேட்கஆரம்பித்தனர். அண்ணுவோ வழக்கம் போல சிவந்த இதழ்களைத்திறந்து சிரித்துக் கொண்டே, 'எனக்கேற்ற எளிய உடை இதுதான்' என்ருர். அண்ணுவின் அரசியல் நடையிலே மட்டுமல்ல, அணியும் உடையிலும் 'தத்துவம்' சொல்லிக்கொண்டிருந்த நிலை மேலும் அதிர்ச்சியைத் தரத்தான் செய்தது. ஜஸ்டிஸ்டுகளுக்கு, 'நாம் பொன்னை நம்புகிறேம் அவர் மண்ணை நம்புகிருர். நம்மைச் சூழ்ந்து மாளிகை வாசிகள் இருந்திட வேண்டுமென்று நாம் விரும்புகிறேம், அவரோ மண்குடிசை

வாசிகளின் நிழலிலிருப்பதையே இன்பமென்று கருதுகிறார். பட்டங்கள் தாங்கிடும் சட்டைத் தம்பிரான்களாக பாரிலே பவனிவரவேண்டுமென்பது நமது நினைவு, அவரோ பட்டங்கள் வானிலே பறந்தாட ஆசைகொள்கிறார். இப்படிப் பட்டவரிடம் எப்படி உறவாடிக்களிப்பது என்று மேஜை மினுக்கிகள் கலவரமடைந்தனர். அவர்கள் தீவிரமாக அண்ணாவின் புதிய அரசியல் பாதையைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்த போதுதான்......அண்ணாவும் அந்த சுக வாசிகளைப்பற்றி நாட்டுமக்களுக்கு விமர்சித்துக் கொண்டிருந்தார்.

"போரிட ஒரு படை; பேரம் பேச ஒரு கூட்டம், மாள ஒரு கூட்டம் ஆள ஒரு கூட்டம். கஷ்டநஷ்டத்துக்கு ஒரு கூட்டம் பட்டம் பதவிக்கு மற்றொன்று என்றிருக்கும் நிலைமை ஒரு இனத்தை அழித்துக் கெடுக்கும் சூழ்ச்சியாகவே இருக்கும்"

இப்படிப்பட்ட சுவையான விளக்கங்கள் சோம்பிக்கிடந்தவர்களின் உள்ளங்களிலே சூடேற்றிக் கொண்டிருந்தது தென்னகத் தன்மான இயக்க வரலாற்றிலே புதிய அரசியலுக்கான ஒளி வீசியதை நல்லறிஞர்கள் வரவேற்றுக் கொண்டிருந்தனர். ஒளி விளக்கைக் கையிலேந்தி விழிவிளங்கச் சென்று கொண்டிருந்த அண்ணாவையும் முன்னே ராஜநடை போட்டுச் சென்ற பகுத்தறிவு வேந்தரையும், அவருக்குப் பின்னே ஆயிர மாயிரமாக அணிவகுத்து வந்த பகுத்தறிவியக்கத் தூண்களையும் நாடு முதலிலே கசந்த உள்ளத்தோடு பார்த்து, முடிவாக இனித்த இதயத்தோடு வரவேற்க முயன்று கொண்டிருந்தது. பகுத்தறிவு மலர் பூத்துக் குலுங்கி மணம் வீசிய தமிழகப் பகுதிகளிலே மட்டுமல்லாமல், தென்னகத்தின் மற்ற மற்ற பகுதிகளுக்கும் பகுத்தறிவு மணம் பரவத் துவங்கியது. சிறப்பாகக் குறிப்பிட வேண்டுமானால் ஆந்திரப் பகுதியில் சீர்திருத்தப் புயலைக்கிளப்பி யிருந்த தோழர் ராமசாமி சௌத்ரியின் பெரும்பணியால் ஆந்திரம் அப்போதே நம்மைப்பற்றி புரிந்திருந்தது என்பதாகும். இத்தகைய சீர்திருத்தச் செம்மல் தாகட்லாவிலே மரணமடைந்ததும்

அவரது நினைவு விழாவிலே கலந்திடுவதற்காக வெண்தாடி வேந்தர், அண்ணா உடன் வர ஆந்திரம் போய்ச் சேர்ந்தார். அங்கே சிறப்போடு நடைபெற்ற நினைவு விழாவிலே அண்ணா அழகோடு சுவையோடு ஆங்கிலத்திலே பேசினார், தோழர் செனார்த்நனம் தெலுங்கிலே அதை மொழிபெயர்ப்பு செய்து பேசினார். அண்ணாவின் இலட்சியப் பேச்சிலே நாகட்லாவாசிகள் ராமசாமி சௌத்ரியைக் கண்டனர். நமது வெண்தாடி வேந்தருக்குக்கூட நல்ல நம்பிக்கை பிறந்தது அங்கேதான். அண்ணாவின் ஆற்றல் மிகு திறனை நம்பியே தென்னகத்தின் மற்றைய பகுதிகளிலும் பகுத்தறிவுப் பகலவனின் ஒளி கிளம்பிட வழிவகுக்க முடியுமென்று மகிழ்ந்தார், சமுதாயத்துறையிலே மாற்றம் வேண்டி அண்ணா ஆற்றிவந்த பெரும் பணியினை அரசியல் நடைபாதையிலிருந்து கவனித்து வந்த ஜஸ்டிஸ்டுகளுக்கு நடுக்க மெடுக்கத் துவங்கியது.

விரல் வீங்கியபோது வீணையின் மீது நாட்டம் குறைவது போல, ஜஸ்டிஸ்டுகள் அண்ணாவின் புரட்சி பூத்த இதயத்தைக்கண்டு ஒதுங்க—ஒதுக்க நினைத்தனர். கட்சியின் ஆதிக்க நினைவுபடைத்த மேலிடம் ஏழை எளியவரின் கண்ணீரைத் துடைக்க முடியாத--வைரமோதிரங்களணிந்த விரல்கள் படைத்தோர். புதுமைவிரும்பிய பொதுமக்களிடம் செல்லாக் காசாக இருந்த நிலையினர் அண்ணா பற்றி ஒதுங்க-ஒதுக்க நினைத்த நேரத்திலேதான்......'சேலம் நிகழ்ச்சி' வந்தது, பொறுமைப் புயலும், சுயநலச் சூறுவளியும் நாட்டிலே சுழன்றடித்துக் கொண்டிருந்தது. அல்லலுக்காக அழுத கண்ணீரைத்துடைக்கும் தலைவர்களை நாடு எதிர்நோக்கியிருந்தது. உல்லாசவாசிகளும், ஜரிகைத்தலைப்பாகை சுகவாசிகளும் பட்டம் பதவி என்ற பஜனையையே பஜித்துக் கொண்டிருப்பதை அண்ணா அவர்கள் பார்த்து, வெறுத்து, திருத்தும் முயற்சியிலீடுபட்டு, அந்த முயற்சி கேளாக் காதர்களிடம் கூறப்பட்ட அறமொழி யாகியதை அறிந்து......பின்வாங்கி மக்களைத் திரும்பிப்பார்த்தார். அங்கே அரும்பாக ஆடிக்

கொண்டிருந்த, புதுமை கரும்பாக இனித்துக் கவர்ந்தது அண்ணுவின் இதயத்தை. அப்போதுதான் சேலம்வந்தது. 'நிலையும் நினைப்பும்' சரிகைதலையர்களுக்கு சாதகமாகவில்லை. பட்டம் பதவிகளுக்குப் பல் இளித்துக்கிடந்தோர் பதை பதைக்கும் நிகழ்ச்சி நடந்து முடிந்தது! யாரை ஒதுக்க வேண்டுமென்று நினைத்தார்களோ......அவர்களிடமிருந்து இவர்கள் ஒதுக்கப்பட்டார்கள். பரிதாபத்திற்குரிய முறையிலே' யாரின் கை ஓங்கினுல் தங்களது அந்தஸ்து பாதிக்கப்படுமென்று எண்ணினுர்களோ அந்த சீலர்களின் கை ஓங்கத்தான் செய்தது. அந்த ஓங்கிய கரங்களிலே புதிய கொடியும், அவர்தம் நெஞ்சங்களிலே புதிய கொள்கையும் உருப்பெற்று உரம்பெற்று தலை நீட்டியதை......ஆதிக்க அகராதி தயாரிக்கத் தெரிந்தவர்கள் கண்டு, ஒண்ட சந்து பொந்து தேடினுர். அண்ணுமொழியிலே கூற வேண்டுமானுல் 'மாளிகையிலே இருந்த கட்சி ஆலமரத்தடிக்கு' வந்துசேர்ந்தது. ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தவர்களின் மேனியிலே பளபளப்பும்; உடையிலே மினுமினுப்பும் தலையிலே சரிகைக் குல்லாயுமில்லாவிட்டாலும் உள்ளத்திலே'நல்லதை நினைக்க வேண்டும் நாட்டின் கேடுபாடுகளைத் துரத்த வேண்டுமென்ற' ஜீவ இலட்சியம் பதுங்கிக்கிடந்ததை ஊரார் அறிய காலமதிகமாகவில்லை.

இவர்கள் காலிசெய்த இடத்திலே இன்னமும் இருக்கும் நினைவு கொண்டார்......... 'ஆலமரத்தடிவாசிதள்தானே! அன்னக்காவடிகளால் அரசியல் நடத்தமுடியுமா என்ன? சீமானும், கோமானும், சிற்றரசர்களும், மாமன்னர்களும் பீடம் அமைந்திருக்கும் தம்மைவிட இவர்கள் எந்த வகையிலே பகழ் பெற்றிடப் போகிருர்கள். எண்ணி இருபது நாளிலே இப்படி ஒளி இயக்கங் கண்டமைக்காக வருந்தி வேதனைப்படுவர்'

என்றெல்லாம் கற்பனை செய்துகளித்தனர். அரசியலிலே 'நிலாச்சோறு' வாழ்க்கை நடத்தும் அவர்களின் எண்ணம் பொடிபடும் அளவிலே......தென்னகத்தின் விடுதலைக் குரல்

'திராவிட கழகம்' என்ற பாசறையிலிருந்து ஒலிக்கத் துவங்கியது.

* * *

நாடெங்கும் எழுச்சிக் குரல்!
வீடெங்கும் சுயமரியாதை மணம்!
ஏடெல்லாம் தமிழரின் வீரகாவியம் புகழ்பாடியது.

பழமைப்போக்கினர் ஜீவமரணப் போராட்டத்திலே ஈடு பட்டுக்கொண்டிருந்தனர். நாதன் கட்டளையும், வேத விற்பன்னர்களின் ஞானோபதேசமும் நாட்டு மக்களின் மன மாற்றத்தைத் தடுத்திடவில்லை. உலகாளவந்தவர்கள் ஊளையிட்டுப் பார்த்தனர். அந்த சலசலப்புக்கெல்லாம் யாருமே அஞ்சிப் போகவில்லை. ஊர்பெரியவர்களின் ஐபர்தஸ்தும் உருட்டு விழியும் மிரட்டிடவில்லை. பட்டி தொட்டியெல்லாம், சிற்றூர் பேரூரெல்லாம் இலட்சிய இதயம் படைத்த, இளைஞர்களின் பேரணி பெருகவந்தது. கொள்கை பேசியோர் எண்ணத்தில் வான் நோக்கி தலைநிமிர்ந்து நின்ற கோபுரம் போல வளையாது நின்றனர் கற்று வந்து இடத்திலெல்லாம் கொடி அசைந்தது என்று கூறிடும் அளவிலே கழகக்கொடிகள் பட்டொளி வீசிப் பறக்கத் துவங்கின.

கொள்கை பரவாத இடங்களிலே கொள்கை மணம் பரப்புவதற்காக மாணவ மணிகள் விடுமுறைக் காலத்திலே 'பிரசாரப்பள்ளி, துவக்கியதை பெருமையோடு இங்கு குறிப்பிட்டுத்தானாக வேண்டும். தாயகத்தின் துயர் துடைக்கும் பணியிலே திராவிட மாணவர் படை ஈடுபாடு கொண்ட நிகழ்ச்சி சிறப்புக் குரியதாகும். தெளியாத நெஞ்சங்களைத் தெளிய வைப்பதற்காக இந்த மாமணிகளும் சிற்றூர் பேரூரெல்லாம் அலைந்து திரிந்தனர். அந்தப் பகுத்தறிவு ஜோதி பற்றி எரிந்து கொண்டிருக்கும் முறையிலே கழகத்தின் பிரசார பீரங்கிகளும் சுற்றிச் சுழன்று பாதுகாத்து வந்தன.

ஒளிக்குப்பின்னே......காரிருளிலே இனம் புரியாதவர்கள் பதுங்கிக்கிடந்தனர். திராவிடர் திலகங்கள் தீபஒளி ஏந்தித் திக்கெட்டும் வலம் வந்தபோது இருளிலே பதுங்கியோர், சந்து பொந்திலே ஒதுங்கியோர் ஓலக் குரல் கொடுத்தனர்.

......'பாவத்தின் மொத்த வியாபாரிகளாகிவிட்ட இவர்களைப் பார்க்காதீர்கள் இவர்கள் கடை விரிப்பதைகண்டு யாரும் ஏமாந்து விடாதீர்கள். விடுதலை வீரர்களாக வேஷம் போடும் இவர்கள் கெடுதலை தரும் நாசநேசர்கள் இவர்களின் சொல்லோவியமும், அழகு மிகு எழுத்தோவியங்களும் நரக வாசலுக்கு உங்களை உடனடியாக அழைத்துச்செல்லும் தூதர்களென்பதை எச்சரிக்கிறோம். மகேசனையே சாடும் மதோன் மத்தர்கள் இவர்கள்.''

...என்ற சொல் லம்புகளெல்லாம் தேய்ந்து, கூர்மழுங்கியத போதுதான் சொல்லடியால் பயனில்லை இனி கல்லடியே கருணை காட்டுமென்று நம்பினர் காரிருள் வாசிகள். 'சொல்லடியென்ன, கல்லடி யென்ன கொடுவாளே நீ தூக்கினாலும் தாயகத்தின் மானங்காக்கும் பணியிலே எனது மார்பைக் காட்டத் தயார்' என்று வீரமொழிபேசி நின்ற ஆயிரமாயிரம் கழகக் காளையரை அப்போது தான் அவர்கள் காணமுடிந்தது. காளையர்கள் மட்டுமா? வீராங்கனைகளும், இதே பரணியைத் தான் பாடிக்கொண்டிருந்தனர்.

'' முன் னேறும் தமிழ் மக்கள்
மதத் துறையை நாடி
மூழ்குதலும் வேண்டுமோ
மொழி யேடி ' என் றேன்
முன்னேற்றம் மதஞ்சொன்னார்
இதயம் பூஞ் சோலை ?
மொழிகின்ற இம்மதமோ
அச் சோலை தன்னை

தின்ன வந்த காட்டுத் தீ
என்றுரைத்தாள்......

என்ற புரட்சிக் கவிஞரின் வரிகள் பிறந்தது அப்போது தான். "எவ்வளவு நியாயமான இலட்சியத்தை அடைய வேண்டுமானாலும் அதற்காகக் கஷ்ட நஷ்ட மடைதல் என்னும் விலை கொடுத்தே தீரவேண்டும்'

......என்ற திராவிடர் தலைவரின் வீர முழக்கம் சோர்ந்து போயிருந்த உள்ளங்களையெல்லாம் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தது "சட்டசபை நுழைவு சாரமற்றது; அதிகார பீடம் வெறும் ஆர்ப்பாட்டம்; சர், பகதூர் பட்டங்கள் வெறும் பகல் வேஷம்; மந்திரிப்பதவி முதலியன மாயாஜால அரசியல் வித்தை என்பது அறிந்தோம். மயக்கம் தெளிந்தோம். இவ் உணர்ச்சியற்ற நிலைமையில் இவையாவும் இன்னல் விளைவிப்பவையே என்பது திண்ணம். நம் எதிர்கால வேலை மகத்தானது; மட்டற்றது; மடமையைப் போக்குவது; கடமையைக் கடைப்பிடிக்கச் செய்வது; இன உணர்ச்சி; திராவிடர் நாம் என்ற எழுச்சியை ஏற்படுத்துவதுதான்; திராவிட நாட்டைத் தனி நாடாகக் காண்பதுதான்; இது தான் நம் திட்டம்: குறிக்கோள் நாங்கள் சொல்வதைச் சற்றே கேளுங்கள்! பரிசீலனை செய்து பாருங்கள் பகுத்தறிவுடன்! கூர்ந்து நோக்குங்கள் குறையுளதா என்று! பின்னர் பின்பற்றுங்கள் எம்மை. எம் திட்டத்தை, குறிக்கோளை! எமக்காக அல்ல உங்களுக்காக! எங்கள் நாட்டின், சமுதாயத்தின் உயர்வுக்காக திராவிடத்தின் சீரும் சிறப்பும் ஓங்குவதற்காக; மக்கள் மனம் மகிழ்வதற்காக சமத்துவம் தாண்டவ மாடுவதற்காக அல்லல்கள் அழிந் தொழிவதற்காக; ஏழ்மை போவதற்காக இன்பவாழ்வு வாழ்வதற்காக........என்ற இலட்சியக் குரல் திராவிடர்தம் பெருந் தளபதியாம் அண்ணா அவர்களிடமிருந்து ஒலிக்கத்துவங்கியது.

திராவிடர்தம் அரசியலுக்கு பொருத்த பட்டுப்பீதாம் பரங்களில் ஓரிருவர் சமுதாயத் துறையிலே இயக்கம் பெற்று

வந்த அசைத்திட முடியாத பீடத்தைக்கண்டு ஆவல்கொண்டு அள்ளி அணைத்திட கருத்தறிவித்தனர், குருகுலப் போராட்டத்தை அடுத்து நடந்த நால்வர் சந்திப்பு தென்னகத்திலே பிரசித்தியடைந்து போயிருந்தது. பெரியார்; டாக்டர் வரதராசுலுநாயுடு; திரு. வி. கலியாணசுந்தர முதலியார்; ஆர். கே. சண்முகம் செட்டியார் ஆகியோர் சென்னையில் சந்தித்து சமுதாய சம்பந்தமான எல்லாக் காரியங்களிலும் நால்வரும் இனி ஒன்றுகயிருந்து பணியாற்ற வேண்டுமென்று தீர்மானித் திருந்தனர். அரசியலிலே ஆளுக்கொரு திருப்பத்திலே இருந்தாலும் சமுதாயத் துறையிலே இப்படி ஒரு இணைப்பு இருப்பதன்மூலமாக நாட்டுக்கு நல்லறிவுத் தொண்டாற்ற முடியுமென்று அவர்கள் நம்பினர். 1929 ல் செங்கற்பட்டில் கூடிய மாகாண முதல் சுயமரியாதை மாநாடும், அதற்கு முந்திய ஆண்டு சென்னையில் சீர்திருத்தக் காரர்கள் மாநாடும் நடந்து முடிந்திருந்தது. செங்கற்பட்டிலே பட்டிவீரன் பட்டி ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனும், சென்னையிலே பெரியாரும் தலைமை ஏற்று மாநாட்டை நடத்தித் தந்தனர். அதைத் தொடர்ந்தே 1930-ல் ஈரோட்டில் மகாகனம் ஜெயகர் தலைமையிலும் 1931-ல் விருது நகரில் சர். ஆர். கே. சண்முகம தலைமையிலும் மாநாடுகள் நடந்து முடிந்தன. மக்களின் எழுச்சியோ அளவிட முடியாததாக இருந்தது. ஆனல் இதற்கிடையிலே அண்ணு அவர்களுக்கு ஒரு பலத்த சந்தேகம் கிளம்பியிருந்தது. அரசியலிலே சர் பகதூர்களையும், பட்டுப்பீதாம்பரங்களையும் அகற்ற மறுத்து மாளிகை சுகவாசங்களையே நினைத்திருக்கும் இந்தப் பெரிய மனிதர்களின் சவகாசத்தால் சுயமறியாதைச் சூருவளி திசை மாற்றப்பட்டுவிடுமோவென்று அண்ணு சிந்தித்தார். சென்னையிலே நடந்த நால்வரின் கூட்டு இறுதிவரை இன்பநடை போடுமாவென்று சஞ்சலமடைந்தார். மாநாடுகளிலே வீராவேசத்தோடு பேசுவதோடு தலைவர்களின் பணிமுடிந்தது. அதற்குப் பிறகுதான் புதுப்புது புயல்க ளெல்லாம் சுழன்றடிக்

கத்துவங்கும். வைதீகக் கோட்டையின் பாது காவலர்கள் வெடிகுண்டு வீசத்துவங்குவர். நவசக்தியும், சிவ நேசனும் ஆதிக்க புரியின் பீரங்கிகளாகப் பயன்பட்டன. செந்நாப் புலவர் மறைமலை அடிகளார் 'தமிழ் நாஸ்திக இயக்கம்' என்று வர்ணித்தார். இப்போதுதான் அண்ணா எதிர்பார்த்தது நடந்தது. 'நால்வரின் கூட்டு' நடுத்தெருவுக்கு வந்து சிரித்தது. பெரியாரைத் தனியாக்கிவிட்டு மற்ற மூவரும் வைதீகக்கோட்டையை எதிர்க்கும் பலமற்று புராண மதிப்பினரிடையே அடிபணியத் துவங்கினர். அப்போதுதான் அண்ணா மிகுந்த விழிப்புணர்ச்சியோடு, பெரியாரின் நிழலாக நின்று எதிர்வாதங்களுக்கெல்லாம் சரியான கசையடி கொடுக்கும் முறையிலே எழுதியும், பேசியும் வரத் துவங்கினார். சுயமரியாதை இயக்கத்தின் தாயென்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட திரு. வி. க. நவசக்தி மூலமாக சாடிவந்தார். டாக்டர் வரதராஜுலு நாயுடு முழுக்க முழுக்க வைதீகபுரியின் காரக்கிருஹத்திலே விழுந்து கிடந்தார். சர். சண்முகம் தைரியத்தோடு கொஞ்ச தூரம் முன்னேறி வந்தாலும் இடையே பயணத்தின் அலுப்பால் வேறு பாதையிலே கால் வைத்துக் கொண்டார். யாருக்குமே வளையாத பெரியார் இந்த நிகழ்ச்சிகண்டு தலைசாயத்தான் செய்தார். அண்ணா அவர்களோ தளபதி என்ற காரணச் சிறப்பு மிளிர நெஞ்சுயர்ந்து......"வைதீக விற்பன்னர்கள் நம்மோடு துணைவருபவர்களையே வெட்டிப்பிரித்துக்கொள்ளும் வலிவுபடைத்தவர்கள். பகுத்தறிவு பிரசாரகர்களாகிய நாம் எதையுந்தாங்கும் இதயம் படைத்தோரின் மாசற்ற அணியையே இனி திரட்டியாக வேண்டும்......"என்ற கருத்துப் படபேசி உள்ள உறுதி படைத்தோரை கழகத்தின் கண்மணிகளாக்கிக்கொண்டிருந்தார்.

பெரியாரைப் பிரிந்த திரு. வி. க. வும், வரதராஜுலுவும், சண்முகமும் அண்ணாவின் சுடுமொழியைக் கேட்டுத்தான் தங்களின் இழிந்த போக்கை மீண்டும் நினைவிற்கு கொண்டு

வந்து வெளியே காட்டிக் கொள்ள முடியாத முறையிலே வேதனைப்பட்டு வந்தனர். அண்ணா பிரிந்தவர்கள் குறித்து பரிதாபப்பட்டதோடு, சேலத்திலே. திராவிடர் கழகமாக புதிய உருவெடுத்து வளர்ந்த போதுகூட கண்ணிய மிகக்கொண்டு இவர்களின் போக்குகளுக்காக வாதாடியிருக்கிறார். கனடா நாட்டிலே ஆட்டவா என்ற நகரில் நடைபெற்ற பொருளாதார மாநாட்டிற்கு இந்தியப் பிரதிநிதியாகச் சென்ற சர். ஆர். கே. சண்முகத்தை பிரிட்டிஷாரின் கைக்கூலி என்று கேலிசெய்து எழுதியதேசீய ஏடுகளுக்கு அண்ணாதான் சரியான சவுக்கடி கொடுத்தார். ஆட்டாவாவுக்கு அடுத்து, அமெரிக்கா குடியாட்சித் தலைவர் ரூஸ்வெல்ட் வாஷிங்டன் நகரிலே உலக நாணயத் திட்ட மாநாடு கூட்டினார். இந்த மாநாட்டிலும் சர். சண்முகம் கலந்து கொள்வதாக இருந்தது அது போது ......சர். சண்முகம் அவர்கள் கோவையிலே

... ...“அந்த நாளிலே ஆட்டவாவிலே நான் நாட்டுக்குக் கேடு செய்தேன் என்று நாப்பறை அறைந்தனர் அதனை எண்ணும்போது, மறுபடியும் ஒரு மாநாட்டுக்குச் செல்ல வேண்டி இருக்கிறதே என்னென்ன பழிச்சொல் வருமோ என்று எண்ணி நடுங்க வேண்டியிருக்கிறது” என்று இது போல அவலக் குரல் கொடுத்தார்கள். அறிஞரின் அவலக் குரல் கேட்ட அண்ணா அபயமளிப்பது போல தமது,

ஏட்டிலே...“பாரிஸ்பவுடரும், மான்செஸ்டர் மஸ்லீனும், ஈஜிப்ட் சுருட்டும், இலண்டன் சரக்குகளும் பெறுவதற்கு, பிரிட்டன், இந்தியாவுக்குத் தரவேண்டிய கடனை செலவிட்டால், மகத்தான கேடுதான், எனவே பிரிட்டன் இந்தியாருக்குச் சேரவேண்டிய 1500 கோடி ரூபாய்க்கும்; உயர்தரமான தொழில் வளத்தைத் தரக்கூடிய இயந்திர சாதனங்களும் விஞ்ஞானப் பொருள்களும் பெற வேண்டும். இதற்கான முறையைச் சர். சண்முகம், வாஷிங்டனில் எடுத்துரைக்க வேண்டும் அதுமட்டும் போதாது எங்ஙனம், உலக அமைப்பிலே ஒரு நாடு தொழில் வளத்திலே மிகமிக முன்னேறி மற்ற நாடுகள் முன்னேறாதிருப்பது கஷ்டநஷ்டம் தருகிறதோ,

அதுபோலவே உபகண்டமாகிய இந்தியாவை, ஒரேநாடு என்று பிடிவாதமாகப் பேசிக்கொண்டு, வடநாடு வளமாகிக் கொண்டே வரவும், தென்பகுதி அதன் மார்க்கெட்டாகவுமான நிலைமை இன்று இருக்கிறதே இது ஒழிய வேண்டும். திராவிடத்தின் இயற்கை வளமும், தொழில் திறமும் மாற்றுந்தாயிடம் சிக்கிய மக்கள் போன்று இருத்தலைச் சர். சண்முகம் அறியாதவரல்ல. அந்த நெஞ்சு நோகும் நிலையை உணர்ந்து, இந்தியாவிலே தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் தயாரிக்கப்படும் போது, திராவிட நாட்டின் தனி நிலைமை நன்கு கவனித்து, இங்கு தொழில் வளம் பெருக வழிவகை செய்யவேண்டும். இதனைச் சர். சண்முகம்செய்யாது இருப்பின், வேறு யாரிருக்கிறார்கள் செய்திட ! வாஷிங்டனில் சர், சண்முகம் வாடிக்கிடக்கும் திராவிட இனத்தின் விடுதலைக்கான விதத்திலே நடந்து கொள்ளவேண்டுகிறோம்.''

''என்று எழுதி சண்முகத்தின் கடமையைப் பரிவோடு சுட்டிக்காட்டியதோடு, அதைரியப்பட்ட அறிஞர் பெருமகனுக்கு நெஞ்சுரமும் ஊட்டினார். சர். சி. பி. போன்றவர்கள் வைதீகக் கோட்டையிலிருந்து வரிந்து கட்டி நின்றபோது, அண்ணா தனது பேனாமுனையின் துணைகொண்டே அவர்களையெல்லாம் சந்தித்தார். அப்போது திருவாங்கூர் திவானாக இருந்த சர். சி. பி. அம்பேத்கார் கூறியிருந்த மூட நம்பிக்கை ஒழிப்புக்களை கருத்தை கண்ணைமூடிக்கொண்டு எதிர்த்துவந்தார். அம்பேத்காரின் அறவழிக் கொள்கைகளை ஆதரித்து லிபரேட்டில் தோழர் ராமநாதன் எழுதியிருந்தார். அவரது அரியகட்டுரையிலே......'' பகுத்தறிவாளன் படாத பாடுபட்டிருக்கிறான் இந்நாட்டிலே, சமணர்களைச் சித்திர வதை புரிந்தனர், கழு வேற்றினர். சகலரும் சமம் என்ற சித்தாந்தத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கிய இராமானுஜரை வைதீகம் பணிய வைத்துவிட்டது. நந்தனைத் தீயிலே தள்ளிச் சாகடித்து, ஜோதியிலே கலந்தான் என்று புரட்டுவரை புகன்றது, என்று குறிப்பிட்டு வாதம் பேசவந்த

சி. பி. யின் வாயடைத்தார். அப்போது அண்ணுவும் கருத்து மிகுந்த தலையங்கம் தீட்டி மக்களின் உள்ளங்களைக் கவர்ந் திருந்தார். மகாராஜாக்களும் அவர்களுக்கு துந்துபி முழக்கிய திவான்களும் ஒருபக்கம், மறுபக்கத்திலே அன்னக் காவடிகள்—மாளிகை அகாரதிப்படி கஞ்சிக்கலயம் தாங்கிய வர்கள் சீமைச்சரக்கை ஏந்தி நின்றவர்களின் முன்னே நின்றனர். உலகாள வந்த மகாராஜாக்களின் கூருட்டு விழி உரிமையை முழக்கிய பட்டாள வரிசையை வென்றுவிட வில்லை. பெரியாரின் சிந்தையையே இதுமாதிரியான நிகழ்ச்சி கலக்கத் துவங்கியது. அண்ணுவின் பிரசாரமுறை புதிய வேகத்தையும் அளவிட முடியாத அணி வகுப்பையுந் தரத் துவங்கியதைக்கண்டு வெண்தாடி வேந்தரே பல முறை அசந்து போனுர். சாமானியர்களால் எத்தனை சக்தி படைத் தவர்களை எதிர்த்து வெற்றி கண்டு விடமுடிகிற தென்று மகிழ்ந்தார் பெரியார். ஆனுல் அந்தமகிழ்ச்சியை அவர் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. காரணம்......அந்த மகிழ்ச்சியின் அரும்பு அண்ணுவின் அருமுயற்சியாலல்லவா உருவாகியிருக்கிறது......என்ற சஞ்சலம் தான்.

தான் பச்சையாக சொல்லிவரும் கருத்துக்கு நாட்டிலே உடனேகிளம்பும் எதிர்ப்புக்கும் அண்ணு அதே தலைவரின் கருத்தை அழகுபட எடுத்துச் சொல்லி பெற்று வரும் வெற்றி யையுங்காணும் போது சாதாரண மனித உள்ளம் புகையத் தானே செய்யும். ஆனுல் அரசியலிலே பெரியவராக்கப் பட்ட வெண்தாடி வேந்தருக்கும் அந்தப்புகையும் இதயம் இருந்தது. எதிர்கால அரசியல் வானிலே வீசப்போகும் பெரு மழையையும் பேரிடியையும் முன்னரே அறிவிப்பதாக அமைந்தது. அழிய வேண்டிய கருத்து அணையாமலே எங்கோ ஒரு மூலையிலே தள்ளப்பட்டிருந்தது.

தேவையில்லாத பயமும் கருத்தும் கட்சித்தலைவரின் இதயத்திலே கருத்தைப் பரப்பிய போது......நாட்டுக்குத் தேவையான செயல் முறைகளிலே அண்ணு ஈடுபாடு கொண்

டிருந்தார். காஞ்சி 'திராவிடநாடு' அலுவலகத்திலிருந்து கிளம்பிய சிறுபொறி பெரு நெருப்பாகி ஆதிக்கவாதிகளின் அக்ரமக் கோட்டையிலே பற்றி எரிந்து கொண்டிருந்தது

கேலி, கிண்டல், ஏசல், தூற்றல், அலட்சியம் இவை யெல்லாம் மீறிய அவமதிப்பு ஆகியவைகளையெல்லாம் தாங்கிக் கொண்டு நாடெங்கும் பவனி வந்தார் அண்ணா. தலைவரின் கோபதாபங்களுக்கே அவர் கலங்கவில்லை என்ற போது வேறு எதற்காகத்தான், யாருக்காகத்தான் வேதனை கொண்டு விடப் போகிறார். அதிலும், குறிப்பாக தனது பாதையும் பயணமும் எத்தகையதென்பதை அறியாதவரல்லவே. தனது அரசியல் பாதை துவங்கியபோது எப்படிப்பட்டச் சூழ்நிலை நாட்டிலே யிருந்துவந்தது என்பதை நன்றாகப் புரிந்தவராயிற்றே !

அண்ணாவின் அரசியல் பிரவேசமான 1934-ல் அவர் விரும்பி அடியெடுத்து வைந்த ஜஸ்டிஸ் கட்சியின் நிலையில் தேக்க நிலைமையிருந்ததை அங்கே நுழைந்ததுமே புரிந்து கொண்டார். டாக்டர் நாயரும், தியாகராயரும் இப்போது பளபளப்புக் குறைந்தது கவர்ச்சியிழந்து காட்சிதருவானேன் என்று சிந்தனையிலே ஆழ்கினார். கண்டவரின் கருத்தை யெல்லாம் கட்டிப் பிடித்திழுக்கும் காந்த சக்திபெற்ற இயக்கம் இப்படிப் பொலிவிழந்து வருவானேன் ? அண்ணா நல்ல முடிவைத் தேடினார். விடை தேடும் முயற்சியில் அவர் ஈடுபாடு கொண்டபோது......அண்ணாவின் எண்ணக் கண்ணோட்டம் பழைய நிகழ்ச்சிகளை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தது

தேசீய கொள்கை கோட்பாடுகளின் முரசமாக சிறந்த காங்கிரஸ் கட்சியைத் திலகர் தலைமையில் திரண்ட தேசபக்த திருக்கூட்டத்தினர் 1907-ல் சூரத்தில் கைப்பற்றும் முயற்சி யில் முயன்று நின்றனர். சுதந்திரத்தின் பிறப்புரிமை பிரகடனப் படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்தே 1915-ம் ஆண்டு செப்டம்பர் 25-ம் நாள் தோழியர் அன்னி பெசன்ட் துவக்கிய 'ஹோம்ரூல்' இயக்கம் பிரசித்தியடைந்தது 'ஹோம்ரூல்' இயக்கத்தில் பார்ப்பனல்லாதாருக்கு அதி

முக்கியத்துவமில்லாமலிருந்து வந்தது. திலகர் தலைமையில் திரண்டு சூரத்தில் கைப்பற்ற முயன்ற காங்கிரஸ் இயக்கத்திலும், தோழியர் அன்னிபெஸன்ட்கண்ட 'ஹோம்ரூல்' இயக்கத்திலும் பார்ப்பனரல்லாத மக்களுக்கு செல்வாக்கில்லாதிருப்பதைக் கண்ட, தென்னிந்திய நல உரிமையில் நாட்டங்கொண்ட தலைவர்கள் 1916-நவம்பரில் சென்னையில் கூடி தென்னிந்திய நல உரிமைச சங்கம் என்ற பெயரால் பேரியக்கமொன்று கண்டனர்,

ஈடும் இணையுமற்ற தென்னகத் தலைவர்களான சர். தியாகராயர்; டாக்டர் டி. எம். நாயர்; டாக்டர் நடேச முதலியார்; சர். பி. டி. ராஜன்; சர். ஏ. இராமசாமி முதலியார்; சர். ஏ. டி. பன்னீர்ச்செல்வம்; உமா மகேசுவரம் பிள்ளை ஆகியோர் முன் கரம் எடுத்து நின்று, தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் அரும்பெரும் வளர்ச்சிக்காக நாடு நகரெங்கும் பவனி வநதனர்.

தேசீய முரசொலித்தோர், ஹோம்ரூல்' பாதையிலே இருந்தோர், இன உணர்ச்சி கொண்ட தென்னவர் படை வரிசை கண்டு அதிர்ச்சியடைந்தனர். தென்னக அரசியல் வாழ்விலே யாரார் உயர்ந்திருந்தார்களோ அந்த அத்தனைபேரும் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தில் முக்கிய அங்கம் வகித்திருப்பதை மாற்ருர் கண்டு மனம் மிக மருண்டனர். அப்போதைய தேசீயத்தார் தாங்கள் கொண்ட கொள்கையினை ஊராருக்குத் தெரிவிக்கும் முறையிலே மூலைக்கொரு ஏடு துவக்கியருந்தனர். அந்த ஏடுகள் அவர்தம் இதய முரசொலியை ஊரெங்கும் எதிரொலித்து வந்தன. தென்னவர் தலைவர்கள் தங்களது கருத்தையும் நாட்டு மக்களிடையே பரப்புவதற்காக நல்லதொரு முடிவெடுத்து, ஜஸ்டிஸ் என்ற பெயருடன் ஓர் ஆங்கில தின ஏடு துவக்கினர். அந்த ஆங்கில தினசரிக்குத் தனது எழில்சிந்தும் ஆணித்தரமான எழுத்தோவியங்களால் தென்னவரைக் கவர்ந்திருந்த திரு டாக்டர் டி. எம். நாயர் ஆசிரியராக பணியாற்றத் துவங்கினர். அவரோடு இணைந்து பி. என். இராமன் பிள்ளையும் அந்த ஆங்கில தினசரியில் பணியாற்றி

வந்தார். அப்போது தேன் தமிழிலும் 'திராவிடன்' என்னும் பெயருடன் ஒரு தமிழ்த் தினசரியும் துவக்கினர். திரு. பக்த வத்சலம் பி. ஏ. ஆசிரியாகவும்; சுவாமி ருத்ர கோடீஸ்வரரை யும் பண்டித விஸ்வபதி ரெட்டியாரையும் இணையாசிரியர்களா கவும் அமர்த்தியிருந்தனர். ஆங்கிலம் தெரிந்த மக்களிடையே ஜஸ்டிஸ' இதழும், தமிழறிந்தவர்களிடையே 'திராவிடன்' ஏடும் தென்னிந்தியரின் நல உரிமை குறித்து எழுச்சிக் குரல் கிளப்பியதோடு, 'ஆந்திர பிரகாசினி' என்ற தெலுங்கு ஏட்டின் மூலமாகவும் இயக்கப் பிரசாரததைத் துவக்கியிருந்தனர். ஆந்திரத் தோழர் ஆ. சி. பார்த்தசாரதி நாயுடு, 'ஆந்திர பிரகாசினி'க்கு ஆசிரியர் பதவி ஏற்று அழகுடன் நடத்தி வந்தார்.

இந்த மூன்று தினசரி இதழ்களுமே தென்னவரின் பிரச் சினைகளை அகிலத்துக்கு எடுத்துச் சொல்வதிலும், அவர்தம் கேடுபாடுகளுக்கு வழிதேடுவதிலும் முன்னணியில் நின்றன. அந்த ஏடுகளைப் படிக்காதவர்கள் இல்லை, பாராட்டாதவர் களில்லை என்ற அளவில் நாளடைவிலே செல்வாக்குப் பரவி யது. தமிழறிதவரெல்லாம் 'திராவிடனை' அறிந்தனர் தெலுங்கு படித்தோரெல்லாம் 'ஆந்திரப்' பிரகாசினி'யைத் தெரிந்தனர். உலகப் பொது மொழியாம் ஆங்கிலம் கற்றோ ரெல்லாம் 'ஜஸ்டிஸை'ப் புரிந்தனர் இந்தப் துணைக்கண்டத் திலே மட்டுமல்லாமல் வேறு பல மேலை நாடுகளிலும் குறிப்பாக கவும் சிறப்பாகவும் ,ஜஸ்டிஸ்' தினசரிக்கு அகற்ற முடியாத ஆதரவிருந்ததை யாராலும் மறுத்திட முடியாததாகும்.

'ஜஸ்டிஸ்' அடைந்து வந்த புகழால் — அது சொல்லி வந்த கருத்தால் — நாயரின் எழுத்தால் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற அமைப்புக்கூட 'ஜஸ்டிஸ்' கட்சி என்ற பெயரிலேயே பொது மக்களால் அழைக்கப்பட்டு வந்தது. இந்தக் கருத்துத்தான் கட்சியின் வளர்ச்சியின்போது உறுதி யாக்கப் பட்டது.

கட்சியின் வளர்ச்சி குறித்து 'ஜஸ்டிஸ்' துவக்கப்பட்டது பிறகோ பத்திரிகையின் பெயராலேயே கட்சி அழைக்கப்

பட்டது. இந்த நிகழ்ச்சி யொன்றே போதுமானதாகும். 'ஜஸ்டிஸ்' இதழ் மக்களிடையே பெற்றிருந்த சிறப்பை விளக்குவதற்கு !

1915-டிசம்பரில் 'ஜஸ்டிஸ்' கட்சியின் முதல் காரியதரிசி என்ற முறையில் வெள்ளுடை வேந்தரான சர். தியாகராயர் நாட்டு மக்களின் கருத்தைக் கவரும் விதத்தில் புதிய எழுச்சி தரும் அறிக்கையொன்றை வெளியிட்டார்.

பார்ப்பனரல்லாதாரின் இன நலன் குறித்து முந்திய காலங்களைவிட அதிகம் பாடுபவதென்றும்; பார்ப்பனரல்லாதாருக்கு முக்யத்துவமோ சிறப்போ அளித்திட முடியாத தேசியஇயக்கங்களை தத்துவரீதியாக எதிர்த்து வெற்றி காண்பதென்றும், இந்த முயற்சியில் ஏற்படும் எதிர்ப்புகளை லாவகமாக சமாளிப்பதென்றும் அந்த வெள்ளுடை வேந்தரின் அறிக்கை கூறியது.

அந்த அறிக்கை வெளியாகிய உடனேயே பார்ப்பனரல்லாதாரின் பேரணி கண்டு வைதீகபுரியும், தேசிய பாரம்பரியமும் எதிர்பார்த்ததற்கு அதிகமான எதிர்ப்பைக் கிளம்பியது. ஆண்ட இனத்தைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் அரசியலிலே நிலையான இடத்தைப் பிடிக்க ஆவன புரிந்து வருகிறோம் சூது வழியினரே சூழ்ச்சி மார்க்கத்தினரே சற்றே ஒதுங்கி நில்லுங்கள்' என்ற ஜஸ்டிஸ் தலைவர்களின் சங்கநாதம் கிண்டலுக்குரிய தாக்கப்பட்டது தேசீய தப்பட்டையினரால்.

இந்தியாவின் வைசிராயாகயிருந்த ஜேம்ஸ் போர்ட் பிரபுவும், இந்தியா மந்திரி மாண்டேகு பிரபுவும் 1917-டிசம்பர் 24-ல் சென்னை வந்தபோது ஜஸ்டிஸ் கட்சியினர் நாட்டு நிலையை விளக்கி அவர்களிடம் நீண்டதோர் அறிக்கையைத் தந்தனர். 'ஹோம்ரூல்' இயக்கத்தினரும் வைசிராயிடமும்' மந்திரியிடமும் ஓர் அறிக்கை தெளிவற்ற முறையிலே தயாரித்து சமர்ப்பித்தனர். ஹோம்ரூல் இயக்கத்தினரின் பாதகமான அறிக்கையையும், ஜஸ்டிஸ் கட்சியினரின் நீதித் தெளிவான கோரிக்கையையும் கவனித்தறிந்தனர் பிரிட்டிஷ் அரசியல்

மேதைகள். ஜஸ்டிஸ் கட்சியினர் சமர்ப்பித்த நெடு அறிக்கையே வைசிராய் குழுவின் அனுதாபத்தைப் பெற்றது: அதற்குப் பின்னர்தான் தேசீய தலைமைப் பீடத்துக்கு நீதிக் கட்சியினரின் ஆற்றல் புரிந்தது. ஆற்றல்மிகு மறவர்களும், அரசியல் மேதைகளும் நிறைந்த மாபெரும் இயக்கமென்பதை உறுதிபடுத்தி நீதிக்கட்சியின் நிழலிலே மக்களணி திரளும் சூழ் நிலை உருவாகியது.

அதன்பிறகு ஜஸ்டிஸ் கட்சியின் மாவட்ட மாநாடுகள் தொடர்ந்து முறைப்படி நடைபெறத் துவங்கின.

1917-ல் ஆகஸ்ட்டுத் திங்கள் 19-ஆம் நாள் கோயமுத்தூரில் பனகல் அரசர் தலைமையில் மாநாடு சீரும் சிறப்போடும் நடைபெற்றது தென்னகமக்களின் போர்ச் சங்கநாதமாக அந்த மாநாட்டில் தீர்மானங்களிருப்பதை அரசு கண்டது. அதே ஆண்டு அக்டோபர் திங்கள் 27—28 நாட்களில் கோதாவரி மாவட்ட மாநாடு பிக்காவோயில் நடைபெற்றது. எழுச்சி கூட்டி, எழுச்சிதந்த அந்த மாவட்ட மாநாட்டிற்கு செல்லப்பள்ளி ராஜா தலைமை வகித்து நாட்டுக்குத் தேவையான நல்ல பல தீர்மானங்களை நிறைவேற்றித் தந்தார். நவம்பர் 3 — 4 நாட்களில் ராயலசீமா புலிவெந்தலாவில் பாரிஸ்டர் கே சுப்பாரெட்டு தலைமையில் நடைபெற்ற மாநாடும், அதே திங்கள் 11—12 தேதிகளில் பெஜவாடாவில் சர். பி. தியாகராயர் தலைமையில் நடைபெற்ற மாநாடும், டிசம்பர் 9-ம்நாள் புதுக்கோட்டை அரசிளங்குமாரர் கே. எஸ். துரைராஜ் தலைமையில் சேலம் நகரில் நடைபெற்ற மாநாடும், தென்னக மக்களின் உள்ளத்திலே புத்துணர்ச்சியை ஏற்படுத்தி வைத்தது. அந்த உணர்ச்சிக் கலவை புதுவழியனருகே மக்களை திருத்தியபோதுதான் ஜஸ்டிஸ் கட்சியின் முதல் மாகாண மாநாடு வந்து சேர்ந்தது. தேசீயத்தார் கலங்கிடும் அளவிலே தென்னகத்தார் களித்திடும் முறையிலே மாநில மாநாடு சென்னை வெலிங்டன் தியேட்டரிலே நடந்து முடிந்தது. மாநாட்டுக்கு வெங்கடகிரி அரசர் தலைமை ஏற்றார்.

மாவட்ட, மாநில மாநாட்டுக்குப் பின்னர் ஏற்பட்ட நிலைமை தேசியத்தாருக்கு பாதகமளிக்கும் முறையிலிருப்பதை அறிந்த தீவிர தேசியவாதிகள் முழு மூச்சோடு எதிர்ப்பை அள்ளி வீசத் துவங்கினர். தோழர்களை கஸ்தூரி ரங்க அய்யங்கார்; ரங்கசாமி அய்யங்கார் ; கோவிந்தராசய்யர்; கருணாகர மேனன், திவான் பகதூர் பி. கேசவ பிள்ளை முதலியோர் தீவிர எதிர்ப்புப் பிரசாரத்தில் தங்களை ஈடுபடுத்தி முடிவில் மூக்கறு பட்டு மூலையிலே ஒதுங்கினர். பெருகி வந்த ஆதரவுப் பெரு வெள்ளம் நீதிக்கு எதிர்ப்புக் காட்டியோரை அடித்தே சென்று விட்டது.

அந்த நேரத்தில் இரவு பகல் பாராது கட்சித் தொண்டாற்றிக் கொண்டிருந்த அரும்பெருந் தலைவர் டாக்டர் நாயர் உடல் நலிவுற்று லண்டன் புறப்பட்டார். லண்டன் சேர்வதற்கு முன்பு கட்சிப் பொறுப்பை அவரது நிழலாக பணியாற்றி வந்த டாக்டர் நடேச முதலியாரிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றார். லண்டனிலே இருந்தபோது டாக்டர் நாயர்...தென்னிந்தியா நல உரிமை குறித்து—அவர் தம் கோரிக்கை குறித்து பலமேடைகளிலே குறிப்பிட்டார்கள். தென்னவரின் குரல் கடல் கடந்து ஒலித்தது. சிறிது நலம் பெற்றதும் இடையே சென்னை திரும்பி தலைவர்களுக்கான வேலைத் திட்டத்தைக் கொடுத்து உற்சாகப்படுத்திவிட்டு மீண்டும் லண்டன் சென்ற தென்னகத்தின் விடிவெள்ளி தென்னகம் திரும்பாமலே 1919 ஜூலை 17ல் உயிர் நீர்த்தார். சொந்த மண்ணுக்கு உரிமை கொண்டாடிய உத்தமர் அந்த மண்ணைக்கூட மிதிக்காமலே கடலுக்கப்பால் கண்களை மூடிக்கொண்ட நிகழ்ச்சி தென்னக மக்களை கண்ணீர் வடிக்கச் செய்தது. ஒரு மலரை இழந்தது பூங்கொடி. சிங்கமுகத் தலைவனை இழந்து தவித்தது நீதி இயக்கம்.

அதை அடுத்த ஆண்டு, மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் இந்தியாவுக்கு வழங்கப்பட்டு' அதன்படி 20-11-1920ல், முதல் பொதுத் தேர்தல் நடந்தது. பொதுத் தேர்தலில் ஈடுபடும் தகுதி பெற்றிருந்ததால் ஜஸ்டிஸ் கட்சி

தேர்தல் களத்தில் குதிக்கத் தயாராகியது. ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்து பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றுவிட தோழியர் அன்னி பெஸன்டின் 'ஹோம் ரூல்' இயக்கம் முயன்றது அப்போது தேசீய இயக்கமான காங்கிரஸை காந்தியடிகள் கைப்பற்றி விட்டதால் அவ்வளவு செல்வாக்குப் பெற்றிடாத காரணத்தால் காங்கிரஸ் தேர்தலிலே போட்டியிடவில்லை. ஹோம் ரூலின் குறிப்பிய கொள்கை பிடிபடாத மக்கள் தென்னாட்டிலே பேரியக்கமாக பவனி வந்த ஜஸ்டிஸ் கட்சிக்கே பெரும்பான்மையான வாக்குகளை அளித்து பொதுத் தேர்தலிலே வெற்றியடையும்படி செய்தனர்.

பெருவாரியான ஸ்தானங்களை ஜஸ்டிஸ் கட்சி கைப்பற்றியதும், அப்போதைய கவர்னராகயிருந்த வெலிங்டன் கட்சித் தலைவரான சர். தியாகராயரை அழைத்து மந்திரிசபை அமைக்கும்படி வேண்டினார்; ஆனால், தென்னகத் தலைவர் தியாகராயரோ விழுந்தடித்துக் கொண்டு பதவி பீடத்தைத் தேடி ஓடி வரவில்லை. ஆர அமர்ந்து சிந்தித்தார். பிறகு கவர்னருக்குத் தெரிவித்தார் ; தான் முதன் மந்திரி பதவி வகிக்க முடியாதென்பதை விளக்கிவிட்டு திரு. ஏ. சுப்பராயலு ரெட்டியாரை தேர்ந்தெடுத்து சிபாரிசும் செய்தார். அதன்படி சுப்பராயலு ரெட்டியார் முதன் மந்திரியாகவும், பனகல் அரசர் இரண்டாவது மந்திரியாகவும், கே. வி. ரெட்டி மூன்றாவது மந்திரியாகவும் கவர்னரால் நியமிக்கப்பெற்று ஜஸ்டிஸ் கட்சி மந்திரி சபை அமைத்தது. முதன்முதலாக சென்னையிலே ஏற்படுத்தப்பட்ட மக்கள் மந்திரி சபை இதுதான். இந்த மூன்றாவது மாநில சுயாட்சிச் சட்டசபையை 1921 ஜனவரி திங்கள் 12ம் நாள் கானாட்டுக் கோமகன் துவக்கி வைத்தார்,

முதன் மந்திரி பதவி ஏற்ற ஓராண்டு காலத்துக்குள்ளேயே திரு. சுப்பராயலுவின் உடல்நிலை சீர்கெட்டு வேதனைக்குரிய முறையிலே கட்சித் தோழர்களையும், பொது மக்களையும் கண் கலங்க வைத்துவிட்டு அவர் கண்களை மூடினார். திரு. சுப்ப

ராயலுவின் மறைவிற்குப் பிறகு, பனகல் அரசர் முதன் மந்திரி பதவியை ஏற்ருர்-சர் கே. வி. ரெட்டி, சர். ஏ. பி. பாத்ரோ ஆகியோர் முறையே இரண்டாவது, மூன்ருவது மந்திரிகளாகப் பதவி பீடமேறினர்.

1923-நவம்பரில் இரண்டாவது பொதுத்தேர்தல் வந்தது இந்தத் தேர்தலிலும் ஜஸ்டிஸ் கட்சியே வெற்றி முழக்கத்தோடு ஆளும் பீடத்தைப் பிடித்தது. மூன்ருண்டு காலமாக நடத்தி வந்த ஆட்சித் திறனுக்கு மேலும் மேலும் ஆதரவு தரும் முறையிலேதான். 1923ல் நடைபெற்ற இரண்டாவது தேர்தலிலும் ஜஸ்டிஸ் கட்சியையே ஆளும் பீடத்துக்கு அனுப்பித் தந்து மக்கள் மகிழ்ந்தனர். இந்த முறை கட்சியின் தலைவர் பொது மக்களால் பெரிதும் வற்புறுத்தப்பட்டு வந்தவரையே முதன் மந்திரி பதவிக்கு ஏற்றுக்கொண்டார் முந்திய மந்திரி சபையிலே சிறப்புப் பெற்றிருந்த பனகல் அரசர், திவான்பகதூர் சிவ ஞானம் பிள்ளை, ஏ. பி. பாத்ரோ ஆகியோர் மந்திரி சபை அமைத்துப் பணியாற்றத் துவங்கினர்.

1925-ம் ஆண்டு ஜஸ்டிஸ் கட்சியினருக்குப் பேரிடியாக மலர்ந்தது ; பதவி விரும்பாப் பிறவித் தலைவனை, வெள்ளுடை வேந்தனை, சீர்திருத்தச் சிங்கத்தைக் காலப்பாம்பு கொத்தித் தீர்த்தது 'திராவிடர் திலகம் தியாகராயர் ' என்று மகுடமிட்டு அண்ணு அவர்களால் நெஞ்சிலே பீடம் அமைத்த ஆற்றல்மிகு மேதை செயல் வீரர்களின் உள்ளங்களிலெல்லாம் வேதனைப் புயல் வீசச் செய்துவிட்டு வாழ்வுப் பேரேட்டை முடித்துக் கொண்டார். கால வேகத்திலே அந்த சோக மேகத்தின் இருட் திரையை விலக்கிடும் முறையிலே பனகல் அரசர் கட்சித் தலைமை ஏற்ருர்.

திரு. பனகல் அரசர் கட்சித் தலைமை ஏற்ற பிறகு 3-வது பொதுத்தேர்தல் வந்து சேர்ந்தது. சுயராஜ்ஜியக் கட்சி என்ற பெயரால் காங்கிரஸ் தேர்தல் களத்தில் குறித்தது. தோழர் எஸ். சீனுவாச அய்யங்கார் சுயராஜ்ஜியக் கட்சியின் வெற்றிக் காக அல்லும் பகலும் பாடுபட்டார். அவரது முயற்சியும்

தேசீய வாதிகளின் சலசலப்பும் வீண் போகவில்லை ஜஸ்டிஸ் கட்சியினரின் மெஜாரிட்டியை அவர்களால் தீவிரப் பிரசாரத்திற்குப் பிறகு குறைக்க முடிந்தது. மெஜாரிட்டி குறைக்கப்பட்ட ஜஸ்டிஸ் கட்சி உதிரிகளை நாடிச் சென்று மந்திரி சபைக்காக பேரம் பேசவில்லை. காங்கிரஸ் கட்சியோ பதவி ஏற்கும் திறமையில்லாமலிருந்து வந்தது. பல திங்களுக்குப் பிறகு டாக்டர் சுப்பராயன் மந்திரிசபை அமைக்க முன்வந்தார். சுயராஜ்ஜியக் கட்சியின் துரோக விதை அரும்பாகி மலராகிக் கூத்தாடத் துவங்கியது. தேசீய வேடம் போட்டவர்களின்— விபரீதப் பிரசாரத்தால் வெற்றி பெற்றேர், பெற்ற வெற்றியினை நினைந்து பெருமிதம் கொண்டிருந்தபோது, ஜஸ்டிஸ் கட்சியின் தலைமைப் பீடம் கட்சியின் வீழ்ச்சிக்கான காரணங்களைத் தத்துவரீதியாக ஆராய்ந்து கொண்டிருந்தது அதன் விளைவாக கட்சியிலே புதிய வேகம் தேங்கியது. 'ஜஸ்டிஸ்' இதழின் ஆசிரியராக சர். ஏ. ராமசாமி முதலியாரும் துணை ஆசிரியராக திரு. டி. ஏ. வி. நாதனும் அமர்த்தப்பட்டனர். 'திராவிடன்' இதழுக்கு திரு. கண்ணப்பரும், பு. செல்வராஜனும் அமர்த்தப்பட்டனர். பத்திரிகையின் வளர்ச்சி முந்திய காலங்களைவிட அதிகமாகியது. பரபரப்பான தலையங்கங்களும், சூடான செய்திகளும் நாட்டு மக்களிடையே இழந்த செல்வாக்கைப் பெற உதவின. நாட்டுமக்களிடையே எழில் தரும் தங்களின் திட்டங்களை விளக்கிடுவதற்காக 1927ல் பனகல் அரசர் தலைமையில் மதுரையில் மாநில மாநாடு கூடியது. மாநாட்டுத் தீர்மானங்கள் மக்களைக் கவரும் மாபெரும் தகுதியைப் பெற்றன. அதன் பின்,. னர் 1928-டிசம்பர் 16ல் பனகல் அரசர் காலமானுர். பனகலின் மறைவிற்குப் பிறகு டாக்டர் சுப்பராயன் மந்திரி சபை ஆட்டங்கண்டது. திரு. ஆர். என். ஆரோக்கியசாமி முதலியாரும், திரு. ஏ. ரெங்கநாத முதலியாரும் மந்திரி சபையிலிருந்து ராஜிநாமாச் செய்தனர். அவர்களின் இடத்தை திரு. எஸ். முத்தையா முதலியாரும், திரு. சேது ரத்தினமய்யரும் பூர்த்தி செய்ய முன்வந்தனர். முழுக்க முழுக்க இப்போது ஜஸ்டிஸ் கட்சியின்

ஆதரவோடுதான் டாக்டர் சுப்பராயனின் மந்திரிசபை இயங்க முடிந்தது.

டாக்டர் சுப்பராயனின் மந்திரிசபை ஜஸ்டிஸ் கட்சியின் முழு பலத்தையும் நம்பியிருந்த போது வெளியே... காங்கிரஸி லிருந்த பெருந்தலையான வ. வெ. சு. ஐயர் போன்றோர் ஜாதீய கோட்பாடுகளுக்கு சிறப்புத் தந்து போற்றி வளர்க்கத் துவங்கி னர். பொது மக்களிடமிருந்து திரட்டப்பட்ட, பெருநிதியும் வர்ணாஸ்ரம தர்மத்தைக் கட்டிக் காப்பதிலேயே செலவிடப் பட்டதைக் கண்ட, அப்போதைய தென்னகக் காங்கிரஸின் பிரமுகரான பெரியார் கொதித்தெழுந்து கொடுமைகளுக் கெதிரே கொடி உயர்த்தினர். டாக்டர் பி. வரதராஜலு நாயுடு, திரு. வி கலியாணசுந்தர முதலியார் ஆகியோர் பெரியாரின் கரங்களைப் பலப்படுத்தி நின்றனர். வ வே. சு.க்களின் செல்வாக் குப் பறந்த காரணத்தால் பெரியார். திரு. வி. க, டாக்டர் ஆகியோர் காங்கிரசைக் கை கழுவினர்.

காங்கிரஸிலிருந்து வெளியேறிய பெரியார் வர்ணாஸ்ரமக் கொடுமையிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்காக தீவிரத் திட்டமொன்றைத் தயாரித்தார். பெரியாரின் பெரும்பணியை விரும்பிய ஜஸ்டிஸ் கட்சி பெரியார் தந்த தீவிரத் திட்டத்தை ஏற்றுக்கொண்டது.

1926-ல் பெரியாரால் துவக்கப்பட்டு இயங்கிய சுயமரி யாதை இயக்கம் பொலிவு தரும் கட்டத்திற்கு வந்து நின்றது ஜஸ்டிஸ் கட்சியின் கூட்டுப்பணியினுல். பெரியாரின் தோளோடு தோள் நின்று இயக்கப் பணியாற்றுவதிலே பங் கெடுத்துக்கொண்டவர்களில் மாயவரம் நடராசன், பூவாளூர் பொன்னம்பலம், எஸ். வி. லிங்கம், நாகை காளியப்பன், அழ கிரிசாமி. சாமி சிதம்பரனர்; சித்தையன். பு. செல்வராசன். சி. கணேசன், டி எம். பார்த்தசாரதி, சிவஞானம், கூபாலி, ஜீவானந்தம் ஆகியோர் முக்கியமானவர்களாக இருந்தார்கள். 1929 பிப்ரவரி 17-18 தேதிகளில் செங்கற்பட்டிலே முதல் சுய

மரியாதை மாநாடு சீரும் சிறப்போடு நடந்து முடிந்தது. இந்த மாநாடு ஜஸ்டிஸ் கட்சியினருக்கு தகுந்த பக்கபலமாக அமைந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக 1929-நவம்பரில் நடந்த பொதுத்தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி அமோக வெற்றி பெற்றது. இழந்த செல்வாக்கைப் பெற்று புகழ்க் கொடியைப் பறக்கவிட்டது கட்சி. 1930-ல் திவான் பகதூர் முனுசாமி நாயுடு 4-வது மந்திரிசபையை அமைத்தார் சர். பி. டி. ராஜனும், திரு. குமாரசாமி ரெட்டியாரும் மந்திரி பீடத்தை அலங்கரித்தனர். 1932-ல் கட்சித் தலைவரின் மீதிருந்த நம்பிக்கை குறையவே பொப்பிலி அரசர் கட்சித்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பொப்பிலியரசரே முதன் மந்திரியாகவுமானுர். மூன்று வருட காலமே நடைபெற வேண்டிய பொப்பிலியின் மந்திரிசபை சைமன் கமிஷன் அறிக்கை வெளிவரத் தாமதமாகியதால் தொடர்ந்து 7 ஆண்டுகள் நடைபெற்றது. இந்த மந்திரிசபையில் செட்டி நாட்டரசர் முத்தையா செட்டியார், திரு. ஏ. டி. பன்னீர்ச் செல்வம் ஆகியோர் மந்திரிகளாக யிருந்தனரென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1935-ல் சைமன் கமிஷன் அறிக்கைப்படி பொதுத் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி தோல்வியடைய நேர்ந்தது. காங்கிரஸ் கட்சியினர் வெற்றி பெற்றனரென்ருலும் மந்திரிசபை அமைக்க முடியாத அளவிலே தத்தளித்தனர். பிறகு 1936ல் திரு. சி. இராஜகோபாலாச்சாரியாரை முதன் மந்திரியாகக் கொண்டு மந்திரி சபை அமைத்தனர் காங்கிரஸ் கட்சியினர்.

1935-ல் சைமன் கமிஷன் வெளியாவதற்கு முன்பே ஜஸ்டிஸ் மாளிகையில் நுழைந்த அண்ணு அறிக்கையின் விளைவாக நடைமெற்ற சீர்திருந்திய பொதுத் தேர்தலிலே தான் ஈடுபாடு கொண்ட கட்சி வெற்றிபெற முடியாது போனவேதனையான நிலை குறித்து அதிகம் கவலை கொண்டு சிந்திக்கத் துவங்கினுர். மூன்று முறை வெற்றி பெற்று கோலோச்சிய கட்சி இப்போது மூலையிலே ஒதுக்கித் தள்ளப்படுவானே

னென்று எண்ணத் துவங்கினர். மக்களுக்காக, குறிப்பாக திராவிட இன நலனுக்காக பாடுபட்ட ஒரு பேரியக்கம் தோல்வியை அணைத்து நின்ற காரணத்துக்கு அண்ணா அவர்கள் விளக்கம் தேடிக் கொண்டிருந்த போதுதான்...

தென்னவர் இயக்கத்தைத் தோற்றிடச் செய்த காங்கிரஸ் கட்சி வடவராதிக்கத்தின் போர்க் கருவியாகிய இந்தி மொழி தனைக் கட்டாய பாடமாகக் கொணரத் தீவிரத் திட்டமிட்டுப் பணியாற்றி வந்தது. காங்கிரஸ் கட்சி இயக்கிய இராஜ கோபாலாச்சாரியாரின் மந்திரி சபை பள்ளிகளிலே இந்தியை கட்டாய பாடமாக்கி தாக்கீதுகள் அனுப்பி வைத்தனர். தமிழ்க் கடல் பொங்கி எழுந்தது. எங்குமே ஆர்ப்பாட்டம். தென்னவர் வாழ்ந்த இடங்களிலெல்லாம் தமிழ் காக்கும் போர்ப் பாட்டு. 'எப்பக்கம் வந்துவிடும் இந்தி. எத்தனை பட்டாளம் கூட்டி வரும்' என்ற சங்கநாதம் புலவர்களின் இலக்கிய இதயத்திலிருந்து கிளப்பிக் கொண்டிருந்தது. 'தமிழை இகழ்ந்தவனைத் தாய் தடுத்தாலும் விட்டேன்' என்ற பரணி பாடியவர்களுக்கு முன்னே பெரியார் அணி வகுத்து நின்றார். பெரியாரின் பிரதி பிம்பமாக சிங்கக்குரலெடுத்து சங்கத் தமிழ் காக்க நாடெங்கும் நகரெங்கும் சுற்றினார் அண்ணா. தேன் தமிழின் சுவை தமிழ் காக்கக் குரல் கிளப்பிய அண்ணாவின் அழகுப் பேச்சால் சிறப்புப் பெற்று விட்டதாகவே அப்போது நாடு மதித்தது. முடிவாக நல்லவரின் குரலுக்கு செவிசாய்க் காத ஆட்சியாளரைக் கிளர்ச்சியின் மூலமாக நடு நடுங்க வைக்கத் திட்டமிட்டு, இந்தி எதிர்ப்பு மறியலைத் துவக்கினர். மறியலின்போது 1200 பேருக்கு மேல் கைதாகினர். கைதான வர்களிலே கைக்குழந்தைகளுடன் சிறைக் கோட்டம் சென்ற தாய்மார்களின் எண்ணிக்கையும் அளவில் பெரியதாகும். மறியலுக்கு வேகம் தரும் முறையிலே பெரியார் கைது செய்யப் பட்டார். மூன்று ஆண்டு சிறைவாசம் ஏற்று வெஞ்சிறையிலே அடைபட்டார் பெரியார். நாடு துடித்தது நல்லறிவாளர் களுக்குக் கிடைத்த கொடுஞ் சிறைத் தண்டனை குறித்து.

பெரியாரை மட்டுமல்ல .. தமிழையே—தமிழர் நலனையே ஆதிக்கம் சிறைக்குள்ளே தள்ளிப் பூட்டியதாகத்தான் தென்னவர் நினைத்துத் தேம்பினர்.

1938-டிசம்பரில் பெரியார் சிறையிலிருந்தபோது, ஜஸ்டிஸ் கட்சியின் செயற்குழுகூடி பெரியாரை மாநாட்டுக்கு தலைமை ஏற்க ஏற்பாடு செய்வதென்று தீர்மானித்தது. அதன்படி மாநாடு கூடியபோது மாநாட்டுத் தலைவராக பெரியாரின் பெயரைத்தான் அறிவித்திருந்தார்கள். பெரியார் அப்போதும் சிறையில்தானிருந்தார் மாநாட்டுக்கு தலைமை ஏற்க அனுமதித்து அவரை விடுதலைச் செய்ய வில்லை அரசு. பெரியார் சிறைப்பறவையாக இருந்த காரணத்தால் பெரியார் சிறையிலிருந்தபடியே தனது தலைமைப் பிரசங்கத்தை எழுதி அனுப்பியிருந்தார். அதைத்தான் திரு. ஏ. டி. பன்னீர்ச் செல்வம் மாநாட்டிலே படித்தார். அந்த மாநாடு தமிழரின் உறுதியை மேலும் பலப்படுத்துவதாகத்தான் அமைந்தது.

22-5-39ல் பெரியார் சிறைவாசம் நீங்கி விடுதலையானார். ஆனல் தமிழ் விடுதலையாக வில்லை, இந்தி அரக்கியின் கோரக் கரங்கள் அப்போதும் அழுத்திக்கொண்டே தானிருந்தன. தாளமுத்து, நடராசன் என்ற இரு மறக்குல மாணிக்கங்களை பிணமாக்கி விட்டுத்தான் இந்தி அரக்கி கரங்களை எடுத்துக் கொண்டாள். 21-2-40ல் கட்டாய இந்தி ரத்தாகியது. அப்போது சென்னையிலுள்ள பிரபல தேசீய வாரப்பத்திரிகை இந்திப் போருக்கு ஆதரவளித்த திரு மறைமலை அடிகளாரை ஒரு சுயமரியாதைக்காரர் என்று வர்ணித்து எழுதியிருந்தது. சுயமரியாதை இயக்கத்துக்கு நேர் எதிரிடையான கொள்கையைக் கடைப் பிடித்தது மட்டுமல்லாமல், அந்த இயக்கத்தின் எதிர்ப்புப் படை வரிசையில் முன்னணியில் நின்றவர் அடிகளாராகும். அப்படிப்பட்ட அடிகளை இந்தி எதிர்ப்பின் காரணத்தை வைத்துக் கொண்டு பச்சையாக உண்மையை மறைத்து பத்திரிகா தர்மத்தை மறந்து எழுதித் தீர்த்தார்கூ

மொன்றால் இந்திப் போர்' எத்தகைய மாபெரும் எதிர்ப்புகளுக்கிடையே நடைபெற்று முடிந்ததென்ற நிலைமை புரியக்கூடும்.

கட்டாய இந்தி ஒழிந்து திருவாரூரில் நடைபெற்ற ஜஸ்டிஸ் மாநில மாநாட்டிலே பெரியார்தான் தலைமை தாங்கினார். பெரியாரின் தலைமையிலே மாநாடு நடைபெற்றாலும், பெரியாரைப் பயன்படுத்தி நாடெங்கும் செல்வாக்கைத் தேட முயற்சித்த ஜஸ்டிஸ் கட்சியின் வீழ்ச்சிப் பாதையைப் பற்றியே அண்ணா அப்போதெல்லாம் ஆராய்ந்து வந்தார்.

அண்ணாவின் தீவிர ஆராய்ச்சியிலும், அழகுமிகு பணியிலும் தென்னவர் தலை நிமிரக்கூடிய பொற்காலம் அடுத்த நான்கு ஆண்டுகளிலே கரு வெடுத்திருந்தது என்னதான் பெரியார் போன்று சலியாது உழைக்கும் தலைவர்களும், பம்பரமாகச் சுழன்று பணியாற்றும் தொண்டர்களுமிருந்தாலும் சரிகைக் குல்லாய்களின் வசம் கட்சி இருக்கும் வரை இயக்கத்திலே எழுச்சியோ, புரட்சித் தத்துவங்களோ இருந்திட முடியாதென்ற முடிவிற்கு அண்ணா வந்து தீர்ந்தார்.

1944-ல், கட்சியிலே 'சேலம் மாநாடு' நடைபெற்றது 'அண்ணாத்துரை தீர்மானம்' என்ற பெயரால் தீர்மானம் கொண்டு வந்து, ஜஸ்டிஸ் கட்சியை 'திராவிடக் கழகம்' என்ற, இன எழுச்சிகொண்ட பெயரால் மாற்றித் திருத்தினார் அண்ணா. சீமான்கள் சீறிப்பாயும் புலியென வெளியேறினர். கோமான்களின் கோபப் பார்வையிலே நெருப்புப் பறந்தது, அண்ணாவின் தீர்மானத்தால் ஜீவன் பெற்ற இயக்கமோ ஏழை எளியவரின் இதய முரசமாக நாடெங்கும் நல்லவர் வீடெங்கும் ஒலிக்கத் துவங்கியது.

......பெரியாரின் புகையும் இதயம் அண்ணாவுக்குத் தெரிய வந்தபோது, கட்சியின் பழைய வரலாற்றைத்தான் எண்ணிப்பார்த்தார். தென்னகத்தின் எத்திக்கும் தித்திக்குமாகு மொழியிலே வரவேற்பு பெற்று கொடிகட்டி வாழ்ந்த

ஜஸ்டிஸ்கட்சி கால வேகத்தால் -- கருத்துப் புரட்சியை ஜீரணிக்கும் திரணியில்லாத முறையிலே தேய்ந்து சாய்ந்த கதையையும், புதியரத்தம் பாய்ச்சும் முறையிலே கட்சியையே மாற்றித் திருத்திய தனது தீர்மானத்தின் வலிவையுந்தான் அவரால் அப்போது நினைக்கமுடிந்தது. மிகப் பெரிய எதிர்ப்புகளுக்கிடையே கட்சியை மாற்றித் திருத்தி, சக்தி படைத்தவர்களையெல்லாம் சாமானியர்களாக மதித்து இயக்கத்தை வலிவும் எழிலுமுள்ள தாக்கிவிட்டு கட்சியின் ஏக தலைவராக இருக்கும் பெரியார் தனிப்பட்டவருக்காக......... இயக்க வேலைப் பாடுகளிலே மந்த நிலையைத் தேக்கிய தானது அண்ணாவுக்கு பழைய வீழ்ச்சியடைந்த ஜஸ்டிஸ் கட்சியின் நிலையையே தெளிவு படுத்தவைத்தது. பன்னீர்ச் செல்வமும் தியாகராயரும் கண்ணீர்விட்டு வளர்த்த இயக்கமே படாடோபத்துக்கும் கோஷ்டிப் பூசலுக்கும் ஆளாகி படுத்து விட்டபோது, நிறைந்த அளவிலே நாளெல்லாம் நாடெங்கும் சுற்றி பிரசாரம் செய்து கொள்கை வளர்த்து கொடி நாட்ட வேண்டிய கழகம் பெரியாரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்புத்தந்து விட்டால் எதிர்காலம் என்னவது என்று எண்ணியே அண்ணா சில விரும்பத்தகாத அரசியல் மேதைகள் புரிந்திடாத சாகசங்கள் நடந்தபோது கூட ஒதுங்கத்தான் நினைத்தார்—ஓடவில்லை தலைவருக்கு அடங்காத போக்கு இது என்று தலைவரின் அரசியலுக்கே குழி தோண்டிக் கொண்டிருந்தவர்களே விளம்பரப் படுத்திக் கொண்டிருந்தார்கள். அவையடக்கம் புரியாத முறையிலே நினைத்த நேரத்தில் வருவதும் எழுந்து போவதும் சரியானதல்ல வென்ற பெரிய குற்றத்தையும் தேடிக்கண்டுபிடித்தது போல அய்யா அவர்களின் ஆதரவாளர்கள் பகிரங்கமாகவே கூறத்தலைப்பட்டனர். அண்ணாவின் சிறு அசைவிற்குக்கூட புதிய தத்துவங்கூறிக் கொண்டிருந்தார்கள். எதிரிகளின் படைவரிசையைத் தனது பேனா முனையால் சொல்லம்பால் தாக்கித் தரை மட்டமாக்கிய போது பெரியார் தம் பெரும்

படையினரால் 'தளபதி' யாக்கப்பட்ட அண்ணா இயக்கத்திலே விஷவிருட்சம்பவளர்ந்தபோது தளர்பதியாக கற்பனை யாக்கப்பட்டார். துரோக நினைவு கொண்ட எதிரியின் வலிமையைவிட கட்சிக்குள்ளிருந்தே பகையைக் கக்கிய தோழர்களை நினைத்த போது தான் அண்ணாவுக்கு கலக்கமாகவும் வேதனையாகவும் தெரிந்தது' குறிப்பாக தூத்துக்குடி மாநாட்டின் போது பெரியார் தம் ஆதரவாளர்கள் கிளப்பிய துவேஷக்கருத்து அரசியல் நேர்மையாளர்கள் சந்திக்கக் கூடாததாகும். கொளுத்திய கோடை வெய்யிலிலே சுடு மணலிலே கால்கடுக்க நெடுநேரம் நின்று' வருகின்ற ரயில்களையும் போகின்ற ரயில்களையும் பெருமூச்சோடு பார்த்திருந்த பெருங்கூட்டத்தை கண்படைத்தோர் — நினைவு படைத்தோர்—மறக்கமுடியாததுதான். மாபெரும் ஊர்வலத்தைத் துவக்குகின்ற முறையிலே பெரியார் அவர்களும் காத்திருந்த காட்சி, அண்ணாவுக்கும் கழகத்தின் இரும்புத் தூண்களாம் இளங்காளையர்களுக்கு மிருந்த நெஞ்ச உறவை நேரிலே காட்டிடும் நிகழ்ச்சியாகவும் அமைய முடிந்தது. துவக்கத்திலேயே அண்ணாவுக்காகக் காத்திருக்கக் கசந்தபெரியார் முடிவாக வெறுப்போடு ஊர்வலத்வைத் துவக்கினார். ஊர்வலத்திலே அண்ணாவைக் காணாத கண்கள் தேடித்தேடி சோர்வடைந்தன. 'அண்ணா வரவில்லையே' என்ற ஏக்கப் பெருமூச்சோடு 'ஏன் வரவில்லை அண்ணா' என்ற கேள்வியும் பிறந்து ஊரை வலம் வந்தவர்களை வாட்டிக்கொண்டிருந்தது. அவர்களிடையே.........'அண்ணாவாவது தம்பியாவது...... தலைவனென்றால் பெரியார்தான். இவரைப் போல சிறப்பும் பொறுப்பும் யாருக்கு வரும் ?' இப்படிப்பட்ட புன்மொழிகளையும் உதிர்த்துக் கொண்டு சிலர் உடன்வந்தனர். இளைஞர் பட்டாளவரிசை அந்தச் சிலரின் வேடிக்கைமொழி கேட்டு மிகமிக வேதனைப்பட்டது. அதே போது அண்ணா வருகை தராததையும் நினைத்தபோது துக்கம் நெஞ்சையள்ள அழுதே விட்டனர். அந்த நெஞ்சங்களையெல்லாம் மேலும் மேலும்

கண்ணீர் வடிக்கும் முறையிலேதான் மாநாட்டு நிகழ்ச்சி களிலே 'அண்ணுபற்றி' விரும்பத்தகாக விதமாக சொல்லாடி முடித்தனர். அப்போதைய முரசொலி இதழிலே கலைஞர் கருணாநிதி "நாடகத்திலே நஞ்சுகலந்தார் நடிகவேள்" என்று குறிப்பிட்டு எழுதியது போல மாநாட்டு நள்ளிரவிலே நடந்த நாடகங்களிலே கூட 'அண்ணு பற்றி' நிந்தனை அந்தாதி துவக்கிட மறந்திட வில்லை. பெரியாரின் ஆதர வாளர்களே 'தலைதாழ்ந்து நெஞ்சம் வெட்கும் அளவுக்கும் அன்று தூத்துக்குடி நிகழ்ச்சி நடந்து முடிந்தது.

இந்தச் செய்திகளெல்லாம் அண்ணுவுக்குத் தூது போன போது இதைப்பற்றி யெல்லாம் அவர் கொஞ்சமும் கவலை கொள்ளாது மாநாடு வெற்றிகரமாக நடந்துமுடிந்ததைக் கேட்டுத்தான் தனது வாழ்த்தைத் தெரிவித்துக் கொண்டிருந் தார். அண்ணுவின் அருமை நண்பர்கள் வேதனை தாங்காது மாநாட்டின் 'அண்ணுபற்றி'ய வேண்டாத நிகழ்ச்சியை எடுத்துக்காட்டியபோது பலமாகச் சிரித்தார். அந்தச்சிரிப்பு ......'அரசியல் தலைவர்களின் கருத்து வேறுபாடுகளை இது மாதிரியான விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் தீர்த்துவைக்கு மாஞல் அந்தமுயற்சிகள், தொடர்ந்து நடக்கட்டும்' என்று கூறுவது போலியிருந்தது. இப்படிப்பட்ட அறிவுலக மேதை யின் சிந்தனை எப்படிப்பட்ட இதயத்தையுமே கவரும்படியாக அமைந்து தலைவர்களின் கருத்துவேறுபாடுகளைப் புரிய முடியாதவர்கள் புண்பட்ட மொழிகளையே பேசிவந்தனர். இருபெரு மேதைகளுக்கிடையே கிளம்பியிருந்த வேறு பாட்டை அகற்றமுயற்சித்தவர்கள், பெரியாரின் உண்மை உள்ளத்தைத் தெரிந்து கொண்டு ஒதுங்கிவிட்டனர். அதை ஒரு வேறு பாடாகவே மதிக்காதவர் போலவே விடுதலைப் பணியையும், சமுதாய சீர்திருத்த முழக்கத்தையும் முன்னைவிட அதிகமாகவே பரப்பி வந்தார் அண்ணு. 'கோட்டைக்குள்ளே குத்துவெட்டு' என்று மாற்ருர் மன மகிழ்ந்து கூறிடாத அளவிலே கொள்கையைக் குழப்பாமலிருந் தார்.

"நீள்வையம் எதிர்த்திடினும்—அஞ்சுதல்
இல்லாத் தோள் வாய்ந்த மூவேந்தர்
—சீர் ஆட்சி
நாள் என்ற கடல் வெள்ளம் தான்
கொண்டு போனதே கோள்வாய்ப்
பெருந்தீயர் வரவால் இருளானதே
யாவரும் ஒன்றே எனவாழ்ந்தோமே
நாங்கள் இனம் சாதி மதவெறி அலங்
கோலம் மேவி வீழ்ச்சிநிலை அடையவும் ஆனதே
வேங்கைக் குகைக்குள் நரிவாழ்ந்திடவும் ஆனதே'

என்றபுரட்சியின் கவிதை வரிகளைப் போல 'வேங்கைக் குகைக்குள்ளே நரி வாழ்ந்திடும்' நிலை ஏற்பட்டு விடக்கூடாதே யென்பதற்காக மனமாச்சரியத்தைப் பெரிது படுத்தவில்லை அண்ணா. மேலும் நாளெல்லாம் உட்கார்ந்து ஓயாது பணி யாற்றும் பெரியாரின் உள்ளத்தை நன்றாக அண்ணா புரிந்து வைத்திருந்தாலும், அந்த மலர்ச்சோலையை பொலிவிழக்க விரும்பினாரில்லை.

சுயமரியாதை இயக்கத்தின் துவக்க காலத்திலே இப்படிப் பட்டதொரு கருத்து வேறுபாடு கிளம்பியபோது பெரியார் பெரிதும் மனவேதனைப்பட்டதை அண்ணா அறிந்ததாகும். அந்த மனவேதனைகுறித்து சுயமரியாதை இயக்கத்தின் பழம் பெரும் முன்னணி வீரரான திரு. எஸ். வி. லிங்கம் அண்ணன் அவர்கள், 'சண்முகம் அவர்கள் தலைமை வகித்து; மாநாட்டை சிறப்பாக நடத்திக் கொடுத்தார். மாநாட்டில் நமதுகட்சிக்காக ஓர் தமிழ்த்தினசரி நடத்தவேண்டுமென்ற ஓர் தீர்மானத்தை அழகர்சாமி கொண்டு வந்தார். மாநாடு முடிந்தது. மறுநாள் சுயமரியாதை ஊழியர்களில் முக்கியஸ் தர்கள் தவிர, மற்ற அனைவரும் அவரவர்கள் ஊருக்குப் போய் விட்டார்கள். அதற்கு மறுநாள் பெரியாரும்' நாகம்மை யாரும் ஈரோடு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரண்டு நாட்களாக ஊழியர் களுக்குள் ஓர் பரபரப்பு

இவற்றை யெல்லாம் பெரியார் கவனித்து வந்தார். அக்காலம் சுயமரியாதை இளைஞர்களுக்குப் பொது வாழ்க்கைபுதிது. கட்சியில் சிலர் நடப்பது, அவ்விதம் நடைப்பதைக்கவனிக்க வேண்டியதை மௌனம் சாதிப்பது இதெல்லாம் ஒரு புதிராக இருந்தது. ஒன்று மில்லாமலே சிலர், அவரவர் மனப்போக் கின்படி பேசி எண்ணி வந்தார்கள். இவைகளெல்லாம் பெரி யாருக்குத்தெரியும். ஆனல், நமது கட்சியின் மதிப்பு, அதன் வளர்ச்சியில் தனது திட்டங்கள் 'ஆகியவற்றை நன்குணர்ந்த தினல், பெரியார் மௌனமாகவே இருந்தார். பெரியார் தங்கி யிருந்த வீட்டிற்கு எதிர் வீட்டில் சு. ம. ஊழியர்கள் யாவரும் ஒன்று கூடினர்கள். எவ்விதசந்தடி யுமின்றி அந்த வீட்டுத் தெருக்கதவு சாத்தப்பட்டேயிருந்தது. சிவகாமி அம்மையார் பெரியார் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்று நாகம்மையார் அவர்களை ஊழியர்கள் கூட்டத்திற்கு அழைத்து வந்தார். இந்த இரகசியக் கூட்டத்திற்கு அழகர்சாமியும், நடராசனுமே காரணமாயிருந்தார்கள். பெரியாரின் படைகள், பெரியா ருக்குத் தெரியாமல், பெரியார் இருந்த வீட்டிற்கு எதிர்வீட்டில் பெரியார் மனைவியாரின் முன்னல் கூடினர்கள். இக்கூட்டத் தைப்பார்த்ததும் நாகம்மையாருக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற் பட்டது. அதோடு, எதற்காகத் தனியாகக்கூடி தன்னை அழைத்துவந்திருக்கிறார்கள் என்ற சந்தேகமும் இருந்தது. அங்கு கூடியிருந்த சுமார் நூற்றைம்பது பேரில். முப்பது நாற்பது பேர்பெண்கள் இவர்களில் நாகம்மையாருக்குத் தெரி யாதவர்கள் யாருமே இல்லை. எல்லோருமே ஏறக்குறைய நூறு தடவைக்கு மேல் ஈரோட்டுக்குச் சென்றவர்களாகும் தோழர் எஸ். இராமநாதன் எழுந்து, "தலைவர் பெரியாரிடமும், மற்றும் சிலரிடமுமுள்ள கருத்து வேறு பாட்டின் காரணமாக இங்கு கூடியிருக்கிறோம். மற்றும் இங்குள்ளவர்களும்; உங்கள் உங்களுடைய எண்ணங்களைக் கூறுங்கள் "என்று கேட்டுக் கொண்டார். உடனே தோழர் அழகர்சாமி எழுந்து, நமது இயக்க ஊழியர்களின் கூட்டம்

இது பெரியார் செய்கைபற்றி உண்மைப் பொருள் தெரியாதவர் களும், அவர் செயலில் கருத்து வேற்றுமையும், மனக்கசப்பும் கொண்டவர்களும் இங்குகூடி யிருக்கிருர்கள். என்றபோதிலும் அவரைத் தவிர வேறு தலைவரைமனதிலும் விளையாட்டிற்குக் கூட நினைக்காத கூட்டம் இது. எனவே இருக்கும் நிலையை எடுத்துப் பேசி, ஒரு நல்ல முடிவிற்கு வருவோம்' என்று கேட்டுக் கொண்டார். பொது சேவைக்குப் புதிதாக வந்த அத்தனை வீரர்களும், தங்கள் மனத்திடை புகைந்ததை யெல்லாம் பேசித் தீர்த்தார்கள். கூட்டம் பகல் இரண்டு மணிக்கு முடிந்தது யாவரும் சாப்பாட்டிற்குச் சென்ருேம். பெரியாரும் எங்களுடன் உட்கார்ந்துதான் சாப்பிட்டார். பகல் மூன்று மணிக்குப் பெரியாரும் நாகம்மையாரும் ஊருக்குப் புறப்பட்டார்கள். நாங்கள் யாவரும் புகை வண்டி நிலையம் வரை சென்று அவர்களை வழி அனுப்பினேம். வழக்கப்படி நாலைந்து பேர் அவர்களோடு ஈரோட்டுக்குச் செல்வதுண்டு அன்று யாரும் செல்லவில்லை. பெரியாரும், நாகம்மையாரும் ஈரோட்டுக்குப் போய்ச் சேர்ந்து விட்டார்கள். பின்னர் பெரி யாரும் நகம்மையாரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வ தில்லை யென்று கேள்விப் பட்டோம். இதற்குக் காரணம் என்ன வென்று கேள்விபட்டதில் பெரியார் அன்று காரைக் குடியில் நடந்த விவரத்தைப்பற்றி நாகம்மையாரிடம் கேட்ட தாகவும், அதைச் சொல்ல மறுத்ததால் இருவரும் பேசவில்லை யென்றும் சொன்ஞர்கள். இப்படி மூன்று நான்கு மாதம் ஒரு உயிர் இரண்டு உடம்பு என்று பேசிக்கொள்கிருர்களே. இது ஒப்புக்காக பேசிக்கொள்வதாகும். ஆனல், உண்மை யில் ஒரே உயிராயிருந்த இரண்டு உடம்புகள் மூன்று மாத காலம் பேசிக் கொள்ளாமல்—ஆனல் அன்ருட வழக்கங்கள் யாவும் குளிப்பு, சாப்பாடு. அனைத்துமே ஒழுங்காக நடந்து வந்தன. தனது கணவரைப்பற்றி மூன்று நான்கு ஆண்டு களாக, தனது பிள்ளைகளை விடப் பெரிதாக மதித்துப் பழகிய ஊழியர்கள் பேசிக் கொண்ட கண்டன மொழிகளை, தானே

தனது கணவரிடம் சொன்னால், தன் கணவருக்கும் பிள்ளை களுக்கும் பெரிய பிளவு ஏற்படும் என்ற பயமே, அன்று நாகம்மையாரை ஐயாவுடன் பேசாமல் இருக்கும்படி செய்தது என்று. தனது கட்டுரையொன்றிலே குறிப்பிட்டிருக்கிறார்க ளென்றால் பெரியாரின் இதயம் எப்படிப்பட்ட தென்பதை நாகம்மையார் விளக்கி இருக்கிறார்களல்லவா? அதைப் புரிந்து தான் அண்ணா பிரச்சினையை பெரிது படுத்தாமல் இயகத்தி லிருக்கும் இருள் தேயும்போது, தேயட்டுமென்று அமைதியாக இருந்து விட்டார். அந்த அமைதிக்குக காரணம் 'புலி பதுங்கு வதாக' புரளி கிளப்பினர்.

'அண்ணாதுரை ஏதோ திட்ட மிடுகிறார். இதற்காகத் தானா...

இந்த மௌனம், அமைதி, ஒதுங்கல் எல்லாமென்று முடிவு கூறினர். தனக்கெதிராக முழங்கிய பிரசார பீரங்கிகளைப் பற்றி அண்ணா வேதனைப்பட வில்லை. அதே போது இயக்கத் தில் இருந்து தீர வேண்டிய கண்ணியம் காப்பாற்றப்பட்டு வருகிறதா யென்பதிலேயே கவலை கொண்டிருந்தார்.

...''இரண்டாம் முறையாக இந்தி எதிர்ப்பும் போராட்டம் தற்பொழுது துவங்கியபோது காரியகமிட்டி கூட்டத்துக்கு அழகர்சாமியும் வந்திருந்தார். கூட்டத்தில் கலந்து கொண் டிருந்தவர்களனைவரும் சிறைக் கூட்டத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பல காலமாகப் பேசும் பொழுது, வறுமை யின் தன்மையைக் குறிப்பிட்ட தகரக்குவளை என்று அழகர்சாமி கூறுவதுண்டு. அன்று பொழுது சாய்ந்த நேரத்தில் தகரக் குவளை, தட்டுடன் கடைசி வரிசையில் உள் நுழைந்தார்.

ஈரோடு மாநாட்டில் கலந்து கொண்டார். மிகவும் தளர்ந்த நிலையில் உட்கார்ந்தபடி பேசினார். 'மிகவும் தளர்ந்த நிலையில் வந்துள்ளேன். உங்களனைவரையும் மறுபடியும் காண்பேனா? சொல்ல முடியாது. என் தலைவருக்கும், தோழர்களுக்கும்

கடைசி முறையாக என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளவே வந்தேன்" என்றார். சோகத்தின் குளிர் காற்று இதயங்களை நெருங்கியது. கண்களில் கண்ணீர் கசிந்தது.

மாவீரன் சோர்ந்திருக்கிறான். ஏன்? அவன் மார்பில் குண்டு பாய்ந்து விட்டது. உடனே கவனிக்கப்பட வேண்டிய காயம். முன் வரிசையில் நின்று சளக்க மனிதத்தளபதியின் மார்பில் குண்டு பாய்ந்து விட்டது வறுமையும், வசதியின்மையும் பாய்ச்சிய குண்டுகள், நெஞ்சக் கூட்டில் சயரோகக் கிருமிகள், சயரோகம் எனும் நோய்வாய்ப்பட்டு, பட்டுக்கோட்டையில் தனது உறைவிடத்தில் அழகர்சாமி இருக்கிறார். உயரமான உருவம், நிமிர்ந்த பார்வை, உரத்த குரல் இன்றோ உடலை முடக்கி படுக்கையில் படுத்திருக்கிறார். கண்களில் சோர்வும், தளர்ச்சியும் இருக்கின்றன. பேசுவதால் அதிகம் களைப்பு உண்டாகிறது. சமூகத்தின் வாழ்வைச் செம்மைப்படுத்த பாடு பட்டவரின் வாழ்வில் செம்மை நிலைபெறவில்லை. இயக்கத்தின் சார்பாக பலதாக்குதல்களுக்கு ஈடுகொடுத்த அஞ்சா நெஞ்சன் இன்று இருமலுடன் போராடிக் கொண்டிருக்கிறார். நோய் ஆரம்ப நிலையிலிருப்பதால் நன்றாகக் குணமடைந்து, ஓய்வு பெற்று, மீண்டும் உடல் வளத்துடன் திரும்ப வேண்டுமென்பது நமது அவா. அவர் தளர்ந்திருக்கிற நேரத்தில் நமது உதவியும், உற்சாகமும் தேவை நோய் முற்றுவதற்கு முன் அவரைப் பாதுகாப்பதற்குக் கூட அல்ல, நமது பண்பாட்டையும், கண்ணியத்தையும் பாதுகாத்துக்கொள்ள" என்று தோழர் செழியன் அன்றைய தினம் கட்டுரையொன்றின் மூலமாகத் தனது கருத்தைக் கூறியிருந்தார்கள். அண்ணா பலமுறை கடித மூலமாகவும், நேரிலும் நண்பர்களின் மூல மாகவும் பெரியாரிடம் அழகர்சாமி பற்றி கூறியும் பாதுகாக்கப் பட வேண்டிய கண்ணியம் பாதுகாப்படாமலே போய் விட்டது. அண்ணா மட்டுமல்லாமல் தோழர் செழியன் போன்ற இயக்கத்திடையே தீவிர பற்றுக்கொண்ட கழகக் காளையர், பலரும் வெளிப்படையாகவே கண்ணியம் கறுப்புத் திரைக் குள்ளே மறைந்து கொண்டதை அறிய முடிந்தது. பெரி

யாருக்கு மாறுபட்ட எண்ணங்களை அண்ணா ஒருவர்தான் தந்து வருகிறாரென்ற நிலைமாறி பெரியாரின் நிழலையே தொடர்ந்து வரும் பலரும், இயக்கத்தின் முன்னோடிகள் சிலரும் கசந்து போய் கண்ணீர் சிந்தும் நிலைக்கு வந்தனர், தேம்பிய அவர்களின் முகங்களையும், தேங்கிய கவலையோடிருந்த அந்த இதயத்தையும் அமைதியோடு பார்த்தார். துடிக்கும் இதயத்தோடு நடுங்கும் கருத்தோடு தனது 'திராவிட நாடு' இதழிலே ..." திசை தவறிய கப்பலிலுள்ள மக்கள், கரை காண முடியாது தவிக்கும் சமயத்தில் கப்பலின் பாய் மரமும் ஒடிந்து விழக் கண்டால் எவ்வளவு பதைப்பரோ, அதை விடப் பன்மடங்கு அதிக மானபதைப்பு, தன்மான திசைக்கு வழிகாட்டியாக விளங்கிய அழகர்சாமி என்னும் பகுத்தறிவுக் கப்பல் நோய் வாய்ப்பட்டிருந்து இயற்கை எய்தி விட்டது என்ற நெஞ்சு திடுக்கிடும் செய்தியைக் கேள்விப்பட்டபோது தமிழ் மக்களை எல்லாம் தத்தளிக்கச் செய்து விட்டது. தளராத உள்ளத்தோடு தமிழ் நாட்டுக்கு ஓயாது பணியாற்றி வந்த ஒரு உண்மையான உழைப்பாளி! அந்த உழைப்பின் பயனைப் பெற்ற பரிசு உயிரைக் குடிக்கும் நோயாகவா அந்தோ அமைய வேண்டும். கருத்தழிந்து கிடந்த மக்களின் கண்களைத் திறக்க, கத்திக் கத்திக் கருத்துக் குவியலைக் கக்கியவருக்கு காச நோயைத் தீர்க்கக் காலா காலத்தில் காசு கிடைக்க வில்லையே என்ற கவலை மேலும் அவருடைய நோய் வளர் வதற்கு வித்திட்டதுபோல் ஆகி விட்டதே என்பதை பொது வாக எல்லோரும் குறிப்பாக சுயமரியாதை இயக்கமும் எண்ணிப் பார்த்து வருந்தாமல் இருக்க முடியாது." என்று கண்ணீரைச் சிந்தி எழுதினார் அண்ணா. அண்ணாவைப் போன்றே மற்ற இலக்கிய வீரர்களும் திகிலடைந்து போய் நின்றனர். தோழர் செழியன் முன்னர் குறிப்பிட்டு எழுதிய கண்ணியம் கல்லறைக்குள்ளே புகுந்து கொண்டது. நாடு காக்கப் புறப்பட்ட சுயமரியாதை வீரனுக்குக் காடு போகும் வழி பிறந்த போக்கு நல்லவர்களின் இதயங்களைத் திறக்க

வைத்தது. அண்ணன் அழகர்சாமியின் மரணங் கேட்டுத் துடித்து அழுது புலர்பி அண்ணு ஓலத்தை எழுத்தாக்கு வதற்கு முன்பு......தலைவர் பெரியார் பொது நலத் தொண்டனின் உயிரையும்விட மேலாக மதித்த ஒரு கொள்கைக் குமரனின் உடல் வளத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு உதவிட முயற்சிக்க வில்லை. மறுத்துக் கூறவும் செய்தார் என்பதை அறிந்ததும், தலைவர் செய்ய வேண்டிய காரியத்தை அண்ணு செய்து முடித்தார். தலைவரின் தனிப் போக்கால் இயககத்திலே ஒரு தலை குனியும் நிகழ்ச்சி நடக்கக் கூடா தென்பதற்காக, தோழர் செழியன் குறிப்பிட்டாரே அந்த நமது பண்பாட்டையும் கண்ணியத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்காக அந்த முயற்சியை செய்து முடித்தார். அது அவரால் முடிந்த சிறிய முயற்சிதானென்ருலும், அண்ணுவைப் பற்றிய உயரிய உள்ளத்தை அது எடுத்துக் காட்டி விட்டது. பெரியாரைப்போலலே அழகர்சாமியும் அண்ணுவை சந்தேகக் கண்கொண்டு நோக்கியவராகும். அவரது உள்ளமே பெருமை தாங்காமல் அன்று புகழ் பாடியது. முன்னணி வீரரான மதியழகன் தனது நினைவுக் கட்டுரை யொன்றிலே......

......'ஓயாது உழைத்து உழைத்து உருக்குலைந்த அழகிரி நாட்டின் நோய் போக்க மருந்தளித்த அழகிரி - கடைசி நாட்களில் காச நோய்க்கும் பலியானுர். தாம்பரத்திற்கு அருகி. லுள்ள சந்தோஷபுரம் மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டார் அழகிரியைப் பொறுத்த வரையில் சந்தோஷபுரம் சஞ்சல புறவாகவே அமைந்தது. அவரது உள்ளத்திலே புகுந்த சஞ்சலத்தை சாவு ஒன்ருல்தான் துடைக்க முடிந்தது. மருத். துவர்களால் நம்பிக்கை யில்லை யென்று சொல்லப்பட்டு, பட்டுக்கோட்டை திரும்பினுர். திரும்பும் வேளையில் அறிஞர் அண்ணு அவர்களின் தாம்பரம் சந்திப்பு அழகிரியின் அஸ்தமன நாட்களில் சிறிது நிம்மதியை அளித்தது. அறிஞர் அண்ணு அவர்கள் விருப்பப்படி அவர்கள் கொடுத்த ரூபாய் 400 எடுத்துக்கொண்டு அழகிரியிடம் சேர்ப்பித்து விடுவதற் காக மறுநாள் இரவு பட்டுக் கோட்டைக்குக் கிளம்பினேன்

அது தான் அழகிரியை நான் கடைசி முறையாகச் சந்தித்தது. பட்டுக்கோட்டைக்கு மறு நாள் காலைபோய் சேரும் வரை எனக்கு நிம்மதியில்லை. அண்ணா அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாத நிலையில் அழகிரி விட்டுவிடுவாரோ என்ற அச்சம் முந்தின இரவு அண்ணா அவர்களுடன் தாம்பரத்தில் அழகிரியின் தோற்றத்தைக் கண்ட என் உள்ளத்தை அழுத்திக் கொண்டேயிருந்தது.

பட்டுக் கோட்டை சேர்ந்தேன் அழகிரியையும் கண்டேன் ஒரு காலத்தில் கம்பீரமாக உலவி, இடிபோலவென முழங்கி, நாடே நடுங்கிய அழகிரியையல்ல நாடிதளர்ந்து, குரல் கம்மி' சோகம் ததும்ப காலைமுதல் மாலை வரை கதிரொளியைப் பரப்பிவிட்டு மாலைக்கடலில் ஓய்வு கொள்ளப் போகும்போது செக்கர் வானத்தில் சில கதிர்களைச் சிந்தி விட்டுப் போகும் அந்திநேர சூரியனின் காட்சி அது. அவரது மனத்தில் இருந்து பெரும் சுமை கீழே எடுத்து வைக்கப்பட்டதாக அவரது முகமும் சொற்களும் கூறின. ஏதேதோ கூறினர் அதுவெல்லாம் தேவையில்லாதது. அவர் கடைசியாக குறிப்பிட்ட ஒன்று மட்டும் குறிப்பிடுகிறேன்.

மதியழகா பணமல்ல முக்கியம்; அதில் மறைந்து கிடக்கிறதே மனம் அதுதான் முக்கியம் முன்னாள் தோழன் ஒருவன் உதவி கிடைக்காமல், உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறான். அவனுக்கு உதவவேண்டும் என்று மறந்து விடாமல் என்னையும் ஒரு பொருட்டாக மதித்து உதவி செய்ய முன் வந்தானே—அண்ணாதுரை—அதற்காக அந்த பேருள்ளத்தை நான் போற்றுகிறேன். எனது மகிழ்ச்சியைக் கூறு அண்ணாதுரையிடம், உண்மையான நண்பன் யார்—பகைவன் யார் என்பதை நான் உணர்ந்து கொண்டேன் மதியழகா இதனையும் கூறு.''

என்று இதுபோலக் குறிப்பிட்டு அண்ணாவின் பெருந்தொண்டையும் பேருள்ளத்தையும் விளக்கினர்.

தொண்டுள்ளங் கொண்ட இலட்சியவாதிக்கு தோழமை கொண்ட அண்ணாவின் உதவி கிடைத்தது. ஆனாலும்...... மாணிக்கத்தைத் திருட நினைத்த காலக்கள்வன் தனது குறியிலே தவறவில்லை. இலட்சியவாதிகளின் கடைசிக் காலத்தை சிந்தனையாளர்களின் முன் நிழலாடவைத்து விட்டு அழகர்சாமி போயவிட்டார். பெரியாரின் இடது, வலது கரமாக இருந்தவர்களுக்குக் கூட இந்த நிகழ்சி பெரிய அதிர்ச்சியைத் தந்து விட்டது.

கசப்பு மிகுந்தது. பெரியாரின் பக்க மிருந்த நியாயம் கொஞ்சங் கொஞ்சமாக மங்கத்துவங்கியது. எதிரிவரிசையி லிருந்த அரசியல் ஓநாய்கள் வாய் பிளந்துநின்றன. அந்தக் கசப்பு நமது இனவைரிகளின் வஞ்சகத்தைப் பெருக்கும் கருவியாக ஆகிவிடக் கூடாதே யென்று கவலையோடு சிந்தித் தார் அண்ணா. பெரியாரிடம் குடி புகுந்துள்ள கருத்துக்குறித்து தெரிந்து ஒதுங்குவோர் பெருகுவது கண்டு, அவர்களை யெல்லாம் அணிவகுத்து தலைவரை எதிர்க்கும் ஒரு புதிய தத்துவத்தை அண்ணா கண்டாரில்லை. இப்படிப்பட்ட தொரு வெறுப்பு விதையை மக்களிடையே பதித்தால் அது கொடி யாகி' செடியாகி, மரமாகி வேரூன்றிக் கொள்ளும் பக்குவத்தி லேதான் மக்களின் மன வளமுமிருந்து வந்தது. ஆனால், அண்ணா அந்த முறைகளை நினைப்பதே அரசியல் நாகரீகமாகா தென்று கருதிவந்தார். அதேபோது பெரியாரும், அவர் தம் பிரதிபிம்பங்களும் நேர்மையை மறந்து நெஞ்சத்தைத் துறந்து பேசியும், எழுதியும் வந்தனர்.

சமுதாய சீர் திருத்தத்திற்காக புதுமை நாடகங்கள் நாடெங்கும் நடை பெறவேண்டு மென்பதை வலியுறுத்திய பெரியார் ; அண்ணா பங்கேற்று நடித்த, காஞ்சி திராவிட நடிகர் கழகத்தாரின் ' சந்திரோதயம் ' போன்ற நாடகங்களைப் பாராட்டிய தலைவர், புராண மதிப்பினர் தங்களது பகுத்தறிவுக் கொவ்வாத கருத்துக்களைப் பரப்பிட நாடகமொன்றையே

பிரச்சாரக் கருவியாகப் பயன்படுத்தி வருகின்றனர். நாமும் அந்தப்போர் முறைகளையே கையாண்டு பொல்லாங்கு போக்கிடவேண்டு மென்று சங்கநாதம் செய்த கழகத் தலைவர் ......நாடகம் பற்றிய தனது பழைய கருத்தை மாற்றிக் கொண்டு போர்முழக்கம் செய்யக்கிளம்பினார். கூத்து மேடை பற்றி பேச்சு மேடையிலே கூறக்கூடாத மொழி யெல்லாம் கூறி வந்தார். அந்த நேரம் அண்ணாவின் 'வேலைக்காரி' திரை உலகிலே ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தி வைத்தது. புராணப் பித்தர்களும், பண நாயகவாதிகளும் நடு நடுங்கும் அளவிலே இயக்க பிரசாரம் கோடிட்டுக் காட்டப்பட்டது. அந்தத் திரை ஓவியத்திலே. கொள்கை வளருவது கண்டு பழமைச் கோபுரம் இடிபடும் ஓசை கேட்டு பரவசப்பட வேண்டிய பெரியார்; புராண புரட்டர்களை விட கவலை அதிகம் கொண்டதோடு, 'வசனம் எழுதிப் பிழைக்கின்றனர்' என்ற சுடு மொழியால் தாக்கிடவும் செய்தார். நாடக மாடுவது வசனம் தீட்டுவது, இதைத்தானே அவர்களுக்கு கவனிக்க முடிகிறது. ஒழுங்காக இயக்க வேலையை கவனிக்க என்னைத் தவிர ஆள் யாரிருக்கிறான்' என்ற முறையிலே அவரது பேச்சுப் பாணி அமைந்தது.

'வேலைக்காரி'யிலே வந்த வேதாசலமும்; சுகிதமாக வந்த அமிர்தமும்; பரமானந்தனாக வந்த ஆனந்தனும் இன்றைய சமுதாயத்தின் சரியான படப்பிடிப்பாக அமைந்ததாக நாட்டவர் மதித்தனர். ஜாதீயப் பித்தந்தெளிய, வட்டி வேந்தர்களின் கொட்ட மடங்கிட, படாடோப எண்ணங்கள் பொடிபட அங்கே திட்ட மிருப்பதைக் கண்டு புதுமையாளர்கள் பூரித்து நின்றனர். உலகம் பலவித மென்பதைப் பாட்டு மொழியிலே கூறிய அந்த ஒப்புயர்வற்ற சிந்தனைச் சித்திரத்தை புது உலகத் தூதுவர்கள் வர வேற்றுக் கொண்டிருந்த போதுதான்... பாராட்டக் கடமைப் பெற்ற பெரியார் கடுமையாகத் தாக்கலானார். இயக்கம் எந்த சமுதாய அரசியல் கொள்கையைக் கொண்டிருக்கிறதோ அதற்குக் கொஞ்சமும் மாறாத முறையிலே

திரைச் சித்திரம் தீட்டி முதல் முதலிலே அரங்கத்துக்கும் கொண்டு வெற்றி பெற்ற அண்ணாவின் மேதைத் திறத்தைப் பாராட்டுவதற்கு பதிலாக நிந்திக்கத் துவங்கினார். நிந்தனை கேட்டுத் தளரவில்லை அண்ணா. திரைப்பட அரங்குகளிலே பொழுதை ஓய்வாகக் கழிக்க வந்தவர்கள் காசையும் கொடுத்து விட்டு, கழகக் கருத்தையும் கேட்டுச் செல்லுகிறார்களே யென்ற மாற்றுக் கட்சி நண்பர்களின் உரையைக் கேட்ட போது...தலைவரின் நிந்தனை யெல்லாம் மறைவாக நினைத் தார் எதிர் முகாமிலிருந்த கல்கி போன்ற எழுத்து வேந்தர் களே 'தமிழ் நாட்டின் பெர்னார்ட்ஷா' என்று வர்ணிக்கத் துவங்கினர்.

'லண்டன் நகரில் கொடுங் குற்றங்கள் செய்வதையே தொழிலாகக் கொண்ட உண்மையான குற்றவாளிகள் ஐம்பது நபர்கள் கூட இருக்க மாட்டார்கள். ஆனால் போதிய உண வின்றி, கட்டத்துணியின்றி தூய்மை துறந்து, துன்பம் நிரம்பி யுள்ள லட்சக் கணக்கான வறுமையாளர்கள் அங்கே இருந்து வருகிறார்கள் அவர்கள், நமக்கு எல்லா வகையிலும் கேடு சூழ்கிறார்கள் முட்டாள்தான் குற்றங்களைக் கண்டு அச்சம் கொள்வான் ; நாம் அனைவரும் வறுமையைக் கண்டு தான் அஞ்ச வேண்டும். உணவு, உடை, உறையுள், குடிக்கூலி கூலி, மதிப்பு, மக்கள் ஆகிய ஏழு பயங்கரமான கேடுகள் மனிதனிடம் மறைந்து கிடக்கும் உயர்ந்த பண்பை வெளிப்பட விடாமல். மனிதனின் கழுத்தை அழுத்தி நெறித்துக் கொண்டு இருக்கின்றன. இந்த ஏழு கேடுகளை அகற்றி, மனிதப் பண்பை விடுவிக்கும் ஆற்றல் பணம் ஒன்றுக்குத்தான் உண்டு என்ற தத்துவத்தை பெர்னாட்ஷா மேஜர் பார்பாரா (Major. Barbara) என்னும் நாடகத்திலே சித்தரித்தார். அண்ணா தீட்டிய 'ஓரிரவு' 'நீதி தேவன் மயக்கம்' 'சிவாஜி கண்ட இந்துராஜ்ஜியம்' போன்ற நாடகங்களிலே ஷாவின் தத்துவங் களையும் மிஞ்சுகின்ற அளவிலே புதுமைக் கருத்துக்கள் கொஞ்சின. இந்தக் காரணங்கொண்டேதான் மாற்றான் மல்லிகைத் தோட்டத்திலே மணமில்லை யென்று கூறிடும்

விசித்திர சித்தர்களாக இல்லை வேற்றிடமிருந்த புகழுக்குரியவர்கள். இயக்கத்தின் அருமைக் கொள்கைதனை ஏற்றுக் கொள்ளாதார் கூட அண்ணாவின் பேனா முனை வலிவைக் கண்டு மயங்கி அவர்களையு மறியாமலே வரவேற்ற நிகழ்ச்சி நடந்தது. கல்கி அவர்கள் அண்ணாவை ஷாவிற்கு உவமை காட்டிப் பேசிய தன் மூலமாக பல உண்மையை எடுத்துக் காட்டி விட்டார். ஷா 'Mrs. Worrens Profession' என்ற நாடகத்தை தீட்டியபோது, அந்த நாடகத்தை நடத்தக்கூடா தென்று அரசினர் தடை விதித்தனர். அத்தடையைப் பற்றி எழுந்த பார்லிமெண்டரி கமிட்டி முனபு ஷா தனது கொள் கையை விளக்கி தெளிவு படுத்தினார். ஷாவின் புரட்சிகர மான கருத்துகள் சீமான்களின் உல்லாச வாழ்வுக்கு சாவு மணி யடிப்பதாக ஆட்சிபீடமே அலறியதுண்டு. அந்தப் போக்குத்தான் இங்கே அண்ணாவின் நாடகங்களுக்கும், எழுத்துக்கும் ஏற்பட்டன. நீதி தேவனைக்கண்டு நிலை குலைந்தனர். ஆரிய மாயைக் கண்டு மருண்டனர். கல்கி ஷாவைக் குறிப்பிட்டுச் சொன்ன தன் கருத்து தெளிவாகிற தல்லவா ?...

இத்தகு சிறப்புகள் பளிச்சிட்டு புது மெருகு தேங்கிய போதுதான் பெரியாரின் 'பல்லவி' முடியாமலே—துவளாமலே, தொடர்ந்து கொண்டிருந்தது.

ஷா தனது 'மனிதனும் சிறந்த மனிதனும்! என்ற நூலிலே சிறந்த மனிதனை...எவ்வொரு தனி மனிதரும் குறுகிய பார்வை கொண்டு, சுயநலத்துக்கு உழைத்து, வாழ்வின் லட்சியத்தைக் கெடுத்து வருவது போல் இல்லாமல்' என்று வர்ணித்துக் காட்டியுள்ளார். அது போன்ற சிறந்த பண்பு நிறைந்த கருத்துக்கள் தான் அண்ணாவின் இதய மெங்கும் தேங்கிக் கிடந்தது. தலைவர் தாக்கியும் கூட 'உயர்ந்த இலட்சியத் துக்காக இடையறுது உழைப்பதில் தான் ஒருவன் உயிர் வாழ் வதின் பெருமை முழுவதும் அடங்கிஇருக்கிறது' என்ற ஷாவின்

தத்துவப்படி உயர்ந்த இலட்சியம் ஒன்றைமட்டுமே அண்ணு வின் மனம் நாடியிருந்தது.

மேலை நாட்டு மேதைகளின் கருத்தோவியங்களோடு அண்ணுவின் சிந்தனைச் சித்திரங்களை ஒப்பிடும் அளவிற்கு சிறப்பிடம் பிறந்தது. பிரெஞ்சு நாடக உலகம் மோலியரிட மிருந்து தெரிந்ததைவிட, அண்ணுவிட மிருந்து தென்னக நாடக உலகம் மிக அதிகமாக தெளிவையும் தூய கருத்தையும் பெற்றது. ஜெர்மானிய இலக்கிய உலகிலே ஹான்ஸ் ஸாக்ஸ் செய்த சீர்திருத்தத்தை நாடறிந்ததாகும், சமய சம்பந்தப் பட்ட புராணப் புளுகால் நாடடைந்த நலிவை ஹான்ஸ் ஸாக்ஸின் எழுத்தோவியங்கள் தகர்த் தெறிந்தன. மாட மாளிகை வாசிகளே சொந்தங் கொண்டாடிய நாடக இலக்கியம் ஸாக்ஸின் பெரு முயற்சியால் கூட கோபுரங் களுக்குக் கீழிருந்த குப்பைத் தொட்டிகளோடு போராடி வாழ்ந்த உழைப்பின் உருவங்களைச் சொந்தங் கொண்டாட வைத்தது. ஏழையின் வாழ்வு கதையாகி அரங்கேறி ஆடியது. அங்கே மதத்தரகர்கள் கோயில் குருநாதர்கள் ; அவர்களை யெல்லாம் பக்கத்துணையாக்கிக் கொண்ட சீமான்கள் சந்திக்கு இழுக்கப்பட்டு கேலிக்கு ஆளாக்கப்பட்டனர்.

இது போலவே கதே என்ற மேதையும் நாடகங்கள் பல வற்றை எழுதி நல்ல பல கருத்துக்களை நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக ஆக்கித் தந்ததோடு நடிப்பிலே அவனும் ஈடுபாடு கொண்டு மக்களின் மன நிலையை சித்தரித் திருக்கிருன். பார்! பார்! பவுடர் பூசித் திரிகிருன். இவனே மேதை! இவனிடம் நாடு இதைத்தான எதிர்பார்த்தது? என்று பரிதாபக் குரலிலே அங்கே யாரும் பேசிட வில்லை. மக்களின் வாழ்வுக்காக எதையுமே ஏற்கத் துணிந்த அந்த மாமேதையை வானுயர வாழ்த்த மட்டுமே அவர்கள் கற்றிருந் தனர். அத்தகைய பண்பு சிறந்த மக்களிடையே அவன்

வாழ்ந்தான், அவர்களுக்காகவே சிந்தித்தான். இது அங்கே முடிந்தது.

இவனைப் போலவே பெனவெண்டே என்ற பேரெழுத்தாளன் ஸ்பெயினிலே வாழ்ந்து, மக்களின் இலக்கியங்களையே படைத்து துதி பாடப்பட்டான். நாட்டின் செல்வங்களால் ஸ்பெயினிலே. பெனவெண்டே நோபல் பரிசு பெறுமளவுக்குச் சிறப்புப்பெற்றவன். ஸ்பெயின் மக்களின் மூட நம்பிக்கை இவனது எழுத்துக்களால் முறியடிக்கப்பட்டதை ஆதிக்கம் அலறிக்கொண்டே ஒப்புக்கொண்டது. ஸ்பெயின் கலைவானிலே இருந்த காரிருள் பெனவெண்டேயின் வரவால் கொஞ்சங் கொஞ்சமாக மறையத் துவங்கியது. கலை உணர்ந்த ஸ்பெயின் மக்களின் உள்ளத்திலே மட்டுமல்ல 'கடல் கடந்த நாடுகளிலிருந்த மலர்ந்த உள்ளங்களையெல்லாம் அவனால் தொட முடிந்தது.

முசாட்டோவும் புகழுடைய முடிந்தது. சாதாரண மக்களின் ஒவ்வொரு உணர்ச்சிகளையும் அவனது ஆர்வ எழுத்துக்கள் பிரதிபலித்ததால் நாடக, சீர்திருத்தையே குறிக்கோளாகக் கொண்டு எழுதிய பென்ஜான்ஸனின் Every Man in his humour Voi Pone Bartholomea Fair போன்ற நாடகங்கள் மக்களின் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கின்றன அடிசன் எழுதிய Drummer என்ற நாடக இலக்கியமும் நாட்டு மக்களைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது இவையெல்லாம் மக்கள் மன்றத்திலே, ஜனநாயகம் குரல் கொடுக்கும் இதயங்களிலே ஒளிதருவதை நாடறிதந்தாகும். இத்தகைய அரும்பணிகளின் ஆக்க கர்த்தாக்களைப் போலவே தென்னகமும் அண்ணாவை மதிக்க முடிந்தது ஆனால் அவர் நம்பியிருந்த கட்சித் தலைவர்......

அது...ஆராய வேண்டிய பிரச்சினையாகிவிட்டது. தீட்டப்பட்ட ஓவியமோ மிகமிக உயர்ந்தது. அதைத் தீட்டுவதற்காக எடுத்துக்கொண்ட சிரமமோ மிக அதிகமானது. இருந்தாலும்

பாராட்ட வேண்டியவர் தூற்றித் திரிகிருரே என்ற கவலையை விட......இந்தப்போக்கு வளர்ந்தால், கட்சியியே வளர வேண்டிய ஜனநாயகம் மலராமலே போய் விடுமேயென்ற தத்துவந்தான் அண்ணுவின் இதய மெங்கும் குடிபுகமுடிந்தது. வீரம் பொங்கிய இந்த ஆற்றலசரின் முன்னே கட்சித் தலைமையின் ஆதிக்கம் வேங்கையென நேரே சந்திக்க வில்லை. சந்து பொந்துகளிலே பகிங்கிப் பதுங்கி கடு விஷந்தாங்கிய நாகம் போல நகர்ந்து கால்களைக் குறி பார்த்து வந்தது.

இந்த நேரம் பார்த்துத்தான் இந்திய சுதந்திரம் வந்தது. இந்திய சுதந்திரனமாகிய ஆகஸ்டு பதினைந்தாம் தேதியை துக்கதினமாகக் கருதும்படி பெரியார் அவர்கள் கருத்தறிவித்தார்கள். நாட்டின் ஜனநாயகப் போக்கிலே கவனம் செலுத்தி யிருந்தவர்களுக்கு பெரியாரின் அறிவிப்பு குழப்பத்தைத் தந்தது. குறிப்பாக அண்ணுவின் மனநிலை தலைவரின் போக்கால் வேதனைக் காளாகியது. தனது இதயத்தூய்மையை இந்தியத் துணைக்கண்டமும், இயக்கத் தோழர்களும் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக தனது இதழிலே 'ஆகஸ்டு பதினைந்து' குறித்து அண்ணு நீண்ட விளக்க மெழுதினுர்.

" ஆகஸ்டு பதினைந்தாம் தேதி, இந்திய சுதந்திர தினம். புதிய இந்திய சர்க்காரின் அமைப்பு நாள். ஆகஸ்டு பதினைந்தாம் தேதி. பாகிஸ்தான் வெற்றி நாள். பாகிஸ்தான் சர்க்கார் அமைப்பு நாள். ஆகஸ்டு பதினைந்தாம் தேதி பிரிட்டிஷ் ஆட்சி 'இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ஒழியும் நாள்.

உலகிலே, பேசப்படும் நாள் வரலாற்றில் இந் நாள் இடம் பெறுகிறது.

''என்ற சிறப்பினை கட்டுரைத் துவக்கத்திலே குறிப்பிடுவது போல இருண்ட மதியினருக்கு நாட்டு நடப்பு பற்றி புரிய முடியாதவர்களுக்கு விளக்கமாக எடுத்துச் சொன்னுர் அண்ணு.

''திராவிடர் கழகத்தாராகிய நாம் அன்னிய ஆட்சியாகிய ஆங்கில ஆட்சி கூடாதென்பதை வலியுறுத்தி வந்திருக்கிறோம் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி கடுமையாக நடைபெற்ற நேரத்திலே சென்னையில், நடைபெற்ற மாகாண (ஜஸ்டிஸ்)மா நாட்டில், பூரண சுயேச்சைத் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம்.

நாங்கள் காங்கிரஸை எதிர்க்கிறதாலேயே. சுயராஜ்ஜியத்துக்கு விரோதிகளல்ல—அன்னிய ஆட்சியை விரும்புபவர்கள் அல்ல, என்பதை ஆயிரமாயிரம் மேடைகளிலே பேசி இருக்கிறோம். வெள்ளைக்காரனை நீ நாளைக்கும் போ என்று சொன்னால், நாங்கள் இன்றே போ என்று கூறுகிறோம் என்று பேசி இருக்கிறோம்.

பிரிட்ஷ்ஏகாதிபத்திய ஆட்சி ஒழிய வேண்டும். ஒழிக்கப்பாடு படுவோம் பிரிட்ஷ் ஆட்சி நமக்கு கேடு பல செய்திருக்கிறது. எனவே நம்முடைய வெறுப்புக்கும் கண்டனத்துக்கு ஆளாக வேண்டியதேயாகும். என்பதை பன்முறை எடுத்துச் சொல்லி, நம்மை மற்றக் கட்சியினர் ஏகாதிபத்திய தாசர்கள் என்று கூறியது. வீண் பழி என்பதை எடுத்துக் காட்டி வந்ததுடன், போருக்குப்பிறகு வந்த ஆட்சி தானாகவே விலகும் என்று முன் கூட்டிய கூறிய நாம், அந்த ஆட்சி விலகும் நாளாகிய ஆகஸ்டு 15-ந் தேதியை, மகிழ்ச்சிதரக் கூடிய நாளகவே, – கருத வேண்டும்.

நாம் பிரிட்டிஸாரின் அடிமைகளல்ல என்பதை விளக்க நமக்கு இருக்கும் ஒரு நாள். கடைசி நாள் ஆகஸ்டு 15...

கழகத்திற்கான' கடைசி சந்தர்ப்பத்தைத் தலைவருக்கும், தோழர்களுக்குமாக சேர்த்து எடுத்து விளக்கியபோது, தனது சொந்த ஏட்டிலே விளக்கிடுமளவிற்கு சூழ்நிலை இருந்ததையும் தெளிவுபடுத்தினர். யாரையும் மதியாத போக்குக் கொண்டோ வேண்டுமென்றே குற்றம் சாட்ட வேண்டுமென்ற விநோத ஆசை யாலோ அப்படித் தனது அறிவிப்பை அமைத்துக்

கொள்ளவில்லை யென்பதை தனது நெஞ்சைத்தொடும் வரி களால் கோடிட்டுக் காட்டினார் அண்ணா.

"கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து பேசியோ, நிர்வாகக் கமிட்டி கூடியோ, இருந்தால், இந்த நிலை ஏற்பட்டிராது. தலைவரின் அறிக்கை ' நிர்வாகத் தலைவரின் அறிக்கை, விடுதலையில் அறிக்கை, என்ற முறையிலே திடீர் திடீரென வெளிவந்தன. எனவே தான், நான் எனது கருத்தை விளக்கச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை — அதை வெளியிட பத்திரிகையில் எழுதுவது அவசியமாகி விட்டது...

பத்திரிகையில் எழுதியதின் அவசியத்தைப் பணிவோடு தெரிவித்த அண்ணா, தலைவரின் பிடிவாதப் போக்கைப்பற்றி, பழைய கருத்தை மாற்றிக்கொள்ளும் சந்தர்ப்பத்தையும் அழகு பட எடுத்துச் சொன்னார் தலைவர் மறந்து விட்ட காரணத்தினாலல்ல 'துகக் நாள்' பற்றிய திட்டத்தை எப்பாடுபட்டாகிலும் அவர் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டு மென்பதற்காகத்தான்.

"இவ்வளவு தூரம் ஆகஸ்டு 15-ந் தேதியை துக்க நாள் என்று அறிக்கைகள் மூலம் வெளியிட்டு விட்டு, இனி எப்படி அதனை மாற்றுவது என்று கேட்பதானால், இப்போது காலம் கடந்து விட வில்லை. இனியும் மாற்ற முடியும். என்பதை விளக்க விரும்புகிறேன்

சில ஆண்டுகளுக்கு முன்பு, கம்பராமாயணத்தைக் கொளுத்துவதற்கெனப் பெரியார் அறிக்கை வெளியிட்டு, விசேஷ மாநாடு சேலத்தில் கூடப்பட்டது. நான் தலைமை வகித்தேன். காலை நிகழ்ச்சியிலே கூட. கம்பராமாயணம் கொளுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியே சொற்பொழிவுகள் நடைபெற்றன. பிற்பகலிலே. சர். சண்முகம் தந்தி கொடுத்தார். கொளுத்த வேண்டாம் என்று. அதன் படியே கொளுத்துவது அதே இடத்தில், அதே நேரத்தில் கைவிடப்பட்டது.

அது சரியா, தவறு என்பது அல்ல, இப்போது பிரச்சனை. அந்தக் கடைசி நேரத்திலேயும், செய்ய வேண்டுமென்று கருதப்பட்ட காரியம். வேறு ஒருவரின் யோசனையின்படி. கைவிடப்பட்டது.

ஆகவே. ஆகஸ்டு 15-ந் தேதி பற்றி திராவிடர் கழகம், தன் கருத்தை இந்த நேரத்திலும் மாற்றிக்கொள்ள முடியும் மாற்றிக்கொள்ளலாம்—முறையுங் கூடத்தான் அதற்கு முன் மாதிரியாகச் சேலம் சம்பவம் இருக்கிறது.

ஆனால் ஒரே ஒரு வித்தியாசம் சேலத்திலே கம்பராமாயணத்தைக் கடைசி நேரத்தில் ஒரே தந்தியின் மூலம் கொளுத்த வேண்டாமென்று கூறியவர், ஒரு சர். நான் ஒரு சாமான்யன். அவர் கட்சிக்காக--ஓய்வு நேரத்திலும் உழைத்ததில்லை. நான் உழைத்து அலுத்தவன், அவர் இன்று இந்திய சர்க்காரிலே நிதி மந்திரி ! நானோ. இதே அறிக்கையின் விளைவாகவே கூட உங்களில் பலராலே கூட, சந்தேகத்துக்கும் நிந்தனைக்கும் ஆளாகக் கூடிய நிலையில் உள்ளவன் ஆனால் நான் கூறுவது. உள்ளத்திலிருந்து வருபவை.

உள்ளக்கருத்தைத் தெள்ளத் தெளிய எடுத்துச் சொல்லிய அண்ணா, கட்சியிலிருந்து வரும் தமது பாங்கினை, சந்தேகக் கண் படைத்தவர்களே—வெட்கு மளவுக்கு விளக்கினார்.

"இவ்வளவு கூறும் நான், இதற்கு முன்பு கழகம் எடுத்துக் கொண்டஎந்த முக்கியமான திட்டத்துக்கும் வேலை முறைக்கும் கட்டுப்படாமல் இருந்து வந்தவனல்ல. கழகம் நெருக்கடியான கட்டத்திலே இருந்த போதெல்லாம், விட்டு விட்டு ஓடினவனல்ல ; பட்டம் பதவிகளை வைத்துக் கொண்டு, விட்டு விட முடியாது என்று கூறினவனல்ல. தேர்தலுக்கு நிற்கக் கூடாது என்று கட்சி தீர்மானித்த பிறகு, மீறித் தேர்தலுக்கு நின்றவனல்ல ; சிறைபுக வேண்டிய திட்டம் வந்த போது, ஒளிந்து கொண்டவனுமல்ல ; கட்சிக் குள்ளாகவே சேலம் மாகாண மாநாட்டின் போது செல்வவான்களின் மயக்க மொழியில் வீழ்ந்தவனல்ல—இதுவரை வழுக்கி விழுந்து

தில்லை—திட்டங்களைக் கண்டித்ததோ மாற்ற வேண்டுமென்று கூறினதோ—கட்டுக்கு அடங்க மறுத்ததோ இல்லை. ஆனால் இந்த ஆகஸ்டு 15-ந் தேதிபற்றிய பிரச்னை, உண்மையாகவே என் போல் எண்ணற்றவர் கட்கு மனவேதனை தரக்கூடிய விதத்திலே தவறான முறையிலே திருப்பப்பட்டிருக்கிறது. ஆகவேதான்...........அதற்காக அறிக்கைகள் வெளியிட்டு, வருவது, தவறு என்று தெரிவிக்கலானேன்.

ஜனநாயகத் தத்துவத்திற்கு சாவு மணி அடிக்க இருந்ததைக் கேட்கச் சகியாக அண்ணா கட்சியிலிருந்து கிளம்பக் காத்திருந்த பெரும் புயலை நினைத்துத்தான் 'பிரிட்டிஷ் ஆட்சி கூடாது என்ற கொள்கையைக் கொண்டவனே. நான் என்பதை மக்களுக்குக் கூற எனக் கிருக்கும் ஒரே நாளான, கடைசி நாளான, ஆகஸ்டு 15-ந் தேதியின் முக்கியத்துவத்துக்காக வேண்டி கட்சியின் கடுமையான நடவடிக்கைக்கும் சம்மதிக்க வேண்டியவனாகிறேன், தலைவரும், கட்சியும் என் போக்கு தவறு என்று கருதி, என்னைக்—கட்சியை விட்டு நீக்கினாலும் நான்' சமூக சீர்திருத்தம் பொருளாதார சமத்துவம். திராவிடத் தனிஅரசு, எனும் அடிப்படைக் கொள்கைகளைக் கட்சிக்கு வெளியே இருந்தாகிலும் செய்துவருவேன் என்பதைக்கூறி இந்த அறிக்கையை முடிக்கிறேன்.' என்று குறிப்பிட்டு இளங்காளையர்களின் கண்களைக் குளமாக்குகின்ற முறையிலே கடைசி வரிகளை முடித்திருந்தார்.

அண்ணாவின் அறிக்கையைப் படித்த சகலகட்சிகளிலுமிருந்த நியாயத் தெளிவுகொண்டோர் அண்ணாவின் விடுதலை வேட்கையையும், சுத்த சுயமரியாதை வீரனுக்குரிய பாங்கோடு தலைவர் கொள்கையை மாற்றிட வேண்டுமென்று வாதாடிய உரிமையையும் நினைத்து பாராட்டிக்கொண்டிருந்தனர். ஆனால் அதேபோது தலைவரும் அவரது போக்கே சரியென்று நம்பிக் கிடந்த அவரது

மூடிக் கொண்டு அவரைப் பின்பற்றியவர்களைத் தவிர மற்ற செயல் வீரர்கள் அண்ணாவின் புதுயுக சிந்தனை குறித்து எண்ணிப் பார்க்கத்துவங்கினர். கொள்கையே பேச்சாகவும் அதை நடைமுறையாக்கிடும் நோக்கையே மூச்சாகவும் கொண்டு காடு மேடு சுற்றி வந்த கழகக் காளையர்களின் உள்ளங்களிலிருந்து: அண்ணாவின் குரல் ஒலிக்கத் துவங்கியது.

கலை அறிஞர் கருணாநிதி, பேராசிரியர் அன்பழகன் பதி, சி. பி சி. என். வி. என்ர். போன்ற முன்னணித் தோழர்கள் வளையமிட்டு நின்றனர் அண்ணாவைச் சூழ்ந்து, இந்தக் காட்சியை ஒரு கோஷ்டி மனப்பான்மையாக மற்றவர்கள் சிருஷ்டித்தாலும், நேர்மையுள்ளங் கொண்டவர்கள் அண்ணாவின் பாதைச் சிறப்பு குறித்தே நினைத்து முடிவெடுத்தார்கள்.

ஆகஸ்டு பதினைந்துக்குப் பிறகு...சூறுவளியும், பெருமழையும் வீசியடித்துங்கூட பெரியாரின் 69-வது பிறந்த நாளன்று இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும் ?' என்று கருத்துச் சித்திரத்தை அண்ணா அவர்கள் அழகுபட தீட்டி பெரியாரின் பெரும்பயணத்தை விளக்கியிருந்தார்கள்.

"காஞ்சிபுரத்திலே, கூடிய காங்கிரஸ் மாநாட்டிலே பெரியார், போர் முரசு கொட்டிவிட்டு வெளிக்கிளம்பினார். அன்று துவக்கிய பயணம், இன்றும் ஓய்வின்றி நடைபெற்றவண்ணமிருக்கிறது.

இப்போது அவருக்கு வயது 69. இதற்கிடையே, அவர் சுயமரியாதை இயக்கங்கண்டார், சமதர்மப் பிரசாரம் செய்தார் ஜஸ்டிக் கட்சிக்குப் புதுவாழ்வு தந்தார், திராவிடர் கழகமாக்கி இன அரசு பெறவேண்டும் எனும் இலட்சியத்தை உருவாக்கி, அதனை நாட்டினர்க்கு எடுத்து கூறிவரும், பல வெற்றிகளைப் பெற்றிருக்கிறார் இவ்வளவு நீண்டகாலம், பொதுவாழ்வில் இருக்கும் வாய்ப்பு, ஒரு சிலருக்கே கிடைத்திருக்கிறது, ஆச்சாரியார் ஓர் எடுத்துக்காட்டு. ஆனால் அவருடைய பொதுவாழ்விலே ரோஜா அதிகம், முள் குறைவு. பெரியாருக்கோ'

கள்ளி காளான் நிறைந்த பாதையிலே நடந்து சென்று புதுக் கழனி தேடுவது போன்ற பொதுவேலை — இதிலே அவர் இவ் வளவு நீண்டகாலம் ஈடுபட்டிருப்பது, ஆச்சாரியார், இருப் பதை விட விசேஷமான சம்பவம், என்பதில் ஐயமில்லை. ஆச் சாரியாருக்கு, பொதுவாழ்விலே இருந்த அபிலாஷைகள் ஏறக் குறைய வெற்றியாகிவிட்டன. காங்கிரஸ் நாடு ஆள்கிறது— அவர் வங்கத்தை ஆள்கிறார்.

இனி அணி பணி செய்யும் காரியமிருக்கிறது. அதனைச் செய்யும்படி, வழி வகுத்துத்தரும் வேலைதான் பெரியாருக்கு. பெரியாருக்கு கிடைத்திருப்பது போன்ற ஆர்வமிக்க இளைஞர் கள் திராவிடத் தலைவர்களிலே வேறு யாருக்கும் கிடைத்த தில்லை. ''இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும் ?'' என்று மனோன்மணிய ஆசிரியர் — கூறியதுபோல, பெரியார், நம்பிக் கையுடன் கூறலாம் — கூறவேண்டும் தமது பெரும் படையினை 'இங்கு செல்! அதை செய்! என்று கூறி, அப்படை பெரும் வெற்றி கண்டு, மகிழவேண்டும் வயது 69 ! வாலிப வீரர்கள். பலப்பல ஆயிரம் அவரை சுற்றி! அவருக்கு இனியும் ஓயாத உழைப்பா ! அவருடைய பெரும்படைக்கு, அவர், பொறுப்பும் ஆசியும் அளித்து. அனுப்ப வேண்டும் இன்னின்ன செயலைப் புரி என்று.

திராவிடநாட்டின் விடுதலைக்காக செய்யப்பட வேண்டியது இன்னின்ன வகை என்று கூறி, யாருக்கும் இதுநாள் வரை கிடைத்திராத கண்ணலமற்ற திராவிடப் படையினருக்கு, வேலைகளைப் பெரியார், பகிர்ந்தளித்து விட்டு —''பாரீர், என் படை புரியும் செயலை என்று பெருமிதத்துடன் கூறலாம்.''

இப்படி எழுதிய அண்ணாவின் எழுத்தோவியத்தைப் படித்த பெரியாரின் பிரதி பிம்பங்கள் .. அண்ணா தலைவருக்கு புத்தி சொல்வதாக கூப்பாடு போட்டனர். அண்ணா கூறியதன் கருத்து பகுத்தறிவுப் பல்லக்கைத் தூக்குவதற்கு பல ஆயிரம் பேர் காத்திருக்கும் போது, தலைவர் மட்டும் தள்ளாத வயதில்

தனியாகப் பல்லக்கைத் தூக்கச் செல்வானேன் என்ற கவலை கொண்டுதான் கூறினர். ஆனல் பெரியாரின் நேசர்கள் அந்த கருத்துக்கு தேவையில்லாத அர்த்தத்தை கொண்டுவிட்டனர். அண்ணவின் ஆலோசனைகள் தவருனவை என்று வாதமிட அவர்களில் யாருமே முன்வரவில்லை யென்பது குறுப்பிடத் தக்கதாகும்' பெரியாருக்கு புத்தி சொல்வதன் மூலமாக அவரது நடைமுறைக் குறைப்பாட்டை அண்ணுதுரை விளக்கி வைத்து விட்டுப் போய் விடுகிருர் என்ற அளவிலே மனக் குடைச்சல் அவர்களுக்கு. 'கட்டளையிடு ... காத்திருககிரும்' என்று சொல்லிய அண்ணவின் பெருந்தன்மையும், செயல் வேட்கை யும் அவர்களுக்குப் புரியாமலே போய்விட்டது. காண வேண்டிய காட்சியைக் கண்டு, பெறவேண்டிய கருத்தைப் பெருமல் புதிய தத்துவத்தைக் கண்டு கொண்டதாக வீண் கர்வம் கொண்டனர் எத்தனை பெரிய தலைவர் ...... இத்தனை வயதிலும் இப்படி இடுப்பொடிய பாடுபடுவதா ?' என்ற அண்ணவின் நினைப்பை இயக்கத் தலைமைக்கு தன்னை தயார் படுத்திக் கொண்டு மகுடத்துக்காக காத்துக் கிடப்பதாக விமரி சித்தனர்.

தாமரை இலைகளுக்கு மேலிருந்த நீர்த் துளிகளின் தவிப்பு பலருக்கு புரிந்தது. முள் புதருக்கிடையே மலர்ந்து கண்ணை யும், கருத்தையும் கவர்ந்த அழகு ரோஜாக்களின்,அணிவகுப்பு பலரது சிந்தனைக்கு வேலை தந்தது. வண்ணங்காட்டிச் சிரித்த காகிதப் பூக்களைப் பற்றி நாடு நன்ருகத் தெரிந்து வந்தது. எண்ணங்கவர்ந்து எழுச்சி மணந்தந்த அண்ணவின் சேவைக்கு முன்னே எத்தனை வகையோ நெடி ஏற்ற முயற் சித்தும் முயன்றவர்கள் முக்காடிட்டு மூலையிலே பதுங்கத்தான் முடிந்தது, 20ந்-தேதி வாலாஜாபாத் உயர்நிலைப் பள்ளி அமைப்பு நிதிக்காக 'நீதிதேவன் மயக்கம்' நாடகம், 23ந்- அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேரவையின் தொடக்க விழா, அண்ண தோழர் மதியின் தலைமையிலே

"நிலையும் நினைப்பும்" எனும் தலைப்பிலே கருத்து நிறைந்த சொற்பெருக்காற்றினர். இந்த அளவிலே நாள் தவறாமல் நிகழ்ச்சிகள் உருவெடுத்துக் கொண்டிருந்தன. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு அண்ணா எழுதிய கருத்தோவியங்களெல்லாம் புதிய மகுடமிட்டு எழிலோ ஏற்றத்தோடு பதிப்பிக்கப் பெற்று தொடர்ந்து புத்தங்களாக வெளிவரத் துவங்கியது. இந்தக் காலத்திலேதான் தென்னகத்தின் எந்த நூலகத்திலுமே அண்ணாவின் புத்தகங்களே அழகுசெய்து, அறிவுப் பணியாற்றுவதிலே முன்னணியிலே நின்றன.

எழுத்து நடையிலும், பேச்சிலும் அண்ணாவின் சகாப்த என்று கூறும் அளவுக்கு முன்னணி இளைஞர்களின் பேச்சிலும் எழுத்திலும் அந்த முத்திரை பதிந்தது. அண்ணா திருச்சி, சென்னை வானொலி நிலயத்தாரால் அன்புடன் அழைக்கப்பட்டு நடத்தப் பெற்ற சுவைமிகு சொற்பொழிவு நிகழ்ச்சிகள் சிந்தை கவரும் விதமாக அமைந்தன.

"மேடைப் பேச்சு" என்னை கவர்ந்த புத்தகங்கள் 'பத்திரிகைத் தொழில் பொது சேவையா — சொந்தத் தொழிலா ?" என்பவை போன்ற தலைப்புகளிலே அவர் வானொலியில் ஆற்றிய சொற்பொழிவுகளும் விவாத மேடை விளக்கும் அண்ணாவின் ஆற்றலை நாட்டிய நன்கு உதவியது. People's Poet என்ற தலைப்பிலே அண்ணா வானொலி நிலயத்திலிருந்து ஆற்றிய ஆங்கில உரை உலக மொழியாம் ஆங்கிலம் புரிந்த அத்தனை பேரும் போற்றிப் புகழ்ந்திடும் முறையிலே அன்றிலிருந்து இன்றுவரை ஒலியநத்தோடு கருத்துப் புலமையோடு எதிரொலித்துக் கொண்டிருப்பதை காயும் உள்ளம் இழந்தோர் உணரக்கூடியதாகும்.

கட்சியிலிருந்த சந்தேகத்துக்கு இடமளித்தோர் அண்ணா சகல துறைகளிலும் இலாகவமாகப் பெற்றுவரும் வெற்றி கண்டு சஞ்சலத்திக்கு ஆளாகினர்' அந்த நேரம் பாரைக் குலுக்கிய நிகழ்ச்சி நடந்து முடிந்தது. உலக உத்தமர் காந்தி

யடிகள் கொடியவன் கோட்சேயின் கைத்துப்பாக்கிக்கு ஆளாகி உயிர் கொடுத்து அமரராகிய வேதனை வரிகள் சரித ஏடுகளிலே கண்ணீரைக் கலந்து எழுதப் பட்டது. அப்போது அண்ணா 'உத்தமரை இழந்தோம்—உலகம் எங்கும் அழுகுரல் என்ற துயர காவியத்தைத் தீட்டி அழுத நாட்டு மக்களைத் தேற்ற முயன்றார். திசை தெரியாது தேம்பித் திரிந்த மக்களுக்கு அண்ணாவின் அமைதி நிறைந்த ஆறுதல் புதிய தெம்பையளித்ததை யாரும் மறக்க முடியாததாகும்

"முப்பதாண்டுகளாக எந்த ஏகாதிபத்தியத்தின் மீது அவர் தாக்குதலை நடத்தினாரோ, அந்த ஏகாதிபத்தியம் செய்யத் துணியாத காரியத்தை, எவனை ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுவித்தாரோ, அவன், செய்திருக்கிறான். தீயிலே வீழ்ந்த நாகத்தை வெளியே எடுத்துப் போட்டால், பாம்பு அவனையே தீண்டும் என்பார்கள்: இந்தப் பாவியின் செயல் அதைவிடக் கொடுமை நிரம்பியது.

காந்தியடிகள் [illegible] ஆளாகியதை இதைவிட எளிய நெஞ்சை தொடும் முறையிலே அதுவரையிலோ, அதற்குப் பிறகோ யாரும் எடுத்துக் காட்டவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்

"இந்தியா என்றோர் நாடுண்டு, அங்கு ஏலம் கிராம்பு பெறுவதுண்டு, பொன்னும் பொருளும் மிக உண்டு, போக்கறியாதார் நிரம்ப உண்டு, என்ற அளவில் பதினொரும் நூற்றாண்டில் உலகம் அறிந்திருந்தது. பிறகு... காந்தியார் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே இந்தியா என்றோர் நாடுண்டு, அங்கு விழிப்பும் எழிச்சியும் உண்டு என்று உலகம் அறிந்து கொள்ள முடிந்தது."

காந்தியடிகளை காங்கிரஸ் நண்பர்களே இப்படி உலகினருக்கு படம் பிடித்து காட்டியிருக்க முடியாது; அந்த மா பெரும் பணியினை அண்ணாவின் பேனா முனை சிறப்பாக செய்து முடித்தது.

அன்று விஷம்! இன்று துப்பாக்கி! அன்று மெலிடஸ்; இன்று கோடசே! இந்தக் காட்டுமுறையை அடியோடு ஒழித்து கட்டாவிட்டால், நாட்டில் உள்ள நாம் எப்படி காட்டிலே உள்ள மிருகங்களை விட மேல் என்று கூறிவிட முடியும்—எதிலே நாம் மேலானவர்கள்......மிருகத்தையும் மனிதனையும் படம் பிடித்துக் காட்டினார் அண்ணா.

"இன்று நாட்டிலே அமைதி நிலவ' வதந்திகளை ஒழிக்க ஒற்றுமை வளர்க்க ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும். நாட்டுக்கு நாம் செய்யக் கூடிய உண்மைத் தொண்டு இன்று அதுவே" என்று ஏட்டின் மூலமாக அறிக்கை தந்த அண்ணாவின் அரும்பெரும் யோசனையின் சக்தியை காலப் போக்கிலே தான் நாட்டவர் உணர முடிந்தது. அன்று அண்ணாவும் அவர் தம் அறிவுப் படையினரும் புயல் வேகத்தில் நாட்டிலே பிரசாரம் புரிந்திருக்காவிட்டால் 'நாட்டிலே அமைதி நிலவ, வதந்திகளை ஒழிக்க, ஒற்றுமை வளர்க்க, நிச்சயமாக முடிந்திருக்காதென்பது நாடறிந்த செய்தியாகும். உத்தமர் பிரிவால் நாடு அடைய இருந்த நாசப்போக்கையும். ஜாதியின்மனமாச்சரியங்களையும் அண்ணாவின் பேச்சும், எழுத்தும் தடுத்து நிறுத்தியதை வரலாறு மறக்க முடியாத வரிகளால் ஆக்கிக் கொண்டது. காந்தியடிகளின் கொள்கை கோட்பாடுகளுக்கு மாறுபட்டு பேசியும், எழுதியும் வந்த அண்ணா அடிகளது பிரிவிற்குப் பிறகு நாட்டின் அமைதிகாக்க முன்கரமெடுத்ததை நல்லவரின் நெஞ்சம் வாழ்த்தி வணங்கி வரவேற்றது.

மற்ற பல கட்சிகளின் தலைமைப் பீடத்தை அலங்கரித்த நல்லவர்களின் உள்ளங்களிலே அண்ணாபற்றிய எண்ணம் சிறந்தது. உத்தமர் காந்தியடிகளின் பிரிவிற்குப் பிறகு பெரியார் — அண்ணா உறவு நெருங்கி வரும் சூழ்நிலையாகத் தெரியத் துவங்கியது. திருவத்திபுரத்தில் நடத்த பொங்கல் விழாவிலே இரண்டாம் நாள் நிகழ்ச்சியியே பெரியாரும் மூன்றும் நாள் நிகழ்ச்சியிலே அண்ணாவும் அடுத்தடுத்து கலந்து கொள்ளத்

துவங்கினர். உறவும் அடுத்தடுத்து நெருங்கி வருவதாக நம்பிய நிகழ்ச்சிகள் உருவாகத் துவங்கின. அண்ணாவின் புதிய எழுத்தோவியமாக 'என் வாழ்வு' துவக்கப்பட்டது இந்த நேரத்திலேதான் இலட்சக்கணக்கான வாசகர்களின் நெஞ்சைத் தொட்டிழுத்த அந்த புதுமைக் காவியம் காலத்தால் அழியமுடியாத சிறப்பிடத்தைப் பெற்று நின்றது.

கழக வளர்ச்சியின் முன்னே ஆளும் வர்க்கத்தினர் நேரடியாக மோதவேண்டிய நேரம் வந்து சேர்ந்தது. 2-3-48ல் சென்னை மாநில அரசு இம்மாநிலத்தில் உள்ள கருஞ்சட்டை ஸ்தாபனத்தை தடை விதித்து, கிரிமினல் சட்ட திருத்தத்தின் 16-வது பிரிவின் கீழ் அறிவிப்பு செய்தனர். நாடெங்கும் அரசினர் வேட்டையாடுவது போல சோதனையிடத் துவங்கினர். சென்னையில, திராவிடன்' அலுவலகத்தில் போலீசார் புகுந்து கடிதங்களையும், 'திராவிடன்' பைலையும் எடுத்துச் சென்றனர். தோழர்கள் அரசு. ஆரியசங்கரன், அண்ணமலை ஆகியோரின் வீடுகளையும் சோதனையிட்டுச் சென்றனர். இது போலவே கோவில்பட்டியிலும், மதுரையிலும், காஞ்சிபுரத்திலும், பொன்மலையிலும் சேலத்திலும், வேலூரிலும், கடலூரிலும், இன்னும் எங்கெங்கு கழகக் கொடி பறந்தாடுகிறதோ அங்கெல்லாம் போலீசார் தர்பார் நடத்தி முடித்தினர். நள்ளிரவிலே ஈரோட்டிலிருந்த பெரியாரின் வீட்டையும், 'குடியரசு' ஆபீசையும் சோதனையிட்டு சில பைல் களை எடுத்துச் சென்றனர். அப்போது பெரியார் அவர்கள் நம் இயக்கத்தில் திராவிட கழகத்தில் உள்ளோருக்கு கருஞ்சட்டை அணிய வேண்டுமென்று வேண்டுகோள் விட்டதானது, திராவிட சமுதாயத்துக்கு இருந்து வரும் சமுதாய இழிவு நீக்கிக் கொள்ளும் உணர்ச்சியை ஞாபகப்படுத்தவேண்டும் என்பதற்கு ஆகும். இதைக் கழக அங்கத்தினர் பலரும் மற்றும்சில திராவிடர்களும் ஆணும் பெண்ணும் ஆதரித்து அணிந்து வருகிறார்கள். இந்தப்படியாக கருஞ்சட்டை அணிபவர்களுக்கு, எந்தவித நிபந்தனையோ எந்தவித ரிஜஸ்டரோ, சேனை போன்ற உடையோ யூனிபார

மோ அணி வகுப்போ ஆயுதமோ மற்றும் இவை போன்ற ஓர் சேனைக்கோ படைக்கோ உள்ள பயிற்சிகளோ மேற் கொண்டது கிடையாது'' என்ற தெளிவான அறிக்கையைத் தந்தார்கள்.

கருஞ்சட்டை பற்றிய தடை அறிவிப்புக் கிளம்பியதும் அண்ணா முந்திய நாட்களைவிட இயக்க வேலைகளிலே தீவிர ஈடுபாடு கொண்டார். கட்சியிலே தனக்கிருந்த கடமையையுணர்ந்து நடந்து வந்தார். படைக்குத் தடை என்றதும் ஏதாவது காரணங்களைக் கூறி தொடை நடுங்கி ஓடி விடுவாரென்று தவருன கணக்கை போட்டு கதை பேசி வந்தவர்களின் வாயடைத்து முகத்தொங்கிப் போகும் அளவுக்கு அண்ணாவின் இயக்க ஈடுபாடு வேக நடை போட்டது.

மத்திய திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 7-3-48ல் சென்னை மவுண்ட்ரோடு மீரான் சாயுபு தெரு 1-ம் எண் உள்ள பெரியார் இல்லத்தில் நடைபெற்றது. அண்ணா அவர்கள் அந்த கூட்டத்தில் கலந்து கொண்டது.பொய்யுரைத்துத் திரிவோரின் நிலைமை அம்பலப்படுத்துவதாக அமைந்தது. அரசியலாரின் ஆத்திக்க அம்பு போல தடை பாய்ந்து வந்த போது அண்ணா பெரியாருக்கு பக்கபலமாக இருந்தது அரசியல் வானிலே புதிய ஜீவ ஒளியைத் தேக்கியது போலாகியது. அசைக்க முடியாத முழுப்பலம் பெற்று திராவிட சக்தி தலை நிமிர்ந்து நின்றது. சென்னை பெரியமேட்டுத் திராவிடர் கழக முதலாவது மாநாட்டில் அண்ணாவும் பெரியாரும் இணைந்து கலந்து கொண்ட நிகழ்ச்சி இன எதிரிகளின் வயிற்றெரிச்சலை அதிகமாக்குவதாக அமைந்தது. அந்த மாநாட்டில் அண்ணா 'கருஞ்சட்டை அணிவது, திராவிட மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழிவை அறிவிக்கும் ஒரு துக்க அறிகுறியேயன்றி அது ஒரு ஸ்தாபன மல்ல. ஒரு சமுதாயம் தனக்கேற்பட்ட இழிவைக் கூட வெளிப்படையாகத் தெரிவிப்பதை குற்றமென்று சர்க்கார் கருதி அதற்காக நடவடிக்கை எடுக்கத் துணிந்ததென்ருல்,

உண்மையான நெருக்கடி நமக்கல்ல, சர்க்காருக்கேதான் இத்தகைய தவருன வழிகளில் சர்க்கார் நடக்கத்தலைப்பட்டால் திராவிடர்கள் தங்களுடைய குறைகளைத் தீர்த்துக் கொள்வதில் முன்னிலும் அதிகமான முயற்சியையே எடுத்துக் கொள்வார்கள்'' என்று குறிப்பிட்டார்' மாலையில் திருவல்லிக்கேணி கடற்கரையில் தோழர் அரசு தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலும் அண்ணுவும், பெரியாரும் கலந்து கொண்டு, திராவிட எழுச்சியை ஆட்சியாளருக்கு எடுத்துக் காட்டி எச்சரித்தனர் நாளடைவிலே ஆட்சியாளரின் தடை அர்த்தமற்றதாகியது எங்கெங்கு பார்த்தாலும் கருஞ்சட்டை வீரர்களின் பேரணி பெருகி வளர்ந்தது. எதை அழித்துவிட நினைத்தார்களோ, அது மடமடவென்று வேக வளர்ச்சி பெற்றது. திருச்சி டவுன் ஹாலில் அண்ணு பேசிய போது ஆட்சியாளரின் ஆகாத போக்கைக் குறித்தும், விரைவிலே திராவிட எழுச்சியின் முன்னே' தலைகுனியப் போகும் அதன் ஏமாளித் தனத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டினுர். கருப்புத் துண்டோடு அண்ணு அவர்கள் காட்சியளித்து வீரமுழக்கம் இட்டத்தை திராவிட சமுதாயம் மறக்கமுடியாத நிகழ்ச்சியாகும். அதன் பிறகு ஆட்சியாளர் ஸ்தாபன ரீதியாக இல்லாத ஒரு படைக்கு தடைவிதித்தை நினைத்து வருந்தினர். வரலாறு புதிய திருப்பத்தை சந்தித்தது.

தென்னக வாழ்வு நலத்தின் மீது வீசியெறியப்பட்ட வெடிகுண்டு வெடிக்காமலே சிதறி ஓடியது துவக்கத்திலே தடைக்கான கெடுபிடிகள் பலப்பட்டும் முடிவாக தாக்கும் குணாங்கொண்டோர் தளர்ச்சியடையும் நிலையே பெற முடிந்தது. மதுரை மாநாட்டிலே காலிகள் தீ வைத்து வெறியாட்ட மிட்டதிலிருந்து அரசினர் தடை சட்டம் இயற்றுவது வரை எத்தனையோ பெரிய வேதனை வேலிகளையெல்லாம் தாண்டித்தான் இயக்கம் மலர்ச்சி யடைந்திருந்தது. தியாகத் தீயிலே பல்லா

யிரக்கணக்கான திராவிடர்கள் புடம் போட்டு எடுக்கப் பட்டனர்.

ஆதிக்க வாதிகள் மிரண்டனர். ஏழை தாழைக்கள் ஏமாளிகளாக கை பிசைத்து நின்றனர். மருட்டிய மதத்தலைவர் கள் இருண்ட தங்களது எதிர்காலத்தை நோக்கிக் கொண் டிருந்தனர்.

அப்போது.. பெரியார் தரவேண்டிய இடத்தை அண்ணு விற்குத் தராதது மட்டுமல்ல; பெறவேண்டிய இலட்சியப் பணி களைப் பெறுவதிலும் தயக்க மடைந்தார். மீண்டும்புயல்...... வேதனையான செய்தி எப்போது வந்து தாக்குமோ வென்று திராவிடர்கள் திகிலடைந்து நின்றனர். தலைவர்களின் கருத்து வேறுபாட்டை டமார மடிக்க அரசியலின் எதிர்வரிசையி லிருந்தோர் தயாராகக் காத்திருந்தனர். திராவிடத்தின் அர சியல் வானிலே கப்பிய காரிருளைக் கருத்துள்ளோர் கவலை யோடு கவனிக்கத் துவங்கினர்.

அண்ணு தனது நிலையை 'ராஜபார்ட்' ரங்கதுரையின் மூலமாக வேதனையோடு விளக்கினுர்.

'குருமூர்த்தி—ரங்கதுரை கூட்டுறவு, கம்பெனிக்கு இலாப மா, நஷ்டமா என்பதல்ல முக்கியமான பிரச்னை. கலைத் துறைக்கு, அவ்விதமான கூட்டுறவு நிச்சயம் தேவையாயிற்றே அது எக்காரணத்தாலோ கெட்டுவிட்டதே, அதனுல் கலைத் துறைக்கு நஷ்டந்தானே, என்பதை அந்தச்சிறு தொகையினர் மட்டும் உணர்ந்து உருகினர் ஆனுல் அவர்கள் சிறு தொகை' என்றைக்கேனும் ஒரு நாள் சுரஸ்தானம் தவறி யாராவது நடி கன் பாடும்போது, குருமூர்த்தியின் கண்களிலே நீர் தளும்பும் 'குருமூர்த்தி கம்பெனிக்கு நேற்று போயிருந்தேனப்பா ; இப் போது நீ இல்லாததால் சோபிக்கவே இல்லை நாடகம் என்று யாரேனும் கூறும்போது, ரங்கதுரையின் கண்களில் நீர் ததும் பும்—அவர்களின் கூட்டுறவின் கடைசிப் பலன், அந்தக் கண்ணீர்த் துளிகள் தான் போலும் !'

கண்ணீரோடு எழுதிய அந்தக் கதை நடைமுறையாகத் துவங்கியது, ஏதேதோ காரணங்கள் எப்படி யெப்படியோ உருவெடுத்தன. காரிருளும் கும் இருட்டும்; இடியும் மின்னலும் இதயத்தை நடுக்க மெடுக்கச் செய்து கொண்டிருந்தது. எதையுமே தாங்கும் இதயத்தோடு சகித்து வந்த அண்ணு திராவிடருக்கு நேர இருந்த இருண்ட எதிர்காலத்தை நினைத்து கலங்கினுர். பூகம்பம் வெடித்தது—பெரியாரின் பொருந்தாத் திருமணம்—என்ற நிகழ்ச்சி எத்தனையோ உள் அர்த்தங்களைக் கொண்டு சுய உருவெடுத்து வந்தது. பல்லாயிரக்கணக்கான தொண்டர்களின் வேண்டுகோளையும், கூட்டு நண்பர்களின் இதயக் குரலையும் ஏற்றுக் கொள்ளாமல் தத்தளிக்க வைத்தார் பெரியார் திருச்சியிலே நடந்த நிர்வாக அங்கத்தினர் கூட்டம் செல்லாக்காசாக்கப்பட்டது. கூட்டம் நடந்து முடிவதற்குள் அந்தத் திருமணம் நடந்த சேதி பறந்து வந்தது. நிர்வாகக் கமிட்டியிலே திரண்டிருந்த பல்லாயிரக் கணக்கானவர்களும் செய்வதறியாது ஆளுக்கொரு மூலையாக அலைமோதிச் சென்றனர். நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் ஊர் திரும்பியதும் 'திராவிடநாடு' மூலமாக தங்களது கருத்தைக் கூறத் துவங்கினர்.

'உடன் தனி மாநாடு கூட்டிஞல் சச்சரவு ஏற்பட ஏதுவாகும்—என்று கருதுகிறேன். அவ்விதம் ஏற்படாதவாறு செய்து பார்த்தும் பலன் கிடைக்காவிட்டால், பின் எவ்வித எதிர்ப்பையும் சமாளித்து இயக்கத்தை நாம் வளர்ப்போம். மேலும் உடனடியாக ஒரு செயற்கமிட்டியை நிறுவி ஆவன செய்வோம். நான் இயக்க வளர்ச்சிக்கான எவ்வித தியாகத்திற்கும் தயார்.' என்று தூத்துக்குடி கே. வி. கே. சாமி கடிதத்தின் மூலமாக அறிவித்திருந்தார்.

'தனிப்பட்ட தலைவருக்காக இயக்கமல்ல, இயக்க வளர்ச்சிக்குத்தான் தலைவர்' என்று சென்னை என். எம். சுப்பிரமணியமும்; 'ஆம்' போதும் தலைமை தாழ்ந்து விட்டது தாழ்ந்து

போன தலைமையின் மூலம் இனி தொண்டாற்ற இயலாது. எனக்குத் தலைமையிலே நம்பிக்கையில்லை' யென்கிறேன், துளி கூட நம்பிக்கையில்லை' என்று நாகர்கோயில்— கி. மனோ கரனும் 'யாரையும் நம்பாதவர் தலைமையில் இனி யார் எதைச் செய்யமுடியும்' என்று ஜலகண்டபுரம் ப. கண்ணனும், 'அவர் தலைமையிலிருந்து பணி செய்வதிலிருந்து விலகுகிறோம் என்று குறிஞ்சிப்பாடி இரா. சார்பசிவமும், அவர் தலைமை யில் நம்பிக்கை கொள்வதாக இல்லை' என்று மதுரை எஸ். முத் துவும் மற்றும் நாற்பதுக்கு மேற்பட்ட மத்திய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களும் தங்களது கண்டனத்தை எழுத்துமூலம் தெரிவித்தனர். பெரியாரின் திருமணச்சேதி கிடைத்ததுமே தங்களது நிர்வாகக் கமிட்டியைக் கூட்டி 113 —கிளைக்கழகங் களும் சார்புடைய கழகங்கள் 90—ம் கண்டனத் தீர்மானங் கள் நிறைவேற்றின வென்பது குறிப்பிடத்தக்கதாகும். பல்லா யிரக்கணக்கான இலட்சியக் காளையர்களின் கண்ணீர்த்துளி பெருக்கெடுத்தது. அன்று ரங்கதுரையை எழுதிமுடித்த போது 'அவர்களின் கூட்டுறவின் கடைசிப்பலன் அந்தக் கண்ணீர்த் துளிகள்தான் போலும்' என்று அண்ணா குறிப்பிட்டது தத்து வங்கள் நிறைந்த உண்மையாக உருவெடுத்து நின்றது

நடுக்கடலிலே கப்பல் தத்தளித்து நின்றது. திசையறிந்து செலுத்தியவரோ லுமிபோய்விட்டார் நம்பியவர்களை நடுக்கடலிலே திக்குமுக்காட விட்டு தேடும் திக்கற்றோர்க்கு திசை காட்டு வோர். இப்போது யாராக இருக்க முடியும் ?

அண்ணா !

அந்த ஒரு சொல் தேம்பியழுத, கண்ணீர் வடித்து நின்ற திராவிட சமுதாயத்தை வாழவைக்கும் ஜீவ மூச்சாகத் தெரிந்தது.

அண்ணா !

அவரைத் தவிர வழிகாட்டுபவர்......வாழவேண்டிய சமுதாயத்தின் விழி போன்றவர் யாரிருக்கிருர்கள் இப்போது? அழகுப் பேச்சாலும், எழுத்தாலும் அவனி தெரிந்த முறையில் நாயரும் தியாகரும் சாதிக்க முடியாத மாபெரும் சாதனைகளை முடித்து திராவிடர் தம் வேதனை போக்கப் பாடுபடும் தகுதி மிகுதிபடைத்த தலைவர் இப்போது இவரே ! என்ற ஏற்றமிகு முடிவிற்கு சகல பகுதி திராவிட மக்களும் வந்து சேர்ந்தனர். பெரியார் – அண்ணு பற்றிய வேறுபாடு இப்போது கவனிக்க முடியாததாகி நின்றது பெரியார் பற்றிய குறைபாடும் அண்ணு பற்றிய தீவிர இறுதிப் பாடுமே எல்லோரது நினைவிலும் ஒட்டி நின்றது. முது பெரும் தலைவர் அழைத்துச் செல்ல மறந்த இலட்சிய பூமிக்கு நிச்சயமாக இளைஞர் அணிவகுப்பின் இதய கீதமான அண்ணு அழைத்துச் சென்று வெற்றிக் கொடியின் அசைவிலே நிம்மதி தருவாரென்று நாட்டவர் நம்பினர். வாழ வேண்டிய சமுதாயத்தின் ஏகோபித்த குரல் காஞ்சி புரத்தை நோக்கி ஒலித்தது. அங்கே நேரில் சென்று மக்களின் இதய ஒலியை எதிரொலித்துக் காட்டிய முன்னணி வீரர்கள் .உங்களது நினைப்புப்போல நான் தகுதியானவன் தாஞ? அவருக்கு எதிராக அணிதிரட்டுவதாக அய்யா கருதுவார்! என்னை விட்டு விடுங்கள், நீங்களே சிந்தித்து ஒரு முடிவிற்கு வாருங்கள்' என்ற குழப்பமான விளக்கத்தைத்தான் பெற முடிந்தது. நாடு அவரை நம்பியது முழுக்க முழுக்க ! அவரோ இன்னும் நம்பிக்கையான வர்களைத் தேடி ஒரு முடிவிற்கு வாருங்கள் என்று பேசினர்.

காகிதரோஜாக்களில் கவர்ச்சி பெற்ற தலைவர்கள் தலை தாழ்த்த வேண்டிய முறையிலே அமைந்தது அண்ணுவின் பேச்சு. முன்னணி வீரர்கள் அழுது துடித்து நாட்டிலே பெருக்கெடுத்தோடிய கண்ணீர் வெள்ளத்தை அவுண்ணுக்கு எடுத்துக் காட்டி 'நாடு நம்பும் தலைவர் இப்போது தாங்களே என்பதை பலமுறை விளக்கினர் இந்த விவாதத்தில் தோழர்

சம்பத் முக்கிய பங்கெடுத்துக் கொண்டு பணியாற்றியது குறிப்பிட்டு சொல்லக் கூடியதாகும். தம்பிகளின் வேண்டுகோளுக்கிணங்கவும், பல்லாயிரக்கணக்கான விடுதலை வீரர்களின் விருப்பத்திற்கேற்பவும் அண்ணா அதிர்ச்சி நீங்கி காஞ்சிபுரம் விட்டு சென்னை வந்தடைந்து விடுதலைப் படையைத் தொடர்ந்து நடாத்தும் பணிகளிலே தீவிர கவனம் செலுத்தத் தொடங்கினர். ஒரு பொதுவான இலட்சியம் குறித்து அத்தனை தோழர்களின் வற்புறுத்தலுக்கிணங்கி மீண்டும் கிளம்பியதற்கான காரணம் தானே வலியத் தலையில் இழுத்துப் போட்டு சிறப்புக்குறிய தலைவராக வலம் வரும் மனோபாவம் அண்ணாவுக்கில்லை யென்பதை நாடும்—நாளெல்லாம் திட்டிவாய் ஓய்ந்த பெரியாரின் பிரதி பிம்பங்களும் உணரவேண்டுமென்பதற்காகத் தான், அண்ணா தேர்ந்தெடுத்துக் கொண்ட ஜனநாயக முறைகள் எந்த அரசியல் கட்சியுமே, இது வரை நெருங்க முடியாத அளவிலே அமைந்தது சிறப்புக்குறியதாகும். திராவிடர் கழகத்தில் கடும் புயல் புகுந்து விட்டது' என்று கூறிவிட்டு வெளியேறிய அண்ணா திரவிடத்திலே தென்றல் வீசுவதற்கான சூழ்நிலை குறித்து ஆராயப் புறப்பட்டார்.

அந்த நேரம் பார்த்து அண்ணாஎழுதிய இலட்சிய வரலாறு என்ற புத்தகத்தைத் தடை செய்து, பறிமுதல் செய்யும்படி சர்க்கார் அறிவிப்பு செய்தனர். அத்தோடு 'திராவிடநாடு' இதழிடம் மூவாயிரம் ரூபாய் ஜாமீன் கட்டும்படி ஆணைபிறப்பித்திருந்தனர். 1931-ம் ஆண்டின் இந்தியன் பிரஸ் (ஆவசர அதிகாரங்கள்) சட்டம், (1931-ம்ஆண்டின்சென்ட்ரல் ஆக்ட் xxIII பிரிவு 4 விதி (1) (5) படியாகும்[INDIAN PREES EMERGENCY POWER SACT 1931-CENTRAL ACT XXIII OF 1931. SECTION4 (1) (2) ] இந்த விதியின் கீழ் செய்திருப்பதாகக் கருதப்படும் குற்றத்திற்காக அதேசட்டம் பிரிவு 7விதிபடி ரூ. 3000 ஜாமீன்தொகை கட்டியாகவேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருந்தது. கோரப்பட்டத்தொகை

மூவாயிரம் ஒரேவாரத்தில் சேர்ந்துவிட்டதென்பது குறிப்பிடத்தக்கதாகும். வழக்கு நிதிக்காக கோவை எடிசன் தியேட்டரில் தோழர் கே. ஆர் ராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபையினரால் 'ஓர் இரவு' நாடகம் நடைபெற்றது. நாடகத்திற்குத் தலைமைவகித்த தோழர் நெடுஞ்செழியன். 'திராவிடர் கழகக் கருத்துக்களைத் தாங்கிக்கொண்டு வருகின்றன என்ற ஒரே காரணத்திற்காக, திராவிட நாட்டிற்கு ரூ. 3000 ஜாமீன், 'விடுதலைக்கு ரூ. 10000 ஜாமீன்,' குடி அரசுக்கு ரூ. 3000 ஜாமீன் காங்கிரஸ் ஏடாகிய தினசரியே கூறுகிறபடி இதுவரையில் எந்தப்பத்திரிகையிடத்தும் ஜாமீன் கேட்டறியாத தொகை ரூ. 10000 ! வெள்ளைக்கார ஏகாதிபத்தியக்கொடிய ஆட்சியிலுங்கூட இந்தக்கொடுமைகள் நடந்தது கிடையாது. இவ்வளவு கொடுமைகள் இழைக்கப்பட்டும் கழகம் வளர்ந்துவருகிறது. காரணம் இளைஞர்களிடத்தே காணப்படும் உள்ள உறுதியேயாகும். நமது உடைமைகள் பாழ்பட்டாலும், நமது உயிர் பாழ்பட்டாலும், நமது கொள்கைகள் என்றும் பாழ்படாதவைகள். பணம் பாதாளம்வரையில் செலலும் என்பார்கள், ஈட்டி எட்டினமட்டும் பாயும் என்பார்கள். துப்பாக்கிக்குண்டு சக்தியுள்ள வரையில் பாயும். ஆனால் சுயமரியாதைக்காரனுடைய அறிவு அண்ட பிண்ட சராசரங்களில் எங்கெங்கு குறைபாடுகள் காணப்படுகின்றனவோ, அங்கெல்லாம் சென்று பாய்ந்து அவற்றைகளைந்தெறிய முற்படும் என்பதை இன்றைய அரசியலார் உணரட்டும்' என்று குறிப்பிட்டார்.

அரசு தொடுத்த அடக்கு முறை ஒரு பக்கம், சீரழிந்த கட்சித்தலைமையை சீர்திருத்த வேண்டிய கடமை மறுபக்கம். கழகத்தின் தூய்மையான கொள்கைகள் நாட்டுமக்களைத் தட்டி எழுப்பியிருக்கும் போக்கினையும், வீசிய புயலை சாக்காகக்கொண்டு போர்க்குரல் கிளப்பிய வேடதாரிகளையும், இதுதான் தருணமென்று தாக்குதல் அம்பைக்

கிளப்பிய அரசின் வஞ்சகத்தையும் அண்ணா தெளிவாகக் கண்டறிந்து இயக்க இளைஞர்களிடையே தடைப்பட்டிருக்கும் வேகத்தைக் கிளப்ப முயற்சித்தார்.

சென்னை பவழக்காரத்தெருவிலே தோழர்கள் திரண்டனர், சிங்க முகத் திராவிடரின் அணிவகுப்பு. சோகமே உருவெடுத்து நாளெல்லாம் பயணம் தடைப்படுவதாக நெஞ்சம் அடிபட்டுக்கிடந்த தீரர்கள் திராவிட சமுதாயத்தின் புதிய ஒளியைக்காண அங்கே ஒன்றுகூடி அண்ணாவின் முன்னே அணிவகுத்து நின்றனர். கொண்ட கொள்கையை இழக்கத் துணியாத வீரர்கள் தலைவரைத் துறந்து கொள்கைகளால் மெருகேற்றப்பட்ட புதிய இயக்கம் காண முடிவெடுத்தனர். கண்ட இயக்கம் கொண்ட கொள்கைகளின் தொடர்ச்சியாக மீண்டும் உருவெடுக்க வேண்டுமென்றே முடிவெடுக்கப்பட்டது. பழம்பெரும் புகழுடைந்த பாவேந்தர் பாரதிதாசன் போன்ற ஓரிருவர் கட்சித்தலைமையையும், கட்சிக்கான சொத்துக்களையும் கைப்பற்றவேண்டுமென்று வாதிட்டார்கள். முடிவாக பூசலற்ற புதிய பாதையே இயக்கத்தின் வேகமான வளர்ச்சிக்குத் தகுதியானதென்று தோழர்களின் குழு முடிவெடுத்தது.

1949-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ம் நாளன்று தென்னக வானின் காரிருள் மறைந்தது. பல்லாயிரக்கணக்கான இலட்சிய இளைஞர்களின் இன்பக்கனவு நடைமுறையாகி வந்தது. பொலிவு நிறைந்த புத்தம் புதிய புரட்சி இயக்கமாக திராவிட முன்னேற்றக்கழகம் மலர்ந்தது.

கொட்டும் மழையிலே குதூகலமாகத் துவக்கப்பட்ட இயக்கம் நாட்டு மக்களின் நல்லாதரவைப்பெற்றிட நாளதிகமாகவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டங்களையும் கொள்கை வழிமுறைகளையும் சுமந்துகொண்டு முன்னணி வீரர்கள் மூலை முடுக்கெல்லாம் சென்று பிரச்சாரம் செய்தனர். ஓய்ந்து விட்டார்கள் , சாய்ந்துவிட்டார்களென்று

பல்லவி பாடியவர்களெல்லாம் கழகத்தின் வனப்புகண்டு. உறுப்பினர்களின் உள்ள உறுதி கண்டு மருட்சியடைந்தனர், அரசு கட்டிலேறியவர்கள் கவலையோடு கவனிக்கத்துவங்கினர் எங்கிருந்தாலும். எந்தத் துறையிலே நடைபோட்டாலும் சிறப்பிடந்தேடி, வெற்றிக்கொடியின் நிழலிலே புன்னகை தந்து நிற்கும் அண்ணா தான் திராவிடமுன்னேற்றக்கழகத்தின் பொதுச்செயலாளர் என்பதறிந்ததும் ஆணவத்தின் வாரிசுகள் அலறித் துடித்தனர். எதிர்பாராத இடங்களிலிருந்தெல்லாம் கழகத்திற்கு 'ஆதரவு பரவத்துவங்கியது. மக்களின் வாழ்வு நலன்களுக்காகப் பாடுபடும் மாபெரும் இயக்கமென்பதைத் தெளிவுபடுத்திவந்தது. அண்ணாவும், தம்பி மார்களும் இரவு பகல் பாராது, காடுமேடு பாராது சுற்றிச் சுழன்று திராவிடத்தின் தீப ஒளி அணையாது பாதுகாத்து வந்தனர். பாரெங்கும் எதிரொலிக்கும் அளவிலே விடுதலை முழக்கம் கிளம்பிவரும் தம்பிமார்... ...ற்றி அண்ணா........

'என் அருமைத் ... ஒரு குறையும் இல்லாத் தங்கக் கம்பிகள். வைதிகக் ... ள் மீது வெடிகுண்டுகளை வீசி அவற்றைச் சடசடவெனச் சரிந்து விழச்செய்யும் பலம்பொருந்திய டார்பிடோக்களே அவர்கள் அனைவரும் ஆற்றல் மிக்கவர்கள்! ஆயிரம் ஆபத்துக்கள் அடுக்கிவந்தாலும் — அஞ்சி ஒதுங்காது அறப்போர் ஆற்றும் அடலேறுகள்! தீரர்கள்! தென்னாட்டை வாழ்விக்கவந்த பொன்னனவீரர்கள். என் தம்பிமார்களின் முகங்களைப்பார்க்கிறேன் — அங்கே, சேரன் செங்குட்டுவன் நிழலாடுவதைப் பார்க்கிறேன்' அவர்களுடைய அந்த அழகிய கண்களைப் பார்க்கிறேன் — அங்கே புத்தம் புதியதோர் புறநானூறு புன்முறுவல் புரிவதைப் பார்க்கிறேன். அவர்களுடைய ஆற்றல் தவழும்தோள்களை பார்க்கிறேன். அங்கே கனக விசயர்கள் அன்றோர் நாள் பெற்ற தோல்வியைப்பார்க்கிறேன். அவர்களுடைய இனிய கைகளைப்பார்க்கிறேன் — அந்தக் கைகளிலே செந்தமிழ் ...த்து விளையாடுவதைப்பார்க்கிறேன். உடனே' ஒரு கணம், என்னையே நான்

எண்ணிப்பார்க்கிறேன்; இப்படிப்பட்ட அஞ்சா நெஞ்சர்களை அருந் தம்பிகளாகப்பெறும் பேறுபெற்றேனே என்று பெருங் களிப்பு உறுகிறேன்.'

என்று சிறப்பித்துக் கூறினார். அந்தத் தங்கத்தம்பிகள் தான் கஷ்ட நஷ்டங்களை ஒதுக்கித்தள்ளிவிட்டு கொள்கை முழக்கம் செய்துவந்தனர். ஏழை எளியவரின்கண்ணீரைத் துடைக்க கழகம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் நிச்சயமாக பாதிக்கப்பட்டவர்களைக் கைதூக்கி உதவிசெய்தது பழைய பிரச்சனைகளைப்போட்டே குழப்பிக்கொண்டிருப்பார்களென்ற பழைய நண்பர்களின் எண்ணம் தரைமட்டமாகியது. "பெரியார் அமர்ந்த தலைவர் நாற்காலியில் இனியாரும் அமர அனுமதிக்க மாட்டோம். அவரே என் முதல் தலைவரும் கடைசித்தலைவரும். அவர் என்னைத் தூற்றட்டும்;" என்று பாசமொழிகளைத் தந்துவிட்டு, கட்சிவேலைகளை தீவிரமாக்கினார் அண்ணா.

"வீண் வம்புக்குப் போவதில்லை வீரம் விழலுக்கு நீர் பாய்ச்ச அல்ல வெற்றியை நோக்கிச்செல்ல வேலிதாண்டு கிறவர்கள் திராவிட முன்னேற்றக் கழகப்பூங்காவையே அழிக்க முற்படவேண்டாம்" என்று அண்ணா தெளிவாக எடுத்துச்சொல்லியிருந்தும்; "பெரியார் நம் எதிரியல்ல பழமையும் பாசிசமும் தான் நம் எதிரிகள் இனி பெரியாருக்கும் நமக்கும் திருமண விஷயமான தகராறில்லை - ஏனென்றால் அவர் தலைமைனின்றும் நாம் நீங்கிவிட்டோம் புதுவழி கண்டு விட்டோம்—போராடுவோம் பெரியார் இயக்கத்தோடு அல்ல — திராவிடருக்கு தீங்குதரும் கருத்துக்களோடு" என்ற பேருண்மையை விளக்கியிருந்தும் பெரியார்......

"புதுக்கழகம் பூத்திருப்பது ஒரு ரூபாயெடை வெள்ளிக் காப்புக்கு ஒரு குழந்தையின் கழுத்தைத்திருகி ஜல தாரையில் திணிக்கும்படியான அளவு துணிவும், தைரியமும் கொள்ளும்படியான காரியமாக அல்லவா காணப்படுகிறது"

என்றும் வர்ணித்துக்கொட்டினர். அப்போது 'போர்வாள்' இதழிலே கலைஞர் கருணாநிதி எழுதிய கட்டுரையிலே, "உதாரணத்தை வாறி வீசுகிறார் பெரியார். இந்த உதாரணத்தை அவருக்கே திருப்பிப்பார்த்தால், புதுக்கழகம் இருக்க வேண்டிய இடத்தில் பெரியாரும்—வெள்ளிக்காப்புக்குப் பதில் E. V. *R* மணியம்மையார் அவர்களும்—குழந்தையின் ஸ்தானத்தில் திராவிட கழகமும் என்ற ரீதியில் அமைத்துப் பார்த்தால் பெரியாரின் உதாரணம் எரிமலையின் மேல் விளையாடுகிற வேடிக்கையாகத்தானிருக்கும். ஒரு மணியம்மைக்காக திராவிடக்கழகம் என்ற மூத்தாள் குழந்தையை கழுத்தை நெறித்துக்கொன்றுவிட்ட பெரியார், நம்மை நோக்கி குற்றத்தை விட்டெறிகிறார். நல்ல நகைச்சுவைப்பகுதி வெள்ளிக்காப்பு அல்ல, ஐந்து லட்சம் வந்தால்கூட கொள்கையிலிருந்து அசையாத நெஞ்சுறுதிபடைத்தவர்கள் எம்மிடம் ஏராளம் ஐயா என்பதைத்தான் அவருக்கு நாம் கூறவேண்டியிருக்கிறது" என்று குறிப்பிட்டு பெரியாரின் ஆகாதபோக்கை அம்பலப் படுத்தினர். இதுபோலவே பெரியாரின் புதுக்கழகம் பற்றிய பொய்யுரைகள் முன்னணி வீரர்களின் பிரச்சார பீரங்கியால் தாக்கித் தகர்க்கப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்டு முதலாவது ஆண்டை முடிப்பதற்குள்ளேயே கழகம் போர்க்களங்களைச் சந்திக்க வேண்டியதாகி விட்டது. கழகத்தின் வலிமையும் பொலிவையும் காணச்சகியாதோரின் ஏவுக்கருவிகள் எங்கெங்கிருந்தோ கிளம்பிக் கொண்டிருந்தன இந்தி அரக்கி மீண்டும் தலைவிரித்தாடத் துவங்கினள். தென்றலாடும் தென்னகப் பழஞ்சோலையிலே தீ பற்றத் துவங்கியது. 2-5-1950 முதல் இந்தி கட்டாயபாடமென்று அமைச்சர் மாதவமேனன் உத்திரவிட்டார்...1 முதல் 6-ம் பாரம் வரையில் இந்தியைக் கட்டாய பாடமாகப் படித்தாக வேண்டுமென்ற அந்த அதிகாரமுரசம் நல்லவரின் நெஞ்சத்திலே தேளைப் போலக் கொட்டியது. மக்களின் இயக்கமாம் திராவிட

முன்னேற்றக் கழகத்துக்கு துவக்க நிலையிலே சோதனையான கட்டம் துவங்கியது. கால்களை பலப்படுத்திக் கொண்டிருந்த போதே களம் அழைத்தது. பூக்காட்டின் புதுமணத்தை இளைய திராவிடத்தார் அனுபவித்துக் கொண்டிருந்தபோதே விட நாகம் படையெடுத்து வந்தது. இந்தக் கொடுமையை எதிர்க்க திராவிட முன்னேற்றக் கழகம் ஒடோடி முன்னணியிலே வந்து நின்றது. ஆதிக்கம் படையெடுத்துப் பாய்ந்து வந்தது. அந்நிய மொழி மோகத்தால் பிறந்த ஜீவபூமிக்கு இழிவைத் தேடுகிறோம் என்பதை மறந்து. தாசர்கள் சிலர் இந்தி அரக்கிக்கு ராஜபாட்டை அமைத்துக் கொடுத்தனர். அவர் களிலே குறிப்பாகவும், சிறப்பாகவும் மாநில அரசினரும் அவர் தம் தேசீய இயக்கமும் பெரும் பங்கெடுத்து கொண்டனர் முந்திய இந்தி எதிர்ப்புப் போர்களை விட அதியற்புதமான முறையிலே திராவிட முன்னேற்றக்கழகம் இந்த இந்திப் போரை முன் நின்று நடத்தியது, தென்னகத்திற்கு நேர இருக்கும் இழிவை ஏற்றுக் கொள்ள சம்மதிக்காத அனைவரும் முன்னேற்றக் கழகத்தின் அணிவகுப்பிலே தோள்தட்டி தென்னவர்தம் வீரம் காட்டி நின்றனர். தலையைக் கொடுத் தேனும் தமிழைக் காப்பாற்றி விடத் துடித்தது மறவர்படை ஆதிக்கக் கூட்டிலிருந்து கிளம்பிய ஆணவ அம்புகள் தமிழர் தம் செங்குருதியை ருசிபார்க்கத் துவங்கியது. களம் விரிவு படுத்தப்பட்டது. போர்ப் பரணி பட்டி தொட்டி யெல்லாம் எதிரொலித்தது. மக்களின் ஜீவ சக்தியை பலப்படுத்தி, டில்லி மூலவர்களே நடு நடுங்கிப் போகும் அளவுக்கு முன் னேற்றக் கழகம் தீவிர பணியாற்றியது' நீதியின் பெயரால் அவர்கள் துவக்கிய அறப்போர் நேர்மையாளர்களின் நெஞ் சைத் தொட்டு நின்றது. பெரியாரின் திருமண ஏற்பாட்டுக்கு முன்பு...அதாவது 2—8—48 அன்றே இந்தி மறியலை முன் நின்று நடத்தும் சர்வாதிகாரியாக பெரியாரின் மாளிகையிலே யே தேர்ந்தெடுக்கப்பட்ட அண்ணா ஆற்றிய அருஞ்செயல் களால் பரவிய பெருந்தீ சாம்பலாகிப்போனது நாடறிந்ததாகும்.

ஆனாலும் சாம்பலுக்குள்ளே புதைந்த நெருப்பு இப்போது வடக்கின் வாடையால் பெரு நெருப்பாகக் கிளம்பியது. இந்தக் கொடு நெருப்பை அணைக்கும் பணி தீயணைக்கும் படையாகிய திராவிடமுன்னேற்றக் கழகத்தையே தான் வந்து சார்ந்தது. அதன் அற்புத சக்தியைத் தெரிந்து கொண்ட ஆட்சி பீடம் இறங்கி விடத் துடித்தது. ஆணவ உச்சியிலிருந்து இந்தி வளர்ச்சி குறித்து ஆக்கமளிப்பாரென்று நம்பி அனுப்பிய அவினாசிலிங்கம் போன்றோர் தமிழ் கெடும் நிலையுணர்ந்து வெளிப்படையாகவே இந்தி ஆதிபத்தியம் பற்றி கோவை போன்ற இடங்களிலே பேசத் துவங்கினர் கழகத்தின் பிரசாரம் இதயமிருப்பவர்களின் கண்களையெல்லாம் இந்த முறையிலே திறந்து கொண்டிருந்தது. முடிவாக 18—7—1950 அன்று இந்தி அணை இஷ்டபாடமே—இந்தி கட்டாய பாடமில்லை' என்ற உத்திரவு அமைச்சர் மாதவ மேனனிடமிருந்து பறந்து வந்தது. கட்டாய பாடமென்று ஓங்காரக் குரலெடுத்து வந்த இரண்டே திங்களுக்குள்; தர்பார் ராகத்தோடு கொட்டு முழக்கத்துடன் 'இந்தி இனி கட்டாய மே' என்று கூறப்பட்ட லாவகம் ஒழிக்கப்பட்டு தென்ன கத்தின் மானம் காப்பாற்றப்பட்டதென்றால் ரத்தமைய அரும் பெரும் சாதனைகளைப்புரிந்து திராவிட முன்னேற்றக்கழகம் இந்த வெற்றியைத் தொட்டிருக்க முடியுமென்பதை கற்பனை கூட செய்து பார்க்க முடியாததாகும். இரண்டே திங்கள் அதற்குள் ஆணவத்தை அடி பணிய வைப்பதென்றால் அப்பப்பா எத்துணை வலிமை இந்த இயக்கத்திற்கு! எதிரிகள் கூட வியப்போடு பேசிக் கொண்டனர்...

"இந்தி எதிர்ப்பில் வெற்றி கண்டுவிட்டோம். இந்தி விருப்பப் பாடம் தான் என்று அறிவித்து விட்டார். கல்வி அமைச்சர் இந்த வெற்றிச் செய்தியைத் துண்டுப் பிரசுரங்கள் பொதுக் கூட்டங்கள் மூலம் பொதுமக்களுக்குத் தெரியப் படுத்துங்கள் இந்தியை எதிர்த்து அறப்போரிலீடு

இந்த பயங்கரமான துப்பாக்கி பிரயோகத்திற்கு முதல் நாள் அடக்கு முறைக்கு ஒத்திகைநடத்திப் பார்ப்பது போல ஆச்சாரியார் சென்னை வந்த போது கறுப்புக்கொடி காட்டிய தோழர்கள் மீது காட்டாட்சி நடத்தியதை நாடறிந்த வேதனை நிகழ்ச்சியாகும்.

1000 பேருக்கு படுகாயம்; 60 பேர் கைது; 34 பேருக்கு சிறைவாசம்...இது ஆச்சாரியார் வந்தபோது

'எந்த தமிழாசிரியருக்கும் உள்ளத்திலும், வயிற்றிலும் கிடைக்கும் தழும்புகள் எனக்குக் கையிலும், முதுகிலும் பிடரியிலும் கிடைத்தன' என்று பன்மொழிப்புலவர் அப்பாதுரையாரே கசிந்துருகி சொல்லும் அளவுக்கு தர்பார் நடந்து முடிந்தது. இயக்கத்தின் முன்னணி வீரர்களின் குருதியை போலீசாரின் குண்டாந்தடிகள் ருசிப்பார்த்தன. தோழர்களோடு சேர்ந்து இயக்கத்தின் கண்மணிகளாகிய தாய்மார்களும் அடிபட்டு இரத்தஞ்சிந்தியதை வரலாறு மறக்க முடியாததாகும்.

கழகம் எத்தகைய தாங்கும் சக்தியைப் பெற்று வருகிறதென்பதை இந்த அடக்குமுறை நிகழ்ச்சியும் ஊராருக்குத் தெளிவாக்கி வைத்தது. எதையுந் தாங்கும் இதயம் படைத்தோர் இயக்கத்திலிருப்பதை உரிமைக்குரலிலே பாடும் நேரம் கிடைத்தது. குண்டுகளை மலர்ச் செண்டுகளாகக் கருதிய கொள்கைக் குமரர்கள் இந்த அறக் கோட்டமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பெருகி வருவதை ஆதிக்கத்தின் தோல்விக் காதை தெளிவாக்கு வைத்தது. தூக்கி மேடையைக் காட்டினாலும் 'இலட்சிய வெற்றி, குறித்து ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்த அண்ணாவின் தம்பிகள் ஆயிரமாயிரமாக இருந்ததைக் கண்ட போது தான் ஆதிக்கத்தின் கண் ஓயவில்லை.

'ஆரிய மாயை' வழக்கு முடிந்து ஆறுமாதத்தண்டனை தரப்பட்டு சிறைக்கோட்டத்திலே தவமிருந்தார் அண்ணா. பெரியார் தனது பொன் மொழிகளுக்காக சிறைபுகுந்தார்

இருவரும் ஒரே நாளிலே சிறைபுகுந்தனர். நீங்களிருவரும் வேறுவேறு இயக்கமாக நடத்திலும் உங்களது பொது நோக்கமெல்லாம் எங்களை ஒழிப்பதுதான். என்று அரசு கருதியதாலோ என்னவோ பெரியார்—அண்ணு இருவரையும் திருச்சி சிறையிலேயே அடைத்து அழகு பார்த்தது. கூண்டிலே சிங்கங்கள் அடைபட்டபோது, பேச்சுரிமை எழுத்துரிமை பாழடிக்கப்பட்டதையும் தலைவர்களை உடனடியாக நிபந்தனையின்றி விடுதலைசெய்ய வேண்டுமென்பதையும் வலியுறுத்தி நாடெங்கும் கண்டனக்கூட்டங்கள் நடைபெறத்துவங்கின. மக்களின் நெஞ்ச அலைகள் பேரலைகளாக உருவெடுத்தன. பத்தே நாட்கள்தான் அவர்களைச் சிறைவைக்க முடிந்தது. மக்களின் பேரெழுச்சி ஆணவத்தை நல்ல பாதைக்கு இழுத்துவந்தது. தலைவர்கள் விடுதலை பெற்றனர். இதைப்பற்றி பின்னர் ஒரு சமயம் அண்ண குறிப்பிட்டபோது.........' ஆரியமாயை ' எனும் ஏடுதீட்டியதற்காக எனக்குச் சிறை. ' பொன்மொழிகள் ' தீட்டியதற்காகப் பெரியாருக்குச் சிறை திருச்சி கோர்ட்டாருக்கு இப்படி ஒரு காட்சியைக் காணவேண்டுமென்று ஆசையாகத்தான் விசாரணைகள் ; எனினும் ' தீர்ப்பு ' மட்டும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் அளிக்கப்பட்டது. பிரிந்து நெடுந்தூரம்வந்துவிட்ட என்னை, அன்று அந்தக்கோர்ட்டில் பெரியாருக்குப்பக்கத்திலே நிற்கச்செய்து, வேடிக்கை பார்த்தது வழக்கு மன்றம். போலீஸ் அதிகாரிகள் அதைத் தொடர்ந்து, ஒரேவானில் ஏற்றிச்சென்றனர். அதைத் தொடர்ந்து திருச்சி மத்திய சிறையிலே இருந்த அதிகாரி, பெரியார் கொண்டுவந்திருந்த சாமான்களைக் கணக்குப் பார்த்துச்சரியாக இருக்கிறதாயென்று கூறும்பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார் என் வாழ்க்கையில் நான் மறக்க முடியாத சம்பவம்.

பக்கத்தும் பக்கத்து அறை ; பகலெல்லாம் திறந்துதான் இருக்கும் ; பலர் வருவார்கள், இங்கு சிறிதுநேரம், அங்கு

சிறிதுநேரம், இன்னும் சிலர் கூர்ந்து கவனித்தபடி இருப்பார்கள். நாங்கள் இருவரும் பேசிக்கொள்கிறோமாவென்று அவர் அறைக்கு உள்ளே இருக்கும்போது நான் வெளியே மரத்தடியில்! அவர் வெளியேவர முயற்சிக்கிறார் என்று தெரிந்ததும், நான் அறைக்கு உள்ளே சென்று விடுவேன்.

இப்படிப்பத்து நாட்கள்!

நாளையதினம் எங்களை விடுவிக்கிறார்கள்—முன் தினம் நடுப்பகலுக்குமேல், ஒரு உருசிகரமான சம்பவம் நடைபெற்றது. பெரியாருக்கு வேலைகள் செய்துவந்த 'கைதி' என் அறைக்குள் நுழைந்து 'ஐயா! தரச்சொன்னார்' என்று சொல்லி, என்னிடம் ஆறு பிஸ்கட்கள் கொடுத்தான். கையில் வாங்கியதும், என் நினைவு பல ஆண்டுகள்—அவருடன் இருந்தபோது கண்ட காட்சிகளின் மீது சென்றது' என்று விளக்கி சிறையிலே கிளம்பிய பாசமலரின் மணத்தைப்பற்றி எடுத்துச்சொன்னார். பத்து நாட்களுக்குள்ளேயே அய்யா அவர்களுக்கே பாசத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை. தண்டனையளிக்கப்பட்ட முழுக்காலமும் அங்கேயே அவர்களை விட்டுவைத்திருந்தால் இன்னும் நெருங்கிய உறவால் என்னென்ன விளைவுகள் ஏற்பட்டுவிடுமோவென்ற பயத்தால்தான் அரசு உடனடியாக சிறைக்கதவுகளைத் திறந்துவிட்டதுபோலும். விடுதலையடைந்த அன்றே நேரே சிவகங்கை மாநாட்டில் வந்து கலந்துகொண்டு சிறப்பித்து, கொள்கை முழக்கம் செய்தார்.

இத்தனையும் ஒரே ஆண்டில் நடந்து முடிந்த வீரமிகு நிகழ்ச்சிகளாகும். திராவிட முன்னேற்றக்கழகம் துவங்கிய நேரத்திலே சிரித்தவர்களும்—சிந்திக்கும் அளவிலே அந்த அரும்பு மலர்ந்திருந்தது. தாய்த்திரு நாட்டின் விடுதலை குறித்து போர்ப்பரணி பாடிய இளைய சமுதாயத்தின் வீரத்தீரம் தென்னவர் கண்களின் முன்னே நிழலாடத் துவங்கியது. வகுப்பு நீதி குறித்து நாளெல்லாம் போராடி அரசினரின் கண்

களைந்திறந்து விடுவதற்காக கழகம் மேற்கொண்ட முயற்சிகள். பாதிக்கப்பட்டவர்களால் பாராட்டும் படியாக அமைந்தன. இந்த முறைகளிலே எந்தத்துறையை எடுத்துக்கொண்டாலும் புகழ் முழக்கமிட்டு வெற்றிகாவியம் தீட்டுவதே திராவிடர் தம் பேரியக்கத்தின் தலையாய கடமையாக அமைந்தது.

ஓராண்டிற்குள்ளே கழகம்பெற்ற வெற்றிகள், அரசியல வாதிகளின் கவனத்தைப் பெரும்பகுதி கவரும் முறையிலே அமைந்தது. கருகப்போகும் மலர் என்று கருதியவர்கள், அது வாடா மலராக மணம் வீசுவதை அனுபவித்து, அங்க லாய்ந்தனர். முதலாண்டு முடிவதற்குள்ளேயே திக்கெட்டும் 505 திராவிட முன்னேற்றக் கிளைகள் தழைத்தன. இதயத்தைக் கட்டிப்பிடித்திழுக்கும் காந்த சக்தி படைத்த இரு வண்ணக்கொடிகள் மூலை முடுக்கெல்லாம் பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்தது. இங்கு வேறு எந்தக்கட்சியுமே தலை யெடுக்கவிட மாட்டேனென்று வீராப்புப்பேசிய இடங்களி லெல்லாம் தி. மு. க. ராஜநடைபோட்டது. மிட்டா மிராசுகள் கொட்டமடித்த குட்டி ராஜ்ஜியங்களிலே கழகத்தோழர்க ளாற்றிய அரும்பணி ஆதிக்கவாதிகளின் வேட்டைக்காட்டைத் தகர்த்திடுவதாக அமைந்தது. "உடம்மை சொகுசுக்கும் சோம்பலுக்கும் இரையாக்கிவைத்திருப்பவன் மனிதவழியை மறந்தவன்" என்று தேரோ என்ற பேரெழுத்தாளன் குறிப் பிட்டான். சொகுசையும், சோம்பலையுங்கண்டறியாது, மனித வழியை மறக்காத மறவர் படைதான் கழகத்திலே திரண் டிருந்து ஓய்வின்றி, எதிர்ப்புக்கண்டு சஞ்சலப்படாமல் சிரித்த முகத்துடனே நாடு வாழ நாளெல்லாம் பாடுபட்டனர்.

மக்களின் உள்ளத்திலும் அவர் தம் இல்லத்திலும் ஏற்றப் பட்ட கொள்கை தீபத்தின் ஜோதி குறையாமலிருந்திட அண்ணாவின் ஆற்றலிலே அசைக்க முடியாத நம்பிக்கை வைத்த அருமைத் தம்பிகள் பெரும் பணியாற்றிப் பாதுகாத்து வந்தனர். பாவலர் போற்றிய நாவலரின் சொல்லோவிய மும், சுவையாக அவர் ஏற்ற கழக வளர்ச்சிப்பயணமும் :

கோவை முத்தமிழ் மாநாட்டிலே அண்ணா 'ஹைட்ரஜன் குண்டு' என்று வர்ணித்த கலைஞர் கருணாநிதியின் தீரமிக்க ஓயா உழைப்பும்; காடுமேடு சுற்றி சழகத்தின் இருதயமெனத் திகழ்ந்த இயக்கத்தோழர்களின் அருமைத்தோழர் என். வி. நடராசனின் பேருழைப்பும் "நன்றுண்ட மூவேந்தர் நாகரிகம் மாற்றி வென்றுண்ட ஆரியத்தை வென்றுளத் தோன்றியவர், குன்றா மறவக் குரிசிலார் அன்பழகர் என் தோழர் என்னல் எனக்கும் பெருமையதே" என்று புரட்சிக் கவிஞர் பாரட்டுரைத்த அருமைமிகு பேராசிரியரின் சிறப்பு மிகுசெயலும்; "இரத்த பாசத்தைவிட நாட்டுப்பற்றையே பெரிதாக எண்ணும் பெற்றிமைவாய்ந்தவர் சம்பத் எனவேதான் தன் சொந்த சிற்றப்பாவே தவறுசெய்தபோது கூட துளியும் கலக்கமின்றி அந்தத்தவற்றைத் தைரியமாக எதிர்த்து நின்று வீராவேசத்துடன் போரிட்டார். அதன் அடிப்படையிலே அமர்ந்திருந்த கடமை உணர்ச்சியையும் தன்மான உலகு என்றும் மறவாது" என்று ஏடுகளின் பாராட்டைப்பெற்ற செல்வர் சம்பத்தின் சங்கநாதமும், பல்கலைக் கழகத்திலிருந்து நேரே பகுத்தறிவுப் பாசறைக்கு வந்த தோழர் மதியின் தொண்டும்; சிந்தனைக்கருவூலம் நிறைந்த தோழர் சி. பி. சி. யின் சூறாவளிப்பயணமும், மற்றுமுள்ள எண்ணற்ற முன்னணி வீரர்களின் பேரெழுச்சி நிறைந்த உண்மைத் தொண்டால் கழகம் பொலிவுப்பெற்று அரசியல் ராஜ பாட்டையிலே வீரநடைபோட்டது.

"இலட்சியம் நமது இருதயம், கொள்கைகள் நம் நரம்புகள்" என்று நம்பிப்பணியாற்றிய பல்லாயிரக்கணக்கான வாலிபர்களின் படைவரிசை "இப்படை தோற்கின் இனி எப்படை ஜெயிக்கும்?,' என்ற வீரமொழியை அவர் தம் அருமைத்தளபதியாம் அண்ணாவிடமிருந்து பெற்றது இந்தக் காலத்திலேதான்.

அதற்கடுத்த ஆண்டே 5-11-51ல் கழகத்துக்கென சென்னையில் முப்பதாயிரம் ரூபாயில் மாளிகையொன்றும் வாங்

கப்பட்டது. அந்த மாளிகைக்கு 'அறிவகம்' என்ற எழிலான பெயர் சூட்டப்பட்டது 2-12-51ல் அறிவகத்தைத் தோழர் ஜான் திறந்துவைத்தார். டிசம்பர் திங்கள் 13, 14, 15, 16 ஆகிய நான்கு நாட்களிலும் மாநில மாநாடு சிங்காரச் சென்னையிலே சிறப்புற நடந்து முடிந்தது. பொதுத்தேர்தலில் கழக ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவோருக்கு ஆதரவளிப்ப தென்ற முறையிலே கொள்கை முரசொலித்து மாநாடு சிறந்து காட்சியளித்தது. அரசியல்வாதிகளின் கவனத்தை இந்த மாநாடு கவர்ந்து நின்றது. அந்த நான்கு நாட்களும் சென்னை வாசிகளின் இதயத்திலே மறக்க முடியாத இடத்தைப் பெற்றன. புதுக்கழகம் அரும்பிய இரண்டு ஆண்டுகளுக் குள்ளேயே இப்படி ஒரு கவர்ச்சியும்—கருத்தும் நிறைந்த மாநாடு நடைபெற்றது கழகத்தின் கண்ணியத்தை மேலும் பல மடங்கு உயர்த்தியது. கழகத்தின் எதிர்பாராத வளர்ச்சி அதன் அரசியல் வைரிகளின் உள்ளத்திலே கிளர்ச்சி மூட் டுவதாக அமைந்தது.

அரசியல் அரங்கத்திலே நடைபெற்றுவந்த வசை புராணமும், கருத்தற்றவாதமும் தோல்வியடையவே தங்களின் எண்ண வெற்றிக்காக நல்லிதயம்ஏற்காத வழியிலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கால் வைத்தனர். கல்லடியும்; கம்பு வீச்சும்; கத்திக் குத்தும் அரசியலுக்கு வந்து சேர்ந்தது. நீதி யின் கண்ணீர் பெருக்கெடுத்தது. ஜனநாயகவாதிகள் கண் களை மூடிக்கொள்ளுமளவு கேவலான நிலைமை உரு வெடுத்தது.

திலக்கோட்டையிலே கழகத் தோழர் காத்தான் தாக்கப் பட்டார் காலிகளால். அதைத் தொடர்ந்தே அவரது தம்பி தோழர் கருப்பையாவை அறிவாளால் வெட்டினர். செப்டம்பர் 28 ல் நடைபெற்ற கழகக் கூட்டத்தை சின்னாளபட்டியில் கல் லெறிந்து கலைக்க முயற்சித்தனர். அம்மாபேட்டையிலே கழகத் தின் இருவண்ணக் கொடி அசைந்தாடுவதைக் காணக் கண்

கூசிய பிரகஸ்பதிகள் அங்கே கொடி பறக்கக் கூடாதென்று அட்டகாச ஆர்பாட்டம் புரிந்தனர். திருவல்லிக்கேணியிலே தோழர் நாகூர் அனீபாவின் இசைக் கச்சேரியின்போது தங்களது அரசியல் சூது அம்பலத்துக்கு வருகிறதேயென்பதை யறிந்த காங்கிரஸ் நண்பர்கள் 'பாடாதே' என்று கூக்குரலிட்டு கல்லெறிந்து கலகம் செய்தனர். ஆஞ்சான்புரம் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் புகுந்து ரௌடித்தனம் புரிந்தனர். தேனி யிலே நடந்த பயங்கரத்தைக் கேட்டு நாடே திகைப்படைந் தது. சிறிது தாமதித்திருந்தால் நாவலரின் உயிரையே அந்த அரக்க மனம் கொண்டவர்கள் குடித்திருப்பார்கள். நீதிக்கு மதிப்பளித்த காவலர்களின் முயற்சியால் அன்று தலைப்பிட வேண்டியிருந்த துயர அத்தியாயம் தடுக்கப்பட்டது. அரசிய லிலே இப்படியும் ஒரு வெறியாட்டம் போட முடியுமென்பதை அராஜகவாதிகள் நாட்டுக்கு விளங்க வைத்தனர். கோபுர உயரத்துக்கு ஏற்பட்ட கொள்கை தீபம், தீயவர்கள் விரும் பிய காரிருளுக்குத் தடையாக இருந்தது. பிழைப்புத் தேடி அரசியல் வாசலிலே கால் வைத்த அநாமதேயங்கள் வாழ வேண்டிய வாழ்க்கைக்காக எதையுமே செய்யத் தயாராகினர். கருத்துப்போர்; சிந்தனைத் தெளிவு இவையெல்லாம் கேலிக் கூத்தாகத் தெரிந்தது. வைர நகையைத் திருடிச் செல்பவ னுக்கு அதன் வனப்பும்; ரசனையும் தெரிய நியாயமில்லை. அது போலத்தான் உயரிய கொள்கை பற்றியோ, அந்தத் தத்துவத் தின் மேன்மை பற்றியோ...அராஜகத்தை நம்பியோர் எண்ண வில்லை. அந்தத் தத்துவம் வளர்ந்தால் தங்களது சுகவாழ்வுக்கு வெடி வைக்கப்படுமென்பதை மிக நன்ருக உணர்ந்தனர். அதன் விளைவாக......

ஜனவரி திங்கள் 24-வது நாள் இயக்க இளைஞன் நெல்லிக் குப்பம் கண்ட செயல்வீரன் மஜீது அரசியல் பகைமை காரண மாகக் கொலைசெய்யப்பட்டான். தென்னகம் காணக் கூடாத காட்சி நிகழ்ச்சி உருவெடுத்தது. மண்ணிலே ..தான் பிறந்த மண்ணுக்காக மாவீரன் மஜீது ரத்தம் கொட்டினான்.

செந்நீரைக் கொட்டிய செந்தமிழ் வீரனுக்காக கண்ணீர்க்கடல் பேரலை எழுப்பி நின்றது திருவிடத்திலே கொள்கை பேசத் தெரியாத கோழைகள் கட்டாரியின் துணையோடு, கள்ள நினைவின் வலிவோடு சந்தித்தனர். நீதியின் கண்கள் நேர்மையற்றவர்களால் மூடப்பட்டன. இலட்சிய வெற்றிகளை தேட வேண்டியவர்கள் எத்தகைய விலை தர வேண்டியிருக்குமென்பதை அண்ணா எடுத்துக்காட்டிய தியாக பரம்பரையிலே இடம் பிடித்துக்கொண்டான் மஜீது அந்தத் தியாகத் திருவிளக்கைத் தந்த மஜீது குடும்பத்தினருக்கு அண்ணா பெரு நிதி திரட்டி உதவினார் கழகத்தின் மூலமாக.

ஒரு மஜீது உயிர் துறந்ததாலோ, ஒரு உடையார்பாளையம் வேலாயுதம் மரக் கிளையிலே பிணமாகத் தொங்குவதைக் கண்டோ ஒரு தாளமுத்துவும்-- நடராசனும் சாவைமுத்தமிட்ட சோக சேதியைக் கேட்டோ, பல தேனீக்களும், பல தேவாரங்களும், பலப்பல அம்மாபேட்டைகளும் நடந்து முடிந்த குழப்பந்தரும் நிகழ்ச்சியைக் கண்டோ வளரும் இயக்கம் கலங்கவில்லை. அதன் வளர்ச்சி வைரிகள் எதிர்பாராத முறையிலே பெருகி வந்தது. காற்று வீசிய இடங்களிளெல்லாம் கழகத்தின் கொடி அசைந்தாடியது. கட்டாரி தூக்கியோர், கல்வீசியோர், கலகம் செய்தோர் சிந்திக்க வேண்டிய கட்டம் வந்து சேர்ந்தது.

4—3—52ல் கழகத்தின் பிரசார பலத்தால் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு வெற்றியடைந்த எம் எல். ஏ எம் .பி.க்கள் உறுதிமொழி அறிவகத்திலே நிகழ்ந்தது. ஒப்பந்தத்துக்கு தீப்பந்தம் வைத்த மாணிக்கவேலரின் துரோகப்படலம் பொது மக்களைக் கவர்ந்திருந்தது, மந்திரி பிச்சைக்கு மடியேந்திய அந்த மகானுபாவர் மக்கள் மன்றத்திலே தேர்தலின்போது வாக்களித்ததை மறந்து பவனி வந்தார். நீதியின் தீர்ப்பைச் சொல்ல வேண்டிய மக்கள் மன்றம் வாலாஜாவிலே அவரைச் சந்தித்தது. நகராட்சி வாசகசாலையைத் திறந்து வைக்க வந்த மந்திரி மாணிக்கவேலருக்கு வாலாஜா தோழர்கள் கருப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்து தங்களது கண்டனக்

கருத்தைத் தெரிவித்தனர். மறந்த கடமை அங்கே கண்ணிய மிக்கவர்களால் நிறைவேற்றப்பட்டது. புதிய மந்திரி பல்லாயிரக்கணக்கான கருப்புக் கொடிகளுக்கிடையே மூழ்கி. பலத்த தடியடிக்குப் பிறகு, கழகத்தோழர் எழுவரை சிறைக்கனுப்பி வைத்துவிட்டு பவனி வந்தார். இந்த கருப்புக்கொடி நிகழ்ச்சி குறித்து அண்ணா குறிப்பிட்டபோது... ' ஒப்பந்தம் என்ற உடனே இது ஒரு பத்திரமாகப் பதிவு செய்யப்பட வேண்டியது போலும் என்று எண்ணிக்கொண்டு ஸ்டாம்பு பேப்பரில்எழுதிக் கையெழுத்திட்டு அனுப்பியவர்கள் கூட உண்டு. அவர்கள் போல, புரியாதவர்களல்லவே மற்றவர்கள் சிலர்' திராவிட நாடு இதழின் வாசகத்தை எழுதிக் கையொப்பமிட்டு அனுப்பினர்.

சிலர் தமிழில் அல்ல, ஆங்கிலத்திலேயே திராவிடநாடு பிரச்சினையை ஆதரித்து ஒப்பந்தக்கடிதம் அனுப்பினார்கள். நண்பர் மாணிக்கவேலர்—மறந்துவிட்டேன், மந்திரி மாணிக்க வேலர் அனுப்பிய ஆங்கிலக் கடிதம். அடுத்த இதழில் 'பிளாக்' செய்யப்பட்டு வெளிவருகிறது. இந்தக் கடிதத்தின் தொடர்ச்சியும் வெளிவருகிறது.

அன்று கொள்கையைக் காத்த உங்களுக்கு, என் நன்றியறிதலைக் கூறி, இதனை முடிக்கிறேன். வாலாஜா தோழர்கள் தி. மு. கழகத்தின் கருத்தை, அமைச்சர் அறியும்படிச் செய்ததற்காக, கழகம் நன்றி கூறிக் கொளக்றது...' என்று எழுதினார்.

துரோகத்தின் நிழலிலே வாழ நினைத்தவர்களை, அவர்களின் பூர்வாசிரமத்தை அம்பலப்படுத்தியது கழகம். மூக்கறுபட்ட நிலையிலே முக்காடிற்குள்ளே அந்தப் பரிதாபதிற்குரியவர்கள் நுழைந்தனர். சந்தனக்காட்டுக்கு வந்தவர்கள் சாக்கடையிலே மூழ்கினர். இது விசித்திரமானதாக மட்டும் அமையவில்லை, மக்களை விழிப்படையச் செய்வதாகவும் அமைய முடிந்தது.

துரோகப்படலத்துக்குப் பிறகு, கழகம் புதிய தெம்போடு, மக்களிடையே கொள்கை வளர்க்கும் இலட்சியக் குமாரர்கள்

என்ற பெயரோடு மலரத் துவங்கியது. அந்த மணத்திலே புரட்சி வாடை கலந்து வந்தது.

1952ம்ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதலாம் தேதி ரயில்வே நிலையங்களிலிருந்த இந்தி எழுத்துக்கள் அழிக்கப்பட்டன. தமிழர்களை அவமானப்படுத்துவது போல தலை தூக்கி நின்ற இந்தி எழுத்துக்களின் முகத்திலே தார் பூசப்பட்டது

சங்கம் வளர்த்த சிங்கத் தமிழரின் வாழ்விலே குறுக்கிட வந்த இந்தி வாலறுபட்டு ஓடியது. கழகம் துவக்கிய ஆகஸ்டு அறப்போரை பாரதப் பிரதமர் பண்டித நேரு "சைல்டிஷ்" "ஃபென்டாஸ்டிக் நான்சென்ஸ்" என்ற கடுமொழியால் வர்ணித்தார்.

அந்த கேலி மொழி அரசியலிலே மிக உயர்ந்தவரால் கூறப் பட்டது கேட்டு தென்னக அரசியல் வானிலே பேரிடி ஒன்று கர்ஜித்து முடிந்தது. தேன்மொழியாம் தமிழைக் காப்பாற்றிக் கொள்ள முயன்றமுற்போக்கு வாதிகளைக் கூறக்கூடாத வார்த்தைகளால் பேசக் கூடாதவர் பேசியது சிந்தனைக்குரிய பிரச்சினையாகி விட்டது தென்னக விடுதலை இயக்கம் நடத்திய ஒரு அறப்போர் அலட்சியத்திற்குள்ளாகியது டில்லி பீடத்தின் ஆணவத்தை அறிவிப்பதாகவே ஆகியது.

அந்த ஆணவத்தை சவாலாக ஏற்றது கழகம். 1953 ஜுலை 15ல் மும்முனைப் போராட்டமாக அது உருவெடுத்தது. குலக்கல்வித் திட்டத்துக்கு சாவுமணி யடிக்கவும்; வடக்கத்திச் சிரிப்போடு நின்ற டால்மியாபுரத்தை கல்லக்குடியாக்கிடவும் ; ஆணவம் பிடித்த மேலிடத்திற்கு அறப்போர் வீரர்களின் நிலைமையைத் தெளிவாக்குவதற்காகவும் ஜுலை 15ம் நாளன்று ரயில் நிறுத்தப்போராட்டம் துவக்கப்பட்டது, கழகத்தின் கட்டளைக்கிணங்க ஓடும் ரயில்களையெல்லாம் ஓடவிடாது கழகத் தொண்டர்கள் தடுத்தனர். கல்லக்குடியிலே அறப்போரில் முன்நின்று கலைஞர் தீவிரப் பணியாற்றியும்; கவிஞர் கண்ணதாசன் உடனிருந்து செயலாற்றியும் ...அங்கே துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது. கலைஞர் போன்ற முன்னணி வீரர்களின் கவ

ணிப்பிலே நடைபெற்ற அமைதியே உருவெடுத்த இலட்சியப் பணி அமளிக்குள்ளாக்கப்பட்டது. இயக்கத்தின் கண்மணிகள் இன்னலுக்கு ஆளாகினர். கவிஞருக்கும் கை முறிவு ஏற்படுமள வுக்கு பயங்கரம் நடந்த பிறகு துப்பாக்கிப் பிரயோகம் அங்கே நடத்திக் காட்டப்பட்டது.

தூத்துக்குடியிலும் இதே வேதனை தலைவிரித்தாடத் துவங்கியது. அங்கே நடந்த ரயில் நிறுத்தப்போராட்டத்தில் நடந்த துப்பாக்கிப்பிரயோகத்தால் மந்திரம், சீனிவாசன், உச்சிமாகாளி, கணபதி ஆகிய நான்கு இலட்சிய வீரர்கள் மண்ணிலே சாய்ந்தனர். மானங்காத்த போரிலே நான்கு மறவர்கள் பிண மானார்கள். குண்டுக்கு மார்பைக்காட்டிய அந்தக் கொள்கைக் குமாரர்களைக்கண்டு தென்னகம் தேம்பியழுதது. துப்பாக்கித் துரைத்தனமோ மிடுக்கோடு நடைபோட்டது. போராட்ட நாளுக்கு முன்னரே அண்ணா போன்ற முன்னணித் தலைவர்கள் கைது செய்யப்பட்டு காராக்கிருகத்திற்குள்ளே தள்ளப்பட்ட நிகழ்ச்சி போராட்டவேகத்தை அதிகமாக்கும் சக்தி பெற்றது. அடக்கு முறையும் அதுபோலவே தனது முழுசக்தியையும் பிரயோகித்துப் பார்த்தது, கல்லக்குடியிலே லால்குடி நடராஜனும், கேசவனும் குண்டுகளை மலர்ச்செண்டுகளாக ஏற்று மரணத்தை முத்தமிட்டனர். தோழர் சந்தனம் ஜோசப் தனது இடது கையை ஆணவத்திற்கு காணிக்கையாகத் தந்தார். தோழர் செபாஸ்டியன் — தனது 'ஆண் குறி'யை இழந்து தவித்தார், கொடுமைகள் பலவற்றைக்கடந்து இலட்சியத்தின் கரங்கள் உயரே தூக்கப்பட்டன. அங்கே தெரிந்த இயக்கத்தின் இதய தீபம் பாதை மறந்தவர்களைத் தலை சாயவைத்தது.

பிறந்த ஜீவ பூமிக்காக இரத்தக்காணிக்கை செலுத்தியான பிறகு, தலைவர்களைப்பற்றிய வழக்கு நீதி மன்றம் சென்ற பிறகு, பல்லாயிரக்கணக்கான இயக்கத் தோழர்களை சிறையிலே பூட்டியான பின்னர் ஆதிக்கம் தனது ஆணவ பீடத்தைவிட்டுக் கீழிறங்கிவந்தது. புயலுக்குப்பின் கிளம்பிய

அமைதி அங்கே பிறந்தது. ஆச்சாரியாரின் அபூர்வம்கண்டு பிடிப்பாகிய குலக்கல்வித்திட்டமென்ற ஆகாததிட்டம் புதை குழிக்கு அனுப்பப்பட்டது. டால்மியாபுரம் முகர்திரும்பிக் கொண்டது. கல்லக்குடி சிரித்தது. தென்னவர் இழிமொழி கூறி மகிழ்ந்த டில்லி மேலிடம் புலி நிகர் மாந்தரின் போர்க் குரல் கேட்டு அசைந்தனர். இலட்சியவெற்றிக்காக எத்தனை மாணிக்கங்களையும் இழக்கத்தயாரென்று முழக்கமிடும் முனைப்போராட்டம் வழிகாட்டியாக அமைந்தது. வெறும் பேச்சு வீரர்கள் மட்டுமல்ல, அங்கேயும் தியாக சீலர்கள் பலருண்டு, குண்டுக்கு மஞ்சாத குமரர்கள், சிறைகண்டு சித் தங்கலங்காத சிங்க நெஞ்சர்கள் ஆயிரமாயிரமாக உண்டு என்பதை அரசியல்வைரிகள் வாய்திறந்து பேசிடும் நிலைமை வளர்ந்தது. இலட்சிய வீரர்களின் தியாகத்தால் கிடைத்த வெற்றி, நீதியின் கருத்தைப் பலப்படுத்தும் கழகத்தின் திற மையைத்தெளிவாக எடை போட்டுக்காட்டியது.

'அடக்கு முறையால் என்ன செய்ய முடியும்? சில பேரைச் சிறையில் அடைக்கலாம்; சிலரை நொண்டியாக்கலாம்—இந் தத் துர் அதிஷ்டம் வாய்ந்த திராவிடநாட்டில் ஒரு திராவிட னுக்கு ஒரு கை போனால் அவன் சட்டைத்துணியில் கால் கெஜம் மீதியாகும். ஒருகால் போனால், கால் சட்டைத்துணி யிலிருந்து ஒரு கால்கெஜம் மீதியாகும்'' என்று வேதனைப்பட்டு திராவிடர்கள் அநாதையாகக்கப்பட்டதை விளக்கிய அண்ணா "தொண்டர்கள் பிணமாக நேர்ந்திடினும் அவர்களுடைய கருத்து பிணமாகாது'', என்பதையும் விளக்கி இலட்சியத்தின் தெளிவைக்காட்டினார். அண்ணா கண்ட அமைதியாக இயக் கத்தையும் எத்தகையை அமளிக்கும் ஆளாக்க முடியுமென் பதை விசித்திர சித்தர்கள் சித்தரித்துக்காட்டினார்கள். சோலையைப்பாலையாக்கிடும் ஆற்றல் படைத்தவர்கள் மக் களின் பரிதாபத்திற்கு ஆளாகி நின்றனர்.

குமுறி வெடித்த எரிமலையின் நெருப்புக்குழம்பிலே குதர்க்கவாதிகள்--தத்தளித்தனர். இலட்சியத்தை

இதயத்திலே தங்கியிருந்தவர்களின் அணிவகுப்புப்பெருகி நின்றது. இந்த மண்ணுக்குரியவர்வர்கள் இரத்தஞ்சிந்தியதை நல்லவர்கள் எண்ணிப்பார்க்கத்துவங்கினர். சுக வாழ்வுக்கோ படாடோபத்துக்கோ ஆளாகிடுவதற்காக விடுதலை வீரர்கள் முன் கரமெடுக்கவில்லை........ஒப்பற்ற ஒரு சமுதாயத்தின் நல்வாழ்வுக்காக தாங்கள் இன்னலை ஏற்று தியாகசீலராக மாறினர். வேலியைத்தாண்டியும் அந்த ரோஜாவைப் பறித்த காரணம் மனதுக்கினியவளிடம் சேர்ப்பிப்பதற்காகதான். ஆதிக்க வேலிகள் பலவற்றைத்தாண்டி அந்த அழகு மலரை எடுத்துவந்ததும் எண்ணத்தால் சிரிக்க முடிந்தது இலட்சிய இளைஞனால். கோட்டானின் கூக்குரலுக்கும், நரியின் ஓலத் துக்குமிடையே அரசியலை நடத்தியவர்கள் ஒய்ந்து நின்று வாய்பிளந்து' கழகத்தின் கவர்ச்சி மிகுந்த சக்திகளை அது கையாண்ட யுக்திணக்கண்டு அசந்து நின்றனர்.

கழகத்தின் வெற்றி முழக்கம் திருச்சியிலே பேரெழுச் சியையும், எழிலையும். தேடிச்சேர்த்தது. 1956 மே திங்கள் 17, 18, 19, 20 ஆகிய நான்கு நாட்களில் நடைபெற்ற மாநில மாநாடு வளரவேண்டிய அளவுக்கு வளர்ந்துவிட்ட பருவ அழகை விளக்கிக்காட்டியது, திருச்சியில் கூட இருந்த மாநாட்டைப் பற்றி அண்ணு சுவைபட எழுதினர். அந்தச் சுவையிலே செந்தமிழரின் வீரம் திலகமிட்டது.

'சிங்களத் தீவிலிருந்தும், திருநெல்வேலிச் சீமையிலி ருந்தும், சிங்காரச்சென்னையிலிருந்தும், பிறமாவட்டம் பல வற்றிலிருந்தும் அடலேறுகளும், அவர்கட்கு காதற்தேனில் வீரத்தைக் குழைத்தளிக்கும் குமரிகளும், வீரரைப்பெற் றெடுத்த தாய்மார்களும் அவர் தம் இளமை வளத்தை எண் ணிக்களித்திடும் முதியோரும், வரலாறு அறிந்த மாணவர் களும், புதியவரலாறு காணும் பாட்டாளித்தோழர்களும் அணி அணியாக வரப்போகிருர்கள்; கடலலையை மிஞ்சும் களிப்பொலி எழுப்பியபடி, குடும்பம் குடும்பமாக வரப்போகி ருர்கள்—குதூகலம் காணப்போகிருர்கள். குன்றெடுக்கும்

நெடுந்தோளையும், குளிர் மதிப்பார்வையையும், இன்று கண்டோம், இனி வென்றோம் என்று எவரும் ஆர்வத்துடன் கூறிடத்தக்க முறையில் திரண்டுவருகிறார்கள். திரு இடத்தவர்! காணவாரீர்! கடமையை உணரவாரீர் என்ற எழுச்சிவரிகள் மாநாட்டின் சிறப்பைவிளக்கியது.

திருச்சி மாநாடு இயக்கவளர்ச்சியிலே புதிய திருப்பத்தை உண்டாக்கியது பொதுத்தேர்தலுக்கு முன்பாக கூட்டப்பட்டதாகையால் அரசியல் ஆருடக்காரர்களின் பார்வையிலிருந்து தப்பவில்லை அது. சரித்திரம் காணாதபுதுமையை இயக்கம் மாநாட்டிலே சாதித்தது. கழகம் பொதுதேர்தலில் ஈடுபட வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்சனை மாநாட்டுக்கு வருகை தந்த பொதுமக்களின் தீர்ப்புக்கு--ஓட்டுமுறையிலே--ஏற்பாடு செய்த முறை ஜனநாயகவாதிகளின் சிந்தையிலே தேன்குடம் சாய்ப்பதுபோலாகியது. இந்த நிகழ்ச்சியொன்றே சாதாரண பாமரமக்களையும்-- பொது மக்களையும் கழகம் எத்தகைய மனவரத்தோடு கைகொடுத்து நம்புகிறதென்ற பெருந்தன்மை நாட்டிற்கு விளக்குவதாக அமைய முடிந்தது.

மாநாடு முடியும்வேளையில் வோட்டுச் சீட்டுகளை எண்ணி பொதுத்தேர்தலிலே கழகம் போட்டியிடவேண்டும் என்ற தீர்ப்பை பொதுமக்கள் அறிவித்திருப்பதாக வெளியிட்டதும் இடியென கையொலி எழுப்பி வரவேற்றனர் மாநாட்டின் பார்வையாளர்கள். பொதுமக்களிடமிருந்து கிடைத்த தீர்ப்பு, பொல்லாங்கு புரிந்தோரின் எதிர்கால அரசியலின் இருண்ட நிலைக்கு காரணமாகுமென்று கழகத்தினர் களித்தனர். பொது மக்களைக்கூட்டி நாட்டின் நல்வாழ்வுக்கான திட்டங்களை எடுத்துச்சொல்லிய கழகம் இனிமேல் சட்ட மன்றத்திலே நுழைந்து பாராளுமன்றத்திலே அழகு நடைபோட்டு இலட்சியக்கருத்தை சொல்லத்தயாராகியது. மாநாட்டிற்குப் பின்னர் அதன் சிறப்பை வீரச்சிரிப்போடு எடுத்துச்சொல்லியது அண்ணாவின் பேனா.

"உள்ளம் வெதும்பிற்று, அது வீரத்தைக் கருக்கிவிடவில்லை வீரம் கொழுந்துவிட்டு எரிந்தது. வஞ்சினம்கூறினான். நாவடக்கமற்று எனை பழித்தோரை எதிர்த்து அறிவு புகட்டுவேன். களத்திலே அவருடன் போரிட்டு, அவர் தம் முரசு பறிப்பேன் அங்ஙனம் யான் செய்யா தொழியின் கொடுங்கோலன் என்ற வரையைத்தாங்கித் தாழ்வுறு வோனாகக்கடவேன். புலவர் பாடிடத் தகுதிபெறாத நாட்டுக்குரியோன் என்ற இழி நிலை பெற்றவனாகக் கடவேன். இரப்போருக்கு ஈந்திடும் நிலையையும் இழந்தவன் என்ற ஏச்சுக்கும் பேச்சுக்கும் இலக்கானவன் ஆகக்கடவேனாக--என்றெல்லாம் வஞ்சினம் கூறினன்.

நகுதக்கனரே நாடுமீக்கூறுநர்
இளையவன் இவனென உளையக்கூறிப்
படுமணி இரட்டும் பாவடிப் பணைந்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்று
உறுதுப்பு அஞ்சாது உடல் சினஞ்செருக்கிச்
சிறு சொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை என்று.

இது களுமன்றோ ஓர் கட்சி நடத்துகின்றன! அன்னக்காவடிகளுக்கு அரசியலில் என்னவேலை? இந்து உண்டோ? மித்திரன் உண்டோ? பேழை உண்டோ? பெரும் பண்ணை உண்டோ? என்று சிறுசொற்சொல்லிய சிறுமதியாளர்கட்குப் பாடம் கற்பிக்கவிரும்பினர், தம்பி, நமது கழகத்தோழர்கள்—அதுதான் திருச்சி மாநாடு.

'இழித்தும் பழித்தும் பேசிடும் அரசர் தம் முரசு பறிப்பேன் என்று அண்ணு எடுத்துக் காட்டிய நிகழ்ச்சியை நடை முறையாக்கிக் காட்டிடும் பேரெழுச்சி மாநாட்டிற்குப் பிறகு கிளம்பியது. பட்டி தொட்டி யெல்லாம் கழகம் தனது புதிய திருப்பமாக தேர்தலிலே ஈடுபாடு கொள்வதானது நாட்டு மக்களிடையே கழகம் பற்றிய பிரச்சனை நாளுக்கு நாளும் இதயத்திலே எதிரொலிக்கத் துவங்கியது. ஆட்சி பீடத்தைக் கைப்பற்றி

விடுவார்களோ வென்று கோலோச்சிய பரம்பரை குரலை நடுக்க மெடுக்கு மளவிற்கு இயக்கத்தின் பிரசாரம் பலம் பெற்று வந்தது. 'மலர் பறித்திடுவோனுக்கு' தொட்டுத் தொட்டு கரமும் மணக்கு மன்றோ ! அதுபோலத்தான்; தாயக விடுதலைக் கான பணியில் ஈடுபட்டதால் நாம் தனியானதோர் ஆற்றலை பண்பை, பொறுமை, பொறுப்பு, கண்ணியம், கடமைஉணர்ச்சி ஆகிய வற்றினைப் பெற்று விட்டோம் அதன் பயனாக நமக்கு இயற்கையாக உள்ள குறைகள் கூடத் தாமாகப் பட்டுப்போய் புதியதோர் தகுதி கிடைத்து வருகிறது என்று அண்ணா குறிப் பிட்டது போல தேர்தல் பிரசாரத்தில் கழகம் நல்லதொரு சிறப்பிடத்தைப் பெற்ற தகுதி பிறந்தது. பண மூட்டைகளின் முன்னே ஏழையின் அரசியல் எடுபெடுமா வென்ற சஞ்சலத் தோடு அரசியல் வாதிகள் கழகத்தின் தேர்தல் ஈடுபாட்டை கவனித்து வந்தனர். நீண்ட நெடுங்காலமாகவே தேர்தலில் ஈடுபட்டு ஆட்சியைக் கைப்பற்றி வந்த அகிலஇந்தியா இயக்க மாம் காங்கிரஸ் கட்சியை தேர்தலின் முன் அனுபவமில்லாத தி. மு. கழகம் நேரடியாக சந்தித்தது, அவர்களுக்கிருந்த வசதியும் பக்கபலமும் இவர்களுக்கு இல்லை என்பது மட்டும் அல்லாமல் எதிர்ப்பும் நிறைந்த அளவிலே பெருகி வந்தது.

காங்கிரஸின் ராஜபாட்டையிலே கழகம் குறுக்கிடுவது மேலிடத்திலே கசப்பை அதிகமாக்கியது. மிட்டா மிராசுகள் கொட்டமடித்ததைப் போல ஏக போக ஆதிபத்தியம் புரிந்த ஒரே கட்சி ஆட்சிக்கு இடையே சொந்தம் கொண்டாடிப் புக இருந்த கழகத்தை தேர்தலோடு தொலைத்து விட வேண்டு மென்று முடிவு கட்டினர். கட்சித் தலைமை சில பல இடங் களிலே இதைத் தெளிவாகவே கூறிடவும் ஆரம்பித்தனர். 'தேர்தலோடு மூக்கறு பட்டு கழகம் மூலையிலே உட்கார வேண்டியது தான். அவர்களின் அரசியல் தில்லுமுல்லுகளுக்கு முடிவு கட்ட இதைவிட வேறு சந்தர்ப்பம் இனி கிடைக்க போவதாக' என்று பேசி தங்களது இதய வேகத்தை மக்களுக்

'காகிதரோஜா மணக்காது காங்கிரஸ் ஆட்சி சுகப்படாது என்று தேர்தல் கீத மிசைத்த இலட்சிய வாதிகளின் இதய தாகத்தை 'கானல் நீர்' என்று ஆளுங்கட்சியினர் வர்ணித் தனர். கழகத்தினர் கூறும் அலங்கார வார்த்தைகள் திட்டமாக முடியாதவை நடமுறைக்கு வர முடியாதவை' என்ற சஞ்சல ஒலிகளுக்கிடையே வலம் வந்தனர் வசதி படைத்த கூடாரத் தினர். மக்களின் கரங்களையே நம்பியிருந்த கழகத்தினர் அந்தக் கரங்களின் வலுவால், நல்லிதயங்களின் துணிவால் 'மக்களுக்காக மக்களாட்சி' என்ற ஜனநாயகத் தத்துவத்தை முரசொலித்துக் கொண்டு சீமானோ சீற்றம் மிக்கவரோ, சிற்றரசோ குட்டி ஜமீனோ பட்டணமோ பட்டிக்காடோ இங் கெல்லாம் நேர்மையின் தூதுவர்களாக உலவினர். கழகத்தின் கட்டுப்பாடான கண்ணியமிக்க பிரசாரம் பாமரமக்களின் கண் களைத் திறந்தது, சுதந்திரப் பள்ளுப்பாடி ஆனந்தத் தாண்டவ மாடியவர்களைப் பற்றி சோற்றிக் கில்லாது இளைத்த கூட்டம் ஒரே முடிவிற்கு வந்தது.

இல்லாமை ஏனென்று கேட்க; சுகவாசம் உங்களுக்கும் சுமையான வாழ்வு எங்களுக்கும் எப்படி வந்தது என்றுமிரட்ட ஆளவந்த நீ மக்களை வாழவை என்று எடுத்துச் சொல்ல ஒரு கட்சி--ஏழையின் தோழமை பெற்ற ஒரு கட்சி--சட்ட மன்ற பாராளுமன்றத்துக் குள்ளே நுழையப் போவதை நினைத்த போது, வாடி வதங்கியவர்களின் கருகிய முகத்திலும் மின்னலைப் போல புன்னகை தோன்றி மறைந்தது. அந்தப் புன்னகை நாளெல்லாம் நிலைத்து தியாக பூமியாம் இத் திருவிடத்தார் என்றென்றும் இனித்திருக்க வேண்டுமென்ற இலட்சியமோகத் திலீடுபட்ட ஆயிரமாயிரம் காளையர் இரவென்றும் பகலென்றும் பாராது, உறக்கமின்றி உணவின்றி, நல்லஉடையின்றி, அலைந்து திரிந்தனர். காரிலே அவர்களது பிரசாரம். கால்கடுக்க இவர் களது பிரசாரம். பூமாலை பூரிப்பு வரவேற்பு செல்லுமிடங்களிலே அரசியலே மெருகுநிலை பெற்றவர்களுக்கு. சோடா உபசாரங் களுக்குக் கூட வகையில்லாமல் பானை நீரைப் பருகிவிட்டு பட்டிக்குப் பட்டி கொடிதூக்கிக் கொள்கை வளர்க்கும் வேந்தனை யான நிலை இவர்களுக்கு.

இந்த நேரத்திலேதான் நெஞ்சம் திடுக்கிடும் நிகழ்ச்சி நடந்து முடிந்தது. திருவிடத்திலே இருள் கப்பிவிட்ட ஒரு நிலை செந்தேளும், கொடுவிடங்கொண்ட நாகங்களும் கொட்டி கொத்தி இலட்சியக் காளைகளின் இதயத்தைத் துளைத்த துயர காவியம் உருவாகிய நேரம். கண்ணீர்க்கடலிலே கழகத்தின் முன்னணி வீரர்கள் நீந்தும் வேதனையான நிலை பிறந்தது. அழுதழுது தோழர்களின் கன்னங்களும். கண்களும் வீங்கிப் போயிருந்தன. தூத்துக்குடியின் விலை மதிக்க முடியாத மாணிக்கமான திராவிடச் செல்வத்தை பகைவர் பாறையிலே வீசியெறிந்து சுக்கு நூருக்கியிருந்தனர். தேம்பிய திராவிடர் K. V. K. சாமியின் கொலைச்செய்தி கேள்விப்பட்டு திசை தெரியாது தவித்துநின்றனர். அரசியல் பகையைக் கக்கிய வஞ்சகக் கூட்டம் சாமியின் உடலிலே பதினெட்டு வெட்டுக்கள் வெட்டி மாய்த்து தங்களது காரியத்தை சாதித்துக் கொண்டனர். பட்டாளியின் தோழனைக் கட்டாரி கொண்டு வெட்டினர். எந்தச் சமுதாயத்தின் வாழ்வுக்காக நாளெல்லாம் சாமி பாடுபட்டாரோ அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களே வெட்டிச் சாய்த்து விட்டார்கள். யாருக்காக பாதை அமைத்தாரோ அவர்களாலேயே வீழ்த்தப்பட்டார். சரித்திரம் இனியும் தொடர்ந்து சந்திக்க முடியாத நிகழ்ச்சியாக எத்தனையோ உருவெடுத்தன. அத்தனைக்கும் சிகரம் வைப்பது போல சாமியின் பரிதாபகரமான முடிவைக் கேள்விப்பட்ட அண்ணா நெஞ்சிலே பெரு நெருப்புப் புகுந்தது போல துடி துடித்து, கண்ணீர்த்துளிகளைப் பேச வைத்தார்.

'அழுகிறேன், அழுகிறீர்கள், அழுகிறோம்-நம்மை அழ வைத்துவிட்ட அக்ரமக்காரர்கள் எங்கோ, இருந்து கொண்டு சிரிக்கிறார்கள். பெருமைப்பட்டுக்கொண்டிருந்தீர்களே, எங்கள் சாமி எங்கள் சாமி என்று மார் தட்டித் தட்டிப் பேசினீர்களே, எங்கள் சாமி, எங்கள் சாமி ! என்று எங்கே உங்கள் சாமி ? என்று கேட்கின்றனர். ஐயயோ? என்ன பதில் சொல்லுவோம். வேதனையால் தாக்கப்படுகிறோம். படுபாவிகளா ! எங்கள் சாமி

யைப் படுகொலை செய்துவிட்டீர்களே. பாதகம் புரிந்து விட்டீர்கள், பண்பற்றவர்களே ! எங்கள் சாமியின் உடலைத்தான் வெட்டி எறிந்தீர்கள்! அவர் உள்ளம் எங்களோடு இருக்கிறது. வேறெங்கும் செல்லவில்லை; அது அழிந்துபடவில்லை. எங்களோடு இருக்கிறது எங்களுள் இருக்கிறது, நாங்கள் யாவரும் கே. வி. கே சாமிகளாகிறோம், அவர் காட்டிய ஆர்வத்தைக் கொள்கிறோம். அவர் பெற்றிருந்த ஆற்றலைப் பெறுகிறோம், பேயர்களே ! எங்களையும் கொலை செய்ய கத்தி தீட்டுங்கள். அரிவாள் எடுங்கள், வாருங்கள், நாங்கள் சாக அஞ்சும் பயம்பரை அல்ல, என்றெல்லாம் தம்பி' கூறத் தோன்றுகிறது. நா எழ மறுக்கிறது அழுகிறோம், அழுகுரல் கேட்கிறோம், ஆறுதல் பெற முடியவில்லை, ஆறுதல் அளிக்கச் சக்தி இல்லை, ஒருவரை ஒருவர் காணும்போது கண்ணீரைத் தான் பரிமாறிக் கொள்கிறோம். அழுகிறோம், அழுகிருய்...அழுகிறேன்... தம்பி செய்தி கேட்டதிலிருந்து வேதனையால் தாக்கப்பட்டுக் கிடக்கிறேன்—வேறு எதுவும் எழுத முடியவில்லை..."

ஆமாம் ! அண்ணு எடுத்துக் காட்டியது போல எதுவுமே எழுதவோ-பேசவோ முடியாத நிலையிலே தென்னகம் தேம்பியழுதுகொண்டிருந்தபோதுதான்... 1957 பொதுத் தேர்தல் கண்ணியம் மிக்க கழகத்தை நோக்கி சிரித்த முகத்துடனே நெருங்கி வந்துகொண்டிருந்தது. கடமையை நினைவுபடுத்திக் கொண்டே கழகக் காளையர் விழி நீரைத்துடைத்துக்கொண்டே புலியென எழுந்து நின்றனர். பணபலத்தைப் பக்கத்துணையாகவும், ஆதிக்கபீடத்தை ஆதரவாகவும் கொண்டு பவனி வந்த தேசியத்தாரைத் தேர்தல் களத்திலே நேரிடையாகச் சந்திக்கும் நேரம் வந்து தீர்ந்தது கழகத்துக்கு. கழகமோ சொல்ல வேண்டிய திட்டங்களையெல்லாம் சொல்லியாயிற்று ! பேச வேண்டிய விளக்கங்களையெல்லாம் நிலை, முறை தெரிந்து பேசியாயிற்று ! தேசீயத்தாரும் பாடவேண்டிய வசை புராணங்களையெல்லாம் பாடி முடித்து திருவிளையாடலின் கடைசிக் கட்டத்திற்கு வந்த நின்றனர்.

தென்னக மக்களைத் திக்குமுக்காடவைத்து நடந்து முடிந்தது. 116 இடங்களில் போட்டியிட்டு கழகம் 17 இலட்சம் வாக்குகளைப் பெற்றது. ஆனால் 205 இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் 50 இலட்சம் வாக்குகளைத்தான் பெற்றிருந்தது. ஆளுந் தகுதியை காங்கிரஸ் பெற்றிருந்தாலும் சட்டமன்றத்தில் 15 இடங்களையும்; மாநிலங்களவையில் இரண்டு இடங்களையும் பிடித்துக்கொண்ட கழகத்தை அரசியல்பார்வையாளர்கள் பரபரப்படைந்த கண்களுடன் காணத் துவங்கினர். 17 இலட்சம் வாக்குகளைப் பெற்ற கழகத்தின் அபார சக்தியை நினைத்து வெளிநாட்டு அரசியல் விமர்சகர்கள் பிரமிப்படைந்தனர்; தேர்தலிலே முன் அனுபவமிலலாதவர்கள், இலட்சிய மூச்சொன்றையே மூலதனமாகக் கொண்டிருந்தவர்கள்...பழம் பெரும் தேசபக்தப் பெருமை கொண்டிருந்த ஆளுங்கட்சியை எதிர்த்து இலட்சக்கணக்கான வாக்குகள் வாங்கிய போக்குத்தான் சகல பகுதியினரையும் சிந்திக்க வைத்தது.

ஆளுங்கட்சியினருக்கு உள்ளத்திலே ஆட்டங்கொடுத்தாலும்...'ஆளப் போவது நாங்கள் தானே இந்தப் பதினைந்தால் என்ன செய்திட முடியுமென்று' ஆடுந் தொடை தட்டி நடுங்கும் கரத்தால் மீசை தடவிக் கொண்டனர்.

அந்தப் பதினைந்து பேரிலும் குறிப்பாகவும், சிறப்பாகவும் அண்ணா அவர்கள் சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதானது தாங்கமுடியாத வேதனையைத்தந்தது ஆளும் வர்க்கத்தினருக்கு ஆனாலும் 'காமராசர் அசகாய சூரர் இந்த அண்ணாதுரையின் கேள்வி அம்புகளை ஒடித்துத்தரையில் போட்டுவிடுவார்' என்றே வீராப்புப்பேசிவந்தனர். கழக நண்பர்களுக்கு சட்டசபை நுழைவு புதிய அனுபவமாக இருந்தாலும், எத்தனை கண்ணியத்துடனும், கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ள வேண்டுமோ அந்த நல் முறைகளைக்கடைப்பிடித்து, ஜனநாயகம் பேசுவோரின் கேலிக்கூத்தை அம்பலமாக்கிவந்தனர்.

எண்ணிக்கை பெரிதல்ல, எடுத்துச் சொல்லும் கருத்துரைகளே வனப்பும் வலிமையுமிக்கவை. கூறுவது யாரென்று

பிரச்சினையல்ல, கூறியது என்ன என்பது தான் முக்கியமென்ற கருத்தை கழக சட்டசபை உறுப்பினர்கள் ஏற்படுத்தித்தந்தனர். 'மெஜாரிட்டி' பலத்தை நினைத்து ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆர்ப்பரிக்கும்போது கூட கண்ணிய மிக்க கழக நண்பர்கள் அடக்கம் காத்தனர். 'கழகம் சட்ட மன்றத்தில் இடம் பெற்றதினால் இனிய நல்ல தமிழ்—கேட்கலாம். சட்டமன்றத்தின் தரமும் உயர்வடைவதாய் இனிய தாய்விளங்குகிறது' என்ற முறையில் 'ஆனந்தவிகடன்' ஏடு எழுதிக்காட்டியது. எதிர் முகாமின் கவனத்தை எந்த அளவிலே இழுக்க முடிந்தது என்பதற்கு 'ஆனந்தவிகடன்' கருத்தே சரியான சாட்சியாகும். சட்டசபை நுழைவிற்குப் பிறகு அண்ணாவின் பணியினை நாடே கூர்ந்து நோக்கத்துவங்கியது. அவரது சிறப்பினைப்பற்றி கூறவந்த 'கரண்ட்' என்ற வடக்கத்தி ஏடு ........," அண்ணாதுரை, தான் சட்டசபைக்கு நுழைந்ததைச் சரியென்று காட்டிவிட்டார். ஏனெனில் ஒவ்வொருதடவை அவர் சொற்பொழிவாற்றும்போது முழுச் சபையின் கவனத்தையுமின்றி—'டிரஷரிபெஞ்சின்' (மந்திரிகளின் பீடம்,) கவனத்தைக்கூட அவர் தன்பால் இழுத்துவிடுகிறார்" என்று மகிழ்ச்சிபொங்கிட எழுதியது. இதன் மூலமாக நாடு அவருக்கு அளித்து வந்த சிறப்பிடத்தைக் காண முடியும். இதற்கெல்லாம் சிகரம்வைப்பது போல் அப்போதைய சட்டமன்றத்தலைவர் டாக்டர் யூ. கிருஷ்ணாராவ் தியாகராயர் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் பேசும்போது,......"நான் அண்ணாவினுடைய பேச்சை தினமும் சட்டசபையில் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவர்களுடைய பேச்சைக்கேட்டுக்கொண்டிருக்கும் இலட்சக்கணக்கானவர்களில் நானும் ஒருவன். எப்படியானாலும், திரு அண்ணாதுரை அவர்கள் 'என் முக்கிய சிஷ்யர்களில் ஒருவனாக நீயும் வந்து சேருவாய்! என்று கூறி என்னை அழைத்துக்கொள்வாரென்று எதிர்பார்க்கிறேன். பேசுவதில் மட்டும்தான் சிஷ்யன் என்று சொன்னேன். காலமாறுதலில் மற்ற துறைகளில் கூட

அண்ணாவுக்கு நானும் ஒரு சிஷ்யனாகிவிடுவேனோ? என்னவோ தெரியவில்லை' என்று அழகுபடக்குறிப்பிட்டார்கள். சட்ட மன்றத்தலைவரின் பேச்சே இந்த அளவில் இருந்த தென்றால் அண்ணா எந்த முறையில் சட்டமன்றத்தைக் கவர்ந்திருந்தார் என்பது தெளிவாகிறது.

எனவே, ஆத்திரக்காரர்களின் சுடுமொழிகளும், அரசியல் இலாப வேட்டைக்காரர்களின் கிண்டல் பேச்சும் இந்தப் பதினைந்துகளால் என்ன செய்துவிட முடியும்' என்ற ஏளனமும் நாளடைவிலே என்னவேகத்தில் கூறினார்களோ அதைவிடப்பத்துமடங்கு வேகத்தில் மறையத்துவங்கியது

காஞ்சித் தொகுதியான தண்டலம் கிராமத்தில் முதலமைச்சரை அழைத்துவந்தது. மந்திரி பீடத்துக்கும்—பொது மக்களுக்குமிடையே யிருந்துவந்த இடைவெளியைத்தகர்த்த புதுமை தென்னகத்திலேயே அண்ணா அவர்களைத் தான் சார்ந்ததாகும். ஆனால், அந்தப் புதுமையை அரசுபீடம் ஜீரணித்ததாகத்தெரியவில்லை. ஏனென்றால் தண்டலத்துக்குப் பிறகு, மீண்டும் ஒரு தண்டலத்தை அவர்கள் சந்திக்க விரும்பியதாகத்தெரியவில்லை. ஆனாலும், கழக நண்பர்களின் சட்டமன்ற நுழைவை இது மாதிரியான நிகழ்ச்சிகள் தரத்தை உயர்த்திக்காட்டுவதாக அமைந்தன. தரம் உயர்ந்தது மட்டுமல்ல இவர்களே நாட்டின் நாயகர்கள்—மக்களின் குறைபாடுகளுக்காக உண்மையிலேயே வாதிடுபவர்கள் கழகத்தின் கண்மணிகளே' என்ற பாராட்டுரைகளும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கிடைக்கத்தவறவில்லை.

அதன் பயனாகத்தான் சென்னை மாநகராட்சி தேர்தல் வந்தபோது, நாட்டு மக்களின் கவனத்தைக் கவரமுடிந்தது கழகத்தால். இந்த நிகழ்ச்சியை அண்ணா அவர்கள்...... 'மாநகராட்சியின் தேர்தல் முடிவுகள் அறிவித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் நான் காஞ்சிபுரத்திலிருந்து திருவாரூர் கூட்டத்திற்கு புறப்பட்டுக்கொண்டிருந்தேன். காஞ்சீபுரத்திலிருந்து கிளம்பி செங்கற்பட்டு போனபோது நமது தோழர்கள்

5 இடங்களில் வெற்றிபெற்றிருப்பதாகக் கூறினார்கள். 'ஐந்து இடங்கள் கிடைத்துவிட்டதா' என்று நான் சந்தோஷப் பட்டுக்கொண்டேன். விழுப்புரம் வந்தபோது 15 இடங்கள் என்றார்கள் 'அப்படியா' என்று ஆச்சரியப்பட்டேன். கடலூர் சென்றேன், முப்பது என்றார்கள். ஆச்சரியம் எனக்கு அச்சமாக மாறிற்று. இன்னும் திருவாரூர் போகவேண்டுமே அதற்குள் எத்தனைகிடைத்து விடுமோ, என்று அச்சப்பட்டுக்கொண்டேன். திருவாரூர் கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது, நண்பர் கருணாநிதி 'அண்ணா-தெரியுமா' என்றார்கள்! 'என்ன ஐயா தெரியுமா என்கிறீர்கள்' என்றேன். நமக்கு 45 இடங்கள் கிடைத்துவிட்டது என்று கூறுனார்கள் உண்மையிலேயே நான் பயந்துபோய் விட்டேன்! என்று சுவைபட வர்ணித்தார்கள். மேயர் பதவியை கழகம் ஏற்பதா வேண்டாமா என்பதில் கூட அண்ணா சஞ்சலமடைந்தார். அப்போதுதான் 'மெயில்' நாளிதழ் 'பெரும்பாலான இடங்களைப்பிடித்த பின்பு மேயர் பதவியை ஏற்கமாட்டோம் என்று கூறுவது பொறுப்பைத்தட்டிக் கழிப்பதாகும்' என்று எழுதியது. 'மெயில்' கூறிய கருத்து அண்ணா அறியாததல்ல என்றாலும் சுமை நிறைந்த பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதிலே எந்தகைய நிதானத்தைக்கடைப்பிடிக்க வேண்டுமென்பதை நாட்டுக்குத் தெளிவாக்கிவைத்தார். பதவி தேடுவோர். 'நாற்காலிக்கு ஆசைப்படுவோர்' என்ற சுடுமொழியைக்கக்கக் காத்திருந்த எரிச்சல் காரர்களின் வாய் அடைபட முடிந்தது அண்ணாவின் இது மாதிரியான போக்கால்.

கழகத்தின் மாபெரும் சாதனையாக அமைந்தது, மாநகராட்சியைக் கைப்பற்றிய நிகழ்ச்சி. வழி வழி முறையாக ஒரு கட்சி ஆட்சியாக இருந்துவந்த பாரம்பரிய முத்திரை கிழித்தெறியப்பட்டது. ஆற்றல் மிகுந்த இந்தச்செயல் சர்வதேச அரசியலிலே கழகத்தின் கவர்ச்சியை மிக அதிகப்படுத்திக் காட்டியது. எகிப்திய அதிபர் நாசர் போன்றோர் தென்னகம் வந்தபோது மாநகராட்சியின் தனி மரியாதையைப்பெற்றுச்

சென்ற தோடல்லாமல் தங்க நிகர் கொள்கைகளை இதயந் தனில் தாங்கிச்செல்லவுமான சூழ்நிலை மலர்ந்தது. இந்த மலர்ச்சியால் கழகம் பெற்றுவந்த வளர்ச்சியை அகிலமும் அறிய முடிந்தது.

நாட்டின் நலத்தில் நாட்டங்கொண்டுள்ள நல்லவர்கள் இந்த நேரத்தைத்தான் கழகத்தின் பொற்காலமென்று கருதத்துவங்கினர். வரலாற்றுச்சிறப்பில் இடம்பெற்றிடும் காரிய மாற்றிவந்த கழகத்தை தேசீய முகாமினர் முழுக்க முழுக்க வெறுத்தொதுக்க நினைத்ததும் இதே நேரத்தில்தான்.

'ஒன்றோ இரண்டோ என்று கேலி பேசினாலும்......பதினைந் தாக உயர்ந்தார்கள், அதிலும் தில்லியின் காராக்கிருகக் கதவு களையே தட்டிடும் துணிபு இரண்டு ஜோடிக்கரங்களுக்கும் ஏற்பட்டுத்தீர்ந்தது. நாலோ ஐந்தோ என்று நமது மூலவரே தேர்தல் மன்னவரே கூறினார். ஆனால் அந்த சூத்திர தாரியின் சூட்சமத்துக்கு ஆப்புவைப்பதுபோல நாற்பத்தி ஐந்துபேர்... மடமடவென்றுவந்து தீர்ந்தனர். இனி வர இருப்பதோ 62 தேர்தல்......அதிலும் ஏனோ தானோ வென்று இருந்து விட்டால்......ஆகாது கூடாது......62ல் இந்தப் பதினைந் தையும் ஒரு கை பார்க்கவேண்டும்!' என்று தேசீயத் திரு வாளர்கள் வரிந்து கட்டக்கிளம்பினர்.

அதன் பயனாக தேசீய முகாமை ஆங்காங்கே பலப்படுத் தத் துவங்கினர். புதியஜீவனுக்காக புதிய ரத்தம் செலுத்தும் முயற்சி நடந்துவந்தது. காருண்யமிக்க கனம் அவர்களின் அதிர்ச்சி வைத்தியத்துக்குப் பிறகு இந்த இருண்ட நிலை ஏற் பட்டதை உள்ளத்தில் வேதனையுடன் சகித்துக்கொண்டே வெளியில் தோள்தட்டினர். 'ஆகுமா......பார்க்கலாமென்று' கித்தாப்புப்பேசிவந்தனர். எதிர்க்கட்சி நண்பர்கள் தந்த சவாலை அண்ணாவும் சாமானியமாக மதிக்காமல் கழகத் துக்கே உடன் பிறப்பாக அமைந்த கண்ணியத்துடன் ஏற்றுக் கொண்டார். 'சிங்கத்தின் கர்ஜனைபோல், புலியின் பாய்ச்சல் போல, எரிமலையின் குமுறல் போல நமது தேசீய நண்பர்கள்

ஆர்ப்பரித்துவருகின்றனர்......என்னருமைத் தம்பி 62-வருகிறது நீ என்ன செய்யப்போகிருய் உனது அரும்பெரும் பங்கென்ன. ஆற்றிடும் அரிய பணியின் பாங்கென்ன......?' என்ற அண்ணுவின் மிடுக்கான கேள்வியிலேயே ஆணவத்தின் துடுக்குத்தனம் தூள் தூளாகும் நிலை பிறந்தது.

'பழக்கமில்லாத அரும்புப் பருவத்திலேயே பதினைந்தைத் தந்தோம் பழகிவிட்ட இப்போதோ பாழ்பட்டு பத்தா தந்து விடுவோம் ! பாரீர்... 'எம் பாங்கினை' என்று ஏற்றமொழியிலே பீடு நடையிலே முழக்கமிட்டனர் கழகக்காளையர்.

அண்ணுவும் கழக முன்னணியினரும் எதேச்சாதிகாரத்தை உதைத்துதள்ள தயாராவதைக்கண்டு ஓநாய் நினைவு கொண்ட தேசீயத்தார் எதிர்ப்பு சக்திக்காக புதிய உருவம் சமைத்துக்கொண்டிருந்தனர். மலர்த்தோட்டத்திலே கீழே தலைசாய்ந்து சருகாகிவிட்ட காய்ந்து கருகிய மலரைக்கையிலெடுத்து வைத்துக்கொண்டு, 'இதோ பாரீர்......கருகிய மலர் இங்கே மணமில்லை......இது மலரவும் மார்க்கமில்லை;' என்று கூறிடும் சாகசக்காரன்போல காய்ந்த சருகுகள் சில வற்றைக் காட்டி.........இலட்சியப்பட்டாளத்தின் பாதையைத் திருப்ப நினைத்தனர்.

இப்படி ஒரு முறையை வழியாகக்கொண்டதிலே அண்ணு திகைப்படைந்தார். அதைவிட அவர்களது வலையிலே வீழ்ந்து பட்ட நமது மாஜி நண்பர்களை நினைத்தபோது தான் முன்னிலும் அதிகம் திகைப்படைந்தார். தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த நேரத்திலே இந்தப் புதிய தேசீயமும் கழக நண்பர்களை நன்ருக வேலைவாங்கத்துவங்கியது. இதிலே வேடிக்கை என்னவென்ருல் .....கண்ணியம் மிக்க கழகத்திடம் மாருத பகையைக்கக்கிவிடுவதற்கு முன்பு......'தேசீயவாதிகளிடம் காலித்தனம் குடிபுகுந்துவிட்டது. இந்தக் காலித்தனத்தைக் காலாடித்தனத்தாலேயே வேரறுக்கவேண்டும். அப்போதுதான் பதிலடி கொடுத்ததாக முடியும்' என்று ஏடு

களிலே எண்ணங்களைத்தெரிவித்து. தமது கவிதா விலா சத்தின் மேதைத்தனத்தை வெளிப்படுத்தியவர்களே !

...இலட்சியத்தின் சுகவாசம் மறந்து அதை யெல்லாம் வனவாசமாகக் கருதிக்கொண்டு, எழுதிய மை காய்ந்திடுவதற்குள்ளே, கருத்தினை மாற்றி மக்களின் மனதைக் குழப்ப வந்தது தான்......விந்தையாக அமைய முடிந்தது. ' கபோதிகளும், விபூதிகளும் முன்னர் எதிர்ப்பு மாநாடுகளை போட்டுக் கதறினரே...என்ன வாயிற்று ! அவையெல்லாம் நமது இலட்சியத்தின் அடியைக் கூடத் தொடவில்லை காலாடித்தனம் நாம் நெஞ்சிலே நினைத்திடக் கூடாத செயலாகும்.' என்ற அண்ணாவின் பெருமதிப்பிற்குரிய சிந்தனைத் தெளிவை ஏற்றுக் கொள்ளாத அப்பாவிகள் தாங்கள் போய்ச் சேரத் துடித்த இடத்துக்கே போய்ச் சேர்ந்தனர்.

அறுந்த விழுந்த நட்சத்திரங்களுக்காக யார் கவலைப்படப் போகிறார்கள் ! ஆகாத போக்கால் திசைதிரும்பிவிட்ட அவர்களுக்காக இரண்டொரு சொட்டுக் கண்ணீரைச் சிந்திவிட்டு இலட்சியப் பயணம் நோக்கி நடைபோட்டனர் கழகக் காளையர்.

முன்னரெல்லாம் நிலவின் பொலிவை விளக்கிச் சொல்வது போல, மலரின் மணத்தை மயக்கு மொழியிலே செப்பிடும் முறையிலே, தேனின் சுவையை திசை யெங்கும் தெரிய வைத்திடும் போக்கிலே அந்த தேசீய முகாமுக்கு ஓடோடியவர்கள் அண்ணாவின் அரும் பணியினையும், வாழ்க்கை சிறப்பினையும் அகிலத்துக்கு எடுத்துச் சொல்லியபாங்கை இப்போது நினைத்தாலும் சிரிப்புத்தான் மேலிடுகிறது. இந்த நிகழச்சியை நமது அருமை நண்பர் அரங்கண்ணல் அவர்கள் சுவைபட வர்ணித்தபோது......

" இன்று வாய்ப் பந்தல் போடுவதே பணியென்று உள்ளாரே கவிஞர் அவருக்கு ஒரு சமயம் பேரார்வம் வந்தது- அவருக்கு ஆர்வம் வந்தால்தான் வெள்ளம்போல் வரும் !

அவ்வளவும் சீக்கிரம் வடிந்தும், விடுமே—! அண்ணாவுக்கு பெரிய பண முடிப்பு திரட்டி அளிக்க வேண்டும் என்று! தோழர் ம. பொ. சிக்கு ஏ. பி. நாகராஜன் போன்றோர் பண முடிப் பளித்து காரும் வாங்கிக் கொடுத்த சமயம். காஞ்சிக்கு உடனே காரில் பறந்து வந்து, கவிஞர் தன் ஆர்வத்தைக் காட்டினார்! அதைவிடச் சிறப்பாக நான் செய்யப் போகிறேன், நீங்கள் சம்மதம் அளிக்க வேண்டும் என்று பேரார்வம் காட்டினார்! அப்போது அண்ணா சொன்னார்! 'கண்ணதாசா! உனக்கேன் ம. பொ. சிக்கு என்றதும் இப்படி பரபரப்பு ஏற்படுகிறது. உண்மையில் காங்கிரசு கட்சியில பாடுபட்டு அங்கிருந்து விலகும் நெருக்கடி வந்தும் பொது வாழ்க்கையை விட்டுப் போய்விடாது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஒருவர் அவர் இப்படியொரு நல்ல காரியத்தைச் செய்த அவருடைய நண்பர்களை நான் பாராட்டுகிறேன். ஆனால் அவருக்கு செய்தார்களே நாமும் அண்ணாவுக்குச் செய்வோம் என்று ஏற்படுகிற ஆர்வத்தை நான் விரும்பவில்லை. அரசியல் வாழ்க்கையில் கூட அந்தக் கட்சி செய்ததற்காக இந்தக் கட்சி செய்யும் என்கிற மனப்போக்குத் தேவையில்லை. எனக்கு வசதிகள் இல்லை. ஒரு புதிய கார் வாங்க வேண்டியதோது இல்லை உண்மைதான்! அதற்காக நிதி திரட்டுவது அளிப்பது என்பதெல்லாம் எனக்குத் தேவையில்லை, என்னால் இயன்ற வரையில் எழுதுவது-பிழைப்பது-என்கிறமுடிவிலேயே இருக்கிறேன். அதுவும் முடியாது என்கிற தள்ளாமை வந்து விட்டால், நானே பார்த்து தமிழ் நாட்டு மக்களைக் கேட்பேன்; எனக்குப் பொது வாழ்க்கையில் ஆசை அதிகமுள்ளது. என் வாழ்க்கையை கவனிக்க சக்தியில்லை, எனக்கு உதவி செய்யுங்கள் எனக் கேட்பேன்! இப்போது நீ சும்மாயிரு' என்றார்.

...என்று எழுதி புதியதாக தேசிய முகாமுக்கு ஓடோடிச் சென்றவர்களின் நிலையை அப்பட்டமாக விளக்கினார். இதன் மூலமாக புதிய இடந்தேடிகளின் தத்துவத்தின் தன்மையும் வேகமும் எத்தகையது என்பது புரிவதோடு பெருந்தகையாளர்

அண்ணாவின் உள்ளம் எத்தகைய உயர் எண்ணங்கள் மலர்ந்திடும் 'மலர்சோலை' என்பதும் தெளிவாகி விடுகிறது. பொன்னும் பொருளும் தேடி அலைந்து சுகவாச அரசியலை நடத்திடும்-போக்கை எங்ஙனம் அவர் சாடி வருகிறார் என்பது நாடறிந்த கொள்கையாகும் பொது நலத் தொண்டாற்றி மக்களின் இதயத்தில் இடம் பிடித்திடும் மாபெரும் பணியினையே அவர் வாழ்க்கைச் சிறப்பாகக் கொண்டு வலம் வந்தார். இத்தகு சிறப்பு பெற்றிட்ட செம்மலை நோக்கித்தான், அவர் முன் கரம் அசைத்து நடாத்திடும் இயக்கம் இருக்கும் திக்கை நோக்கித் தான், தேசீய முகாமுக்குப் போய்ச் சேர்ந்த நேற்றைய நம்மவர்கள் நீள் கரம் நீட்டி தூள் தூளாக்கிடும் நச்சு நினைப்புக் கொண்டனர்.

நண்பர்கள் சிலர் பகைவர்களாகக் காட்சிதர துவங்கிய அதேவேளையில்...ஏதோ ஒருமூலையில் நிலவிய இருள்தேய்ந்து ஒளி கிளம்பியது முஸ்லீம் லீகும். சுதந்திர கட்சியும் நேசக் கரம் நீட்டின. அவர்களது பாசக்குரல் கழகத்தின் தேர்தல் கீதத்தை லயம் தவறாமல் ஒலிக்க மிகுதியும் உதவியது-கழக வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டிய கடமையை வற்புறுத்தி பெரியவர் இராசகோபாலாச்சாரியார் அடிக்கடி நிகழ்த்திய சொற்பொழிவுகள் வரலாற்றில் சிறப்பிடம் பெறத்தக்கதாகும். நேசக்கரம் நீட்டிய முஸ்லீம் லீக் தோழர்களின் அரும்பணி மறக்க முடியாததொன்றாகும். ஜனாப் காயிதேமில்லத்தின் தேர்தல் முரசொலி பகைவர்தம் கூடாரத்தில் எதிரொலித்து நடு நடுங்க வைத்ததை நாடு மறந்திருக்க முடியாது. இத்தகைய நல்லன்பு கொண்டவர்களின் கள்ளங்கபட மற்ற ஓயா உழைப்பினால் 62-தேர்தலில் தெம்புடன் கழகம் வீர நடை போட்டு நுழைந்தது.

அகிலமே எதிர்பார்த்த 62 தேர்தல் முடிந்தபோது மிகப் பெரிய அதிர்ச்சியைத் தாங்க வேண்டியிருந்தது காங்கிரஸும்-கழகமும். கழகம் சட்டமன்றத்துக்கு 50 இடங்களையும், மாநிலங்களவைக்கு 8 இடங்களையும்கைப்பற்றிக்கொண்டதைக்

கண்ட காங்கிரஸின் இதயத்திலே பேரிடி தாக்கியது. அதே போது காஞ்சித் தொகுதியில் பேரறிஞர் அண்ணு வெற்றி பெற முடியாத வாய்ப்பு ஏற்பட்டுத் தீர்ந்ததானது கழக வீரர்களின் நெஞ்சத்தில் வேல் பாய்ச்சுவதாக அமைந்தது.

எத்தகைய ரத கஜ துரகபதாதிகளை ஏவி விட்டு, தேசீயத்தின் மூலவர்கள் எப்படிப்பட்ட வெறுக்கப்படும் பிரசாரம் புரிந்து காஞ்சித் தொகுதியில் நடேச முதலியாரின் வெற்றிக்குப் பாடுபட்டனரென்பதை நல்ல இதயம் படைத்தோர் அறியாததல்ல. ஆனுலும்......நீதியின் மணியோசைக்காக மக்கள் காத்திருந்தனர். கேட்டதோ தேசீயத்தாரின் வெற்றி ஓலம்! அந்த ஓலம் காலத்தின் நல்ல தீர்ப்பாக அமையாததையெண்ணித்தான் கழகக் காளையர் கொதிப்படைந்தனர். காஞ்சிக் கொதிப்பு தஞ்சையிலிருந்தும், திருச்சியிலிருந்தும் வீசியடித்த குளிர் தென்றலால் கொஞ்சங் கொஞ்சமாக மறைய முடிந்தது, தஞ்சை தரணியிலே கலைஞர் பெற்றிட்ட வெற்றி... போராட வந்த வேங்கையை வேரோடு சாய்த்த வீர காதையாகும். எதிர் நீச்சலிட்டு பணத் திமிங்கலத்தை ஒழித்துக் கட்டிய அசகாய சூரத்தனமாகும். அதன் விளைவை எண்ணி தேசீயத்தார்—காஞ்சியிலே வெற்றி முழக்க மிட்டுங் கூட தலை தாழ்த்தி நின்றனர்.

இதை விடத் தலை தாழ்ந்து நின்றனர், புதியதாக தேசீய முகாமின் நட்புப்பெற்ற நமது பழைய நண்பர்கள், தேர்தலின் முடிவு அவர்களைத் தான் அதிகம் கண்களைத் திறந்து விட்டது. கேசரி என்று மார்த்தட்டி தேசீயப் பூசாரிகளால் அறிவிக்கப் பட்ட அவர்கள் கேட்பாரற்ற நிலைக்கு வந்து தீர்ந்தனர் தேர்தலுக்கு பிறகு ஓரிடங்கூட அவர்களுக்கு கிடைக்காதது மட்டுமல்ல அவர்களால் ஆதரிக்கப்பட்டவர்களும் அரசியல் விதவையானதை வேடிக்கையான கண்ணோட்டத்தோடுதான் நாடு பார்த்தது, பூத்த புது கவிதைகளும், வீசிய சொல்லம்புகளும் அவர்களுக்குநிரந்தரமாக இடத்தைத் தந்து விடவில்லை இந்தப் புதிய உறவும் சொல்ல முடியாத வெட்கத்தைத் தரத்

துவங்கியது அதைவிட வேதனை தரத்தக்கதாக அமைந்தது அண்ணாவின் தேர்தல் வெற்றியின்மை.

ஆமாம்! அண்ணா சட்டமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப் படாததானது உண்மையிலே தேசியவட்டாரத்துக்கு இப்போது புதிய வேதனையாகத்தான் தெரிய வந்தது. அவரை மன்றத் திலே நுழையவிடா திருப்பதற்காக எத்தனை லீலா விநோதங் களைக் கடைப்பிடித்தோம் அந்தத் தேனருவி தமிழோசை அங் கே ஒலித்திடக் கூடாதென்பதற்காக எவ்வளவு பணிபல புரிந் தோம்; இப்போது அவரது தோல்வியால் புதியபுயலல்லவா கிளம் பியிருக்கிறது, என்று எண்ணிடவும், பேசிடவும் துவங்கினர் அவர்களது அச்சம் வீண் போகவில்லை. மாநில அரசின் எதிர்க் கட்சியாக, அமர்ந்த தென்னகத்தின் பேரியக்கம், அண்ணா அவர்களை மாநிலங்களின் அவைக்கு தேர்ந்தெடுத்து அனுப் பியது. இந்த நிகழ்ச்சியை நினைந்து நினைந்துதான்-- நடக்கக் கூடாதது நடந்து விட்டதே என்பதை எண்ணிக் குழம்பித் தான் தேசீய வட்டாரம் அஞ்சியது. கலக்கம் மிகக் கொண்டது கழகக் காளையர்களோ டில்லி மூலவர்களிடம் நேருக்கு நேராக பொன்னகரத்தின் கோரிக்கைகளை எடுத்தியம்பிடுவார், தேய்ந்தவர் தம் துயர் துடைக்க வழிவகை காண்பார் என்று மகிழ்ந்தனர். இந்த மகிழ்ச்சியை நினைத்துத்தான் தேசீய வட் டாரம் மிரட்சியடைந்து. 'அண்ணாவை டில்லிக்கு அனுப்பு வதற்காகத்தானு காஞ்சியிலே அத்தனை படாத பாடு பட்டோம் யாரை அனுமதிக்க கூடாதென்று அல்லல் பலபட்ட பிறகும் அவரை......டில்லியிலே பீடு நடை போட்டிடுவதை எங்ஙனம் சகிப்பதோ என்றுதான் தேசீயத்தின் பெரிய புள்ளிகள் நாப் பறையடித்துக் கொண்டன. நிலவின் ஒளி தேவையில்லை யென்று சாளரத்தின் கதவுகளை அடைத்துக் கொண்டனர். ஆனால் அந்த நிலவொளி உப்பரிகையில்—தனது ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சிக் கொண்டிருந்தது. சாளரத்தின் கதவுகளை அடைத்து திருப்தியடைய முயன்றனர் தேசீயத்தார் ஆனால் மேலே...உப்பரிகையிலே வீசியடித்த கோலநில

வொளியை...கண்களை மூடித்தான் அவர்களால் தடுத்துக் கொள்ள முடிந்தது.

மாநிலங்களவையிலே அண்ணு நிகழ்த்திய துவக்கப் பேச்சு ஆதிக்க புரியினருக்குப்பேரிடியாக அமைந்தது. ஆற்றலும் அறிவும் நிறைந்த அந்தப்பேச்சினை மாற்றுக்கட்சி அன்பர்களும் தம்மை மறந்து பாராட்டிடும் போக்குப்பிறந்தது. வாலிபப்பட்டாளங்களின் வசீகரிக்கும் தலைவராக தென்னகம் ஏன் இவரைத் தேர்ந்தெடுத்திருக்கிறதென்ற ரகசியத்தை வடபுலம் அப்போதுதான் உணர்ந்தது. தென்றலின் குளுமையும், எரிமலையின் குமறலும் அந்த ஜீவமொழியோட்டத்திலே அடங்கிக்கிடப்பதாக எதிர்தரப்பினர் சகலரும் ஏக மனதாக ஒப்பினர். தென்னகத்தின் ஏக பிரதிநிதியின் முழக்கத்தை அப்போதுதான் சபை முதல முதலாகக்கண்டது. உண்மையின் வடிவம் எத்தகையதாக இருக்குமென்பதையும் அப்போதுதான் கண்டுகொண்டனர்.

அண்ணுவின் துவக்கப்பேச்சு டில்லி பீடத்தை அதிகம் சிந்திக்க வைத்து விட்டது. சுட்டுவிரல் காட்டினுல் கட்டுண்டு ஆடிடும் இத்தென்னகத் தலைவனின் முழக்கம் முழுவடிவம பெற்ருல்......! அந்த விளைவை நினைத்தபோது ஆதிபத்தியத்தின் அஸ்திவாரமே ஆட்டங்கண்டது. எனவே...திட்டத்தாலோ புதிய சட்டத்தாலோ புதிய புயலைத்தடுக்க நினைவு கொண்டனர். அரசியல் விற்பன்னர்கள் ஆராய்ச்சிசெய்து முடித்து...தேசீய ஒற்றுமைக்கு உருவகம் கொடுக்கும் முறையிலே...பிரிவினை பற்றிய எண்ணங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் தடைபோட்டிடும் தீர்மானத்திற்கு வந்தனர். மந்திரி பீடத்திலிருந்த மகானுபாவர்கள் இதை மறக்க முடியாத தத்துவமாகவே நெஞ்சில்தாங்கி, செல்லுமிடங்களிலெல்லாம் மணி முத்துக்களை உதிர்த்தனர். தேசீய வட்டாரத்திலுள்ள கோடீஸ்வரரிலிருந்து கொடிதூக்கிடுபவர்வரை 'பிரிவினை தடைச்சட்டம் வந்தாயிற்று. அய்யோ கழகமே உன் கதி அதோகதிதானு' என்ற முறையிலே புலம்பல்

கிளப்பலாயிற்று, ஒழித்துக் கட்டிவிடுவோமென்ற ஓலம் ஒரு பக்கம். இதுகளை முக்காடிட்டு மூலையிலே ஒதுங்கிடச்செய் கிரேம் என்ற கித்தாப்பு மறு பக்கம். ஏசல்! வேதனை!...வாட்டிடும் நிலையிலேயே கழகத்தைக் கட்டிக் காத்திடவேண்டிய கவலையும் பிறந்தது பெருந்தகையாளருக்கு.

யாருமே சிறிதும் எதிர்பார்த்திடாத நேரத்திலே .. அந்தச் சேதி மலர்ந்தது. எக்காளமிட்ட ஆதிக்க பீடத்தினர் இப்போது சிறிது தடுமாறினார். 'ஒழித்திக்கட்டிவிடுவோமென்ற மமதைகொண்டிருந்தோமே இப்போது இந்த அண்ணாதுரை இப்படி ஒரு திட்டத்தை திடுமென அறிவித்து விட்டரோ! இதன் போக்குத்தான் என்ன......'தேசியத்தார் குழம்பினர்.

'பிரிவினையைக் கைவிட்டுவிட்டோம்' என்று அண்ணா அறிவித்தபோது, கழகத்தை சாய்த்துத்தள்ளி அந்த இடிபட்ட மண்மீது நின்றுகொண்டு கொக்கரிக்கலாமெனக் காத்திருந்த கூட்டம் மூக்கறுபட்டு நின்றது.

'பசுமை இலைபோர்த்தி பள்ளத்தை மறைத்து வைத்து, வலையுங்கையுமாக நின்றுகொண்டிருந்ததோமே......இந்தப் புள்ளிமான் தப்பிவிட்டதே! குறிபார்த்து முடிந்து கூரம்பு பாய்ச்சும் நேரத்தில் அந்த அழகுப்புரு சின்னச்சிறகடித்துப்பறந்துவிட்டதே, பூத்துச்சிரித்த மலரை இரும்பு கரங்களால் கசக்க நினைத்தபோது...நினைவு நடைமுறைக்கு வராமலே போய்விட்டதே' என்று சஞ்சலமடைந்தனர். இந்த சஞ்சலம் தந்த துயரால் புதிய ஏளனக்குரல் கிளப்பினர். 'என்னதான் உங்களது இலட்சியம்? அன்று ஒன்றைக் கூறினீர்கள்; அதைக்காத்திடுவதற்காக தலையை விலை கேட்டாலும் தருவதாகக் கூறினீர்கள்; இன்று மற்றொன்றைக் கூறுகிறீர்களே! எதை நம்புவது? எப்படி உங்களைப்பின் தொடருவது? என்பவைபோன்ற கேலி மொழிகளால் விபரம் புரியாதவர்களிடையே குழப்பம் ஏற்படுத்த முயற்சித்தனர்,

கழகக்கப்பல் தடையெனும் பீரங்கியினால் தாக்கப்பட்டு கடலிலே மூழ்கடிக்கப்பட்டு விடக்கூடாதென்பதற்காகத் தான் அண்ணா அவர்களின் ஆழ்ந்த சிந்தனைத் தெளிவி லிருந்து பிறந்த முடிவை கழகக்காளையர் மனம் ஒப்பி ஏற்றுக் கொண்டன ரென்ற விபரம் புரியாதகாரணத்தாலே தான் நச்சு நினைவு கொண்டோர் சில பல காலம் பாசறைக்குள்ளே குழப்பம் மூட்டிவிட நினைத்து இறுதியாகத் தோல்வியை அணைத்துக்கொண்டனர்.

அண்ணாவின் அரசியல் தெளிவு படைத்த முடிவினைக் கண்டு டில்லி பீடமே அசந்துபோகத்தான் செய்தது. 'இந்த முடிவு நிலைக்குமானால் நாங்கள் மனமாரப்பாராட்டுகிறோம்' என்ற சபலத்துடனேயே வாய்திறந்தும் திறவாமலும் வாழ்த்தத்துவங்கினர்.

அழகுடலுக்கு அணிமணி மேலும் அழகைச்சேர்க்கிறது. அழகுடலை சீர்கேடடைய விட்டுவிட்டு அணிமணி பற்றி கவலை கொண்டிருந்தால், பார்ப்பவரின் பரிதாபத்துக் குத்தான் ஆளாகித்தீரவேண்டும் அணிமணியை மாற்றிக் கொள்ள இயலும். அழகுடலை மாற்றி மற்ற தாக்கிக்கொள்ள முடியுமா? அழகுடல் நிலைக்க மேலும் மேலும் பொலி வேற்றிட... அணி மணி மட்டும் மாற்றப்பட்டது அழகுடலும்... அணி மணியுமே அழிந்து படும் அரசினர் திட்டத்தால் என வெந்தும் வேகாததுமான அரசியல் அவியலைத் தெரிந்தோர் கருதினர். அந்த முயற்சி அண்ணாவின் அறிவுத்திறத்தால் வெல்லப்பட்டது எது முக்கியம்? உடலா!...உடமையா! என்ற போராட்டத்திலே உடல் காப்பாற்றப்பட்டுவிட்டது. கண்களை விற்று சித்திரம் வாங்காத கதை நடந்துவிட்டது. எனவேதான் வாய்பொத்தி...கண்கள் பொத்தி...காதுகள் பொத்தி எங்கோ பார்த்த சிலைகளைப்போல அசைவற்று தேசீயத்தார் அமர்ந்திருந்தனர்.

பிரிவினைக்கொள்கைகளில் மாற்றங்கண்ட பிறகு... அரசு பீடத்துக்கும், நாட்டுக்கும் சோதனைபோல போர்ச்சூழ் நிலை உருவெடுத்தது. சீன ஆக்ரமிப்பின் போதும். பாகிஸ்தான் தாக்குதலின் போதும் கழகம் தனது நடவடிக்கைகளை யெல்லாம் ஒத்திப்போட்டுவிட்டு அரசு பீடத்துக்கு தனது முழு பலத்தையும் அண்ணா அளித்ததானது பகை கக்கிவந்த மாற்றுக்கட்சியினரும் பாராட்டிடும் சிறப்பைப்பெற்றது. கழகக் காளையர் ஆக்ரமிப்பு எதிர்ப்பு பிரசாரத்தில் முன் னணியில் நின்று பணியாற்றியதோடு ஆங்காங்கே யுத்த நிதிக்கான நிகழ்ச்சிகளை நடத்தியதை யாரும் இலகுவிலே மறந்துவிடமுடியாததாகும் குறிப்பாக புரட்சி நடிகரும் புதுமைக் காவலருமான திரு எம் ஜி. ராமச்சந்திரன் அவர்கள் பிரதமரின் வானொலிப்பேச்சு முடிந்த ஒரு சில மணிநேரத்திற் குள்ளேயே பெருந்தொகையாக போர் நிதியளிக்க முன்வந் ததை தேசீயத்தார் தங்களது பாரம்பரியம் உள்ளவரை மறந் திடக்கூடாத நிகழ்ச்சியாகும்.

'நமக்குள் ஆயிரம் இருப்பினும் அந்நியர் புகல்வது நீதியோ?' என்ற தத்துவத்தை நெஞ்சிலே மலரவைத்துக் கொண்டதால்தான் அண்ணா அகில இந்திய தேசீயத்தோடு கைகுலுக்கி அந்நியர் தம் பாசறைநோக்கி தோள் தட்டி நின்றார்.

இதைக் கண்டுவந்த தேசீயமுகாமில் குடியேறிவிட்ட நமது பழைய நண்பர்கள் பிரிவினைக்கொள்கையை மாற்றிக் கொண்டதையும், போர்ச் சூழ்நிலையில் அரசு கட்டிலுக்கு ஆதரவு தந்ததையும் வைத்துக்கொண்டு 'கழகம் என்று உங்க ளுக்கு ஒன்று தனியாக ஏன்?! அந்தக்கடையை மூடிவிட்டு— அவர்கள் முன்பு விரித்து மூடிய கடைபோல—இந்த முகா முக்கே வந்துவிடுங்களேன்!' என்ற முறையிலே பேச்சுக் கச்சேரி துவக்கினர். இப்படிப்பேசியவர்கள் நமது கொள் கையில் மாற்றம் ஏற்படுமென்பதை பல நாளாகவே எதிர் பார்த்தது போல பேசியதுதான் ஆச்சரியமாக இருந்தது.

கொள்கை பற்றிய தகராறைக் கூறுமல் நபர்கள் பற்றிய குண தோசத்தை ஆருடம் கணித்துச் சொல்லிப்போனவர்கள் தான் இப்போது தெளிந்த அரசியல் ஞானிபோலப் பேசத் துவங்கினர்.

கொள்கைளை எதற்காக கழகம் மாற்றிக்கொண்டது...... கழகம் இயங்குவதற்கா தேசீயத்தாரோடு அகில தேசீயத்துக்கு ஏன் ஒத்துழைப்பு நல்கியது......போர்ச் சூழ்நிலைமையில் தனது பங்கைச்செலுத்துவதற்காக'......இந்த எளிய உண்மையைப் புரிந்துகொள்ளாமல் 'உங்களுக்கேன் இன்னும் கட்சி...தனி அரசியல் எதற்கு...தேர்தல் ஈடுபாடு எதற்கு... என்று பேசுவதானது அரசியலிலே சிறு பிள்ளைத்தனத்தைத்தான் நினைவு படுத்தும். அரசியல் மாமேதைகள் எதை எந்தநேரத்தில் காலத்தில் செய்யவேண்டுமோ அப்போது தான் செய்வர். கரும்பை அரும்பாகக் காணும்போதே ஆலைக்குச்சென்று விலைபேச மாட்டார்கள். பருவத்தே செய்யப்படும் முயற்சிகள் தான் பக்குவமானதாக அமையும்.

அதேபோன்றுதான் மாபெரும் வெற்றிபெற்று நாவலரின் தலைமையில் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக அமர்ந்தபிறகும் திட்டமிடப்பட்ட போராட்டங்கள் பக்குவப்பட்ட முறையிலேயே நடத்தப்பட்டன. விலைவாசிப்போராட்டமும், சட்டப்பிரதிகளை எதிர்த்திட்ட வீரமிகு நிகழ்ச்சியிலும் ஆற்ற வேண்டிய பணி சிறப்புடன் செயல்படுத்தப்பட்டது. அந்த அறப்போர்களிங்களில் அண்ணு ஆற்றிய அரும் பெரும் பணியும் அதன் பயனுக அரசினரின் கடுங்கோபத்துக்கு ஆளாகி கொடுந்தண்டனையை ஏற்றுக்கொண்ட சம்பவங்களும் சரித்திர ஆசிரியர்களின் கவனத்தைவிட்டு மறக்க முடியாததாகும்.

கவிஞன் ஷெல்லி தனது கவிதை யொன்றிலே..."அமைதியும் உறுதியுமாக நில்லுங்கள். அடர்ந்த காடுகளைப்போல் வாய்பேசாமல் கைகளைக் கட்டிக்கொண்டு நில்லுங்கள். அமைதியும் உறுதியுந்தான் தோல்வியுருத போரின் ஆயு

தங்கள். அதற்குப்பின்னும்-கொடுங்கோலர்களுக்கு தைரியம் இருக்குமானல் தங்கள் குதிரைகளிலேறி உங்களிடையே நுழையட்டும்; அடிக்கட்டும்; அறையட்டும்; வெட்டி, குத்தி அங்கவீனப்படுத்தி வீழ்த்தட்டும்; அவர்கள் விரும்பியதை விரும்பியவாறு செய்யட்டும். கைகளை மடக்கிக் கட்டிக் கொண்டு நிலை நிறுத்திய பார்வையுடன் அச்சமின்றி, ஆச் சரியமின்றி அவர்களைப் பாருங்கள். அவர்கள் ஆத்திரம் தீரும் வரை வீழ்த்துவதைப்பாருங்கள். என்று குறிப்பிட்டதைப்போல கழகத்தின் அறப்போர்க்களங்கள் எதையும் தாங்கும் கோட்டமாக விளங்கின.

நேரு பெருமகனாரின் வாக்குறுதியை திருவாளர் சாஸ்திரி யின் அரசு மீறி வருகிறதென்பதை உணர்ந்த தென்னகத்தி லிருந்த சகல பகுதி மக்களும் போர்க்குரல் கொடுத்த நிகழ்ச்சி யும்' மொழி காக்கும்பொருட்டு திருச்சியிலும் சென்னையிலும் இன்னுடலினை மீதுபெட்ரோலை ஊற்றி தீ வைத்துக்கொண்ட தியாக சம்பவமும், அதையொட்டி நடந்த மாணவரியக்க மறியலையும், மறியலின்போது உணர்ச்சி மேலிட்டு நடந்த துயர சம்பவங்களையும் நாடு என்றென்றும் மறந்துவிட முடியாத தாகும்.

உணர்ச்சி மேலீட்டால் நடந்த அந்த சம்பவங்களை நினைக் கும் போது—காந்தியடிகள் கூறிய பொன்மொழிகள் கருத்தைக் கவருகின்றன. லூயிபிஷர் காந்தியைப் பற்றிய தனது நூலிலே.........

..." சட்ட மறுப்பு இயக்கத்தைப் பர்தோலியில் மாத்திரம் நடத்தினர். ஏனென்றால், நாடு முழுவதும் சட்டமறுப்பு இயக்கம் சமாதான முறையில் நடக்குமா என்பது அவருக்கே சந்தேகமாயிருந்தது. அன்றியும் இந்தியருடைய கட்டுப் பாட்டைக் காட்டி இந்தியர்கள் விவேகமாகப் பயன்படுத்து வார்கள் என்று பிரிட்டிஷார் நினைத்திருக்கும் அளவுக்கும் மேலாக நிறைந்த அளவில் சுதந்திரம் கொடுக்குமாறு அவர் களைத் தூண்ட விரும்பினர்.

பர்தோலி இயக்கம் தொடங்கியவுடன் பர்தோலிக்கு
மைல் தூரத்தில் ஐக்கிய மாகாணத்தில் உள்ள
ரி சௌரா என்ற சிறு ஊரில் மூன்று
களுக்கு முன் நடந்த கொடுமையைப் பற்றி காந்திக்கு
வரி எட்டாம் தேதி செய்தி வந்தது. இதைப் பற்றி
இந்தியா'வில் காந்தி பின்வருமாறு கூறியிருக்கிறார்.
காரின் அனுமதியுடன் ஊர்வலம் ஒன்று நடந்தது. அந்த
வலத்தில் கடைசியில் வந்தவர்களைப் போலீசார் திட்டினார்
அவர்களைத் தடுக்கவும் செய்தார்கள். ஆகையால் அவர்
ஊர்வலத்தின் முன்னால் சென்றவர்களை உதவிக்கு அழைத்
. ஊர்வலத்தின் முன் சென்றவர்கள் உதவி செய்யத்
பினர். உடனே போலீசார் சுட ஆரம்பித்தனர். அவர்
டமிருந்த சிறிது வெடிமருந்தும் காலியானதும், அவர்கள்
லீஸ் தாணுவுக்குள் நுழைந்தனர். கூட்டத்தினர் தாணு
த் தீ வைத்தனர். அங்கிருந்த போலீஸார் உயிர் தப்புவ
க வெளியே வந்தனர்; அப்படி அவர்கள் வரும்போது
க்காரர்கள் அவர்களைக் கண்ட துண்டமாக வெட்டினர்.
ரவதை செய்யப்பட்ட உடல்களைக் கொழுந்துவிட்டு
ம் நெருப்பில் போட்டனர்,

இந்த 22 போலீஸ்காரர்கள் மிருகத்தனமாகச் செய்யப்
கொலை ஒரு கெட்ட சகுனமாக இருந்தது என்று காந்தி
னார். 'ஒரு வேளை கடவுள் அருளால் சாத்வீகச் சட்ட
பு வெற்றி அடைந்து, அரசாங்கம் அதிகாரத்தை வெற்றி
றவர்களிடம் விட்டிருந்தால் கட்டுபாடு இல்லாத மக்கள்
த்தை அப்பொழுது யாரால் அடக்க முடியும்? அவர்
க்குப் பிறர் ஆத்திரம் மூட்டும்போதெல்லாம் ஈவு இரக்க
கொடுமைகளை அவர்கள் ஓயாமல் செய்துகொண்டே
பார்பளே?' என்று காந்தி கேட்டார். அவரால் அந்தக்
டத்தை அடக்க முடியும் என்று அவருக்கு நம்பிக்கை
ல. எனவே, பர்தோலி சத்தியாக்கிரகத்தை நிறுத்திவிட்

டார். இந்தியாவின் எந்தப் பாகத்திலும் சர்க்காரின் அதி காரத்தை எதிர்க்கக்கூடாது என்று தடை விதித்தார் ''

பர்தோலி இயக்கம் பற்றி காந்தியடிகள் கூறிய கருத்து எத்தகைய சக்தி வாய்ந்தவை என்பதை இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடந்த போது புரிந்துகொள்ள முடிந்தது. ஆத்திரமும் கொதிப்புமடைந்துபோய்க் கிடந்த பொது மக்களுக்கு அண்ணு அறிக்கைகளின் வாயிலாக அமைதிப்படுத்தினர். தென்னகத்திலே நடந்த துயரம் தோய்ந்த சம்பவங்களுக்காக வேதனை மிகக் கொண்டார்.

சௌரி சௌரா நிகழ்ச்சியைப் பற்றி காந்தியடிகள் குறிப் பிட்டபோது வேதனையுடன்--''நம்முடைய எதிரிகள் நாம் அவ மானப்பட்டதில் அல்லது அதைத் தோல்வி என்று கருதினல் அதில் மகிழ்ச்சியடையட்டும். நமது வாக்குறுதிப்படி நடக் காமல் விரோதமாக நாம் பாவம் செய்வதைவிடக் கோழைகள், பலவீனமுள்ளவர்கள் என்று மற்றவர்களால் குற்றஞ்சாட்டப் படுவது நல்லது. நமக்குநாமே பொய்யர்களாக இருப்பதைவிட லட்சந் தடவை உலகிற்குப் பொய்யராகத்தோன்றுவது மேல்' என்று கூறினர்கள். இதே வேதனை கொண்ட நிலையிலே தான் தென்னகத்தின் பெருந்தலைவர் காட்சி தந்தார். அப்போது அவர் ஆற்றிய அற உரைகளும், தீட்டிய எழுச்சிமிகு கருத் துரைகளும் நாட்டை அமைதிப்படுத்த பெரிதும் உதவின. இது போன்ற கருத்துக்களை அவரது இதயத்திலே தேக்கியிருந்த காரணத்தால்தான் தென்னகத்தின் காந்தியென்று மக்கள் அழைத்தனர் போலும். ' யங் இந்தியா ! என்ற ஏட்டில் காந்தி யடிகள் ' நான் கைதுசெய்யப்பட்டால் ' என்ற தலைப்பில் எழு திய போது, ' அரசாங்கம் மக்களைப் பலாத்கார முறையில் அடக்கி, இரத்த ஆறுகள் ஓடினலும் நான் அஞ்சமாட்டேன். ஆனல் மக்கள் என் பெயரைச் சொல்லியோ அல்லது எனக் காகவோ அரசாங்கத்தை நிந்தித்தார்களானல் நான் மிகவும் வருந்துவேன். என்னைக் கைது செய்வதனல் மக்கள் மன அமைதியை இழக்க நேர்ந்தால் அது என்னை அவமானப்படுத்

துவதாகும் ” என்று குறிப்பிட்டார்கள். இந்த நெஞ்சைத் தொடும் வரிகள் அண்ணாவின் இதய பீடத்தில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த காரணத்தால்தான் அராஜகத்தை வெறுத்தார். கட்டுப்பாட்டை விரும்பி விரும்பி வேண்டினார். மன அமைதி இழக்கும் மக்களின் போக்கும் அதன் விளைவும் அவருக்குப் புரிந்ததால்தான் கழகத்வரின் ஆர்வத்துக்கு வரம்பு கட்டியிருந்தார். வரம்பு மீறிய வன்செயல் நாட்டுப் போக்கிலே காட்டு நிலை பரவிடத்தான் வழிவகுக்கும் என்பதைத் தெளிந்திருந்தார். எனவேத்தான் ஓட்டு முறையா வேட்டு முறையா என்ற பிரச்சினைக்கு விடையளித்தபோதும்... அண்ணா அவர்கள் காந்தியடிகள் பற்றி லூயிபிஷர் சொல்லிய கருத்தைத்தான் கொண்டிருந்தார்.

“ காந்தி ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் இந்தியா முழுவதும் கலகம் ஏற்பட்டிருக்கும் பிரிட்டிஸாரை நாட்டைவிட்டே விரட்டிவிட வேண்டுமென்று சொல்லிவந்த தீவிரவாதிகள் இருந்தார்கள் யுத்தத்தினால் ஏற்பட்ட குழப்பம் உலகம் முழுவதும் இன்னும் இருந்துகொண்டே வந்தது. உலதத்தின் பல பாகங்களில் இங்கிலாந்துக்கு நெருக்கடிகள் ஏற்பட்டன. ஆனால், தேச மக்களின் ரத்தத்தைச் சிந்தி, காந்தி சுதந்திரம் பெறத் தயாராயில்லை. பலாத்காரத்தின் மீது உருவாகிய இந்திய சுதந்திரம் பல ஆண்டுகள் பலாத்காரத்தையே மேற்கொள்ளும். அப்பொழுது இந்தியா சுதந்திரம் அடைவது என்பதே சந்தேகத்திற்குரியதாக இருந்தது. எனினும், நல்ல லட்சியத்தை அடைய தீய முறைகளைக் கையாள அவர் விரும்பவில்லை. தீய வழியில் பெற்ற சுதந்திரம் தீயாகவே முடியும் என்று கருதினார் ”

லூயி பிஷர் காந்தியடிகளின் உள்ளத்தைத் தெளிவாக்கியதைப் போலத்தான் இங்கே அண்ணாவின் அரசியல் பாதை அமைந்திருந்ததென்பது நாட்டின் நல்லறிவாளர்கள் கண்டறிந்த உண்மையாகும். வாழும் காந்தியை இன்றைய தென்னக அரசியலிலே காணுவதாகப் பேரறிஞர்கள் கருத்தறிவிக்

கின்றனர். அரசியலிலே ஜனநாயகம் முடமாக்கப்பட்டு விடாமல், எதிர்வரிசையிலிருப்போரும் மதிக்கும் மனவளத்துடன் கழகத்தை நடாத்திச் செல்லும் ஆற்றல் மிகு செயலை அகிலமும் பாராட்டிடத் தவறியதில்லை.

முதன் முதலாக அண்ணா கடல் கடந்த நாடாம் மலாசியா சென்றபோது அங்குள்ளோர் மொழி இன வேறுபாடுகளின்றி மகத்தான வரவேற்பினை அளித்ததை அண்ணா அவர்களின் அரசியல் வாழ்க்கை நிகழ்ச்சியில் குறிப்பிடத்தகுந்த சம்பவமாகக் கருத வேண்டும். எதிர்காலத்தில் மாநில ஆட்சியைக் கழகம் கைப்பற்றிட வேண்டுமென்ற ஆவலை இதயமெங்கும் தேக்கி கடல் கடந்த நாட்டிலே வதியும் கன்னித்தமிழர்கள் வாழ்த்தி வழி அனுப்பியது நெஞ்சம் நீங்காத நிகழ்ச்சியாகும். அண்ணா அவர்களின் திருக்கரம் தொட்டு, பீடுநடை கண்டு தேனருவி மொழிகேட்டு, பூச்சிரிப்புக் காட்டிய போது நெஞ்சம் மலர்ந்தது கடல் நீரிலே கண்ணீரைக் கொட்டிவிட்டுச் சென்ற தமிழ் நெஞ்சம் மட்டுமல்ல... சிங்கைப் பிரதமர் தோழர் லீகுவானும் அளவிட முடியாத உணர்ச்சிக்கு ஆளாகி அண்ணா தம் அரும்பெரும் உரையினைக் கேட்டு பேரானந்தமடைந்தார். மலாசிய வட்டாரத்திலே அரசியல் மேதையாக மதிக்கப்பட்ட தோழர் லீகுவான். தென்னக அரசியல் மேதையாம் அண்ணாவுடன் நடாத்திய பேச்சு வார்த்தைகளின் மூலமாக தென்னக மக்களின் எழுச்சி உள்ளத்தைப் புரிந்துகொண்டதோடு, சில அரசியல் அவியல்காரர்கள் கக்கியிருந்த சொத்தை வாதத்துக்கும் நல்ல விளக்கம் தெரிந்து-தெளிந்தார்,

அண்ணா — லீகுவான் சந்திப்புக்குப் பிறகு நடந்த சிங்கப்பூர் பிரிவினை அண்ணா—லீகுவான் சந்திப்புக்கு தவறானவடிவத்தைக் கொடுக்க முயன்றது, சில நச்சு நினைப்பினரின் விமர்சனம். இந்த நிகழ்ச்சி சாதாரண ஒரு சந்திப்பினால் மட்டும் ஏற்பட்டதல்ல. மலேசிய அரசியல் அப்படிப் பட்ட நிலையிலே கருவாகி முடிவாக இப்படிப் பட்ட நிலைக்கு உருவாகியது.

லீகுவானுக்கும் அண்ணாவுக்கும் நடந்த ரகசிய உரையாடல் பெரும்பகுதியினரை நச்சுநினைப்பினரின் விமர்சனத்திற்கு திருப்பினாலும் உண்மையின் வடிவம் புரிய நாளதிகமாகவில்லை. இதையே ஒரு பிரச்சினையாக வைத்து அண்ணா தென்னகம் திரும்பியதும் தேசிய ஏடுகள் சாடின. இந்த விதண்டா வாதத்துக்கெல்லாம் தனது புன்னகையால் பதிலளித்து விட்டு கருமமே கண்ணாயினார் அண்ணா

66—பிப்ரவரி திங்களில அண்ணா மாநிலங்களவையில் ஆற்றியசொற்பெருக்கு மாநிலங்களவையின் சரித்திரத்திலேயே பிரசித்தி பெற்றதாகும்.

...''துணைத்தலைவர் அவர்களே! நாம் சுதந்திர அரசாகத் துவங்கிய போது நமது கணக்கில் ரூபாய் 1800 கோடி அளவுக்கு இருப்பு இருந்தது. பதினெட்டு ஆண்டு சுயராஜ்ஜியத்துக்குப் பிறகு இன்றைய ஆளவந்தார்கள் சாதித்திருப்பது—வெளிநாடுகளுக்கு நாம் - தரவேண்டிய கடன் ரூபாய் 3396 கோடி!

செங்கோட்டையில் சுதந்திரக் கொடியைப் பறக்கவிட்ட போது ரூபாய் 1800 கோடி இருப்பு இருந்தது! வெளிநாட்டில் அப்போது பிரெட்டன்வுட்ஸ் மாநாட்டுக்குச் சென்ற நமது பிரதிநிதிகளுக்கு தொகையை என்ன செய்வது? எப்படி முதலீடாக்குவது? எப்படிச் சரியான முறையில் இந்தத் தொகையை பயன் படுத்துவது? என்பதாகும். ஆனால் இப்போதைய சர்க்கார் அந்தப்பிரச்சனையைத் தீர்த்து விட்டார்கள்!

நமக்கு வெளியிடத்தில் (இருப்பு) தொகை இல்லை-ஆகவே பிரச்சினையே இல்லை! ரூ 3396 கோடி கடன் இருக்கிறது;அதற்காக அவர்கள்(கடன் கொடுத்தவர்கள்)கவலைப்பட்டுக்கொள்ள வேண்டும்—நமக்கு இல்லை! இந்தியாவிற்குக் கடன் கொடுத்த

வர்களுக்குத் துணிச்சல் வரத் தேவையில்லை—கடன் வாங்கிய வருக்குத்தான் துணிச்சல் வந்திருக்கிறது. கொடுத்த கடனைப் பெற்றுக் கொள்ள, வழி கண்டு பிடித்துக் கொள்ள வேண்டிய கடமை (கடன்) கொடுத்தவர்களுக்கு என்றாகி விட்டது!

பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு காட்டப்பட்டுள்ள (கணக்கு) ஓவியம் எது என்றால். 'வெளி நாடுகளில் இருந்து வந்த (இருப்பு) தொகை அவ்வளவையும் தீர்த்துக் கட்டி யாகி விட்டது, உலகுக்கு நாம் ரூ 3396 கோடி கடன் திருப்பித் தர வேண்டும் என்பதுதான்! துணைத்தலைவர் அவர்களே! இந்த ரூபாயின் மதிப்பும் வீழ்ந்து விட்டது—எந்த அளவுக்கு? பொருளாதார நிபுணர்கள் தமக்குள் விவாதித்து கொண்டிருக் கிறார்கள், 'ரூபாயின் மதிப்பு இப்போது எவ்வளவு-17 பைசாவா? 29 பைசாவா? அல்லது 20 பைசாவா என்று.

ஒருவேளை சர்க்கார் முன் வந்து தைரியமாகச் சொல்லக் கூடும் இல்லை—இல்லை ரூபாயின் மதிப்பு 22-காசு என்று! எப்படியோ ஒன்று ரூபாயின் மதிப்பு வீழ்ந்து விட்டிருக் கிறது...!'

66—பிப்ரவரி திங்களிலே அண்ணா ஆணித்தரமாக எடுத்துச் சொன்னார் ரூபாயின் மதிப்பு வீழ்ந்துவிட்டிருக்கிற தென்று; அவர் மாநிலங்களவையில் எச்சரித்த மூன்றே மாதத் தில் இந்திய அரசு திடுமென நாணய மதிப்பைக் குறைத்துக் கொண்டது நாடறிந்த நிகழ்ச்சியாகும்.

இந்திய அரசு தரவேண்டிய கடன் தொகையைப்பற்றியும் நாணய மதிப்பு குறைந்து வருவதையும் குறிப்பிட்டு மாநிலங் களவையில் அண்ணா உரையாற்றியதை நேர்மையுள்ளங் கொண்ட எதிர் வரிசையினரும் பாராட்டத்தான் செய்தனர். மாநிலங்களவையின் அதே பேச்சில் கழகத்தின் நல்லெண்

ணத்தையும், தேசீயத்தாரின் பொம்மலாட்டத்தையும் வெட்ட வெளிச்சமாக்கி விடுவது போல,

..."துணைத் தலைவர் அவர்களே ! கடந்த ஆறு ஆண்டுகளாகச் சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்தை நாங்கள் நடத்திச் செல்கிறோம்; ஆயினும் நாங்கள், அரசியல்பூசல்களைக் கிளப்பி விடத் தந்த அரசியல் அற்பத்தனத்தை மேற்கொண்டிடவில்லை.

தி. மு. கழகம் சென்னை மாநகராட்சியில் ஆட்சி செய்து வரும் இந்த நாட்களிலே தான் அகில இந்திய காங்கிரஸுத் தலைவர் காமராசருக்குச் சிலை அமைத்தோம்; பல ஆண்டுகளுக்கு முன்பு மற்றோர் அவையில் (மக்கள் சபையில்) பகழிடம் பெற்று வீற்றிருந்த காலஞ்சென்ற சத்திய மூர்த்தி அவர்களுக்குச் சிலை அமைத்தோம் ; இந்தியாவிலேயே இதுதான் முதலாவது ' என்று—எண்ணுகிறேன்—மறைந்த பெரியவர் லால் பகதூர் சாஸ்திரிக்குச் சிலை அமைக்க சென்னை மாநகராட்சித் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது இதனை அரசியல் அற்பத்தனம் என்று கருதுகிறீர்களா ? இல்லை ! ஆனல், ஆளுங்கட்சி என்ன செய்து கொண்டிருக்கிறது ? தமிழகத்தின் உள்ளே நெடுந்தொலைவிலுள்ள ஒரு நகரத்தில் ஒரு பேருந்து நிலையம் (பஸ்ஸ்டாண்ட்) திறக்கப் படுகிறது ; அதற்கு தி. மு. க தலைவர் ஒருவரின் பெயரிடப் படுகிறது —துதிரஷ்டவசமாக என் பெயர் —உடனே தமிழகக்காங்கிரஸுகொதித்தெழுகிறது. தடை உத்தரவுகள் பிறப்பிக்கப் படுகின்றன; பெயர்பலகை அப்புறப் படுத்தப் படுகிறது. இரசீதுப் புத்தகங்கள்--அச்சிடப் பட்டவை--திரும்பப் பெறப்படுகின்றன. வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் குடியரசுத் தலைவரோ ஒத்துழைப்பு உணர்ச்சி வழங்கும்படி எங்களைக் கேட்டுக் கொள்கிறார்..."

......என்று ஆதாரத்துடன் எடுத்துச்சொன்னார். நாம் ஆற்றிடும் சாதனையும் அவர்கள் புரிந்திடும் வேதனையும் எத்தகையதென்பதை தெளியாதநெஞ்சங்களும் தெளிவடையும் முறையிலே தெரிவித்தார்.

இப்போதுதான் தேசீயத்தார் அண்ணாவை காஞ்சியிலே தோற்கடிக்க ஏற்றுக்கொண்ட துயரையும் அதன்பயனாக டில்லியிலே ஆணவம் குட்டப்படும் காட்சியையும் ஒரு சேர அனுபவிக்கின்றனர். 'இந்த மனிதர் சட்டசபையோடு நின்றிருப்பார்; இவரை அரும்பெரும் செயலாற்றி தோற்கடிக்கப் போய் டில்லிவரை போய் நமது நாடி நரம்புகளையெல்லாம் நடுநடுங்கவைக்கிறாரே' என்று தேசீய வட்டாரம் திகைப்புடன் அனுபவித்துக்கூறிடும் நிலைமை பூரணத்துவமாக இப்போதுதான் நிலவியுள்ளது. ஜனநாயகத்தை சவமாக தங்கத்தொட்டிலிற் போட்டு ஆட்டுவிப்பதை எந்த நேர்மையான இதயம் தான் ஏற்றுக்கொள்ளும்? பொலிவும் வலிவும் மிகுந்த சமுதாயத்தைக்கொண்ட ராஜபாட்டை மிகுந்த, ஜீவ பூமியைக் காணத்துடிக்கும் அண்ணா போன்ற அரசியல் மேதைகள் அங்காடியிலேயல்ல, அரசியல் மேடையிலேயல்ல இந்தியாவின் தலைவிதியே உருவாகக்கூடிய மாமன்றமாம் மாநிலங்களின் அவையிலே வாய்மூடி வெறும் கை தூக்கிகளாக இருக்க வேண்டுமென்று கருதுகின்றனர். தென்றலே வீசாதே யென்றால் குயிலே கூவாதே யென்றால். மயிலே ஆடாதே என்றால் எப்படியிருக்குமோ அப்படித்தான் அந்தக்கருத்தும் அமையும். வழிவழி பாரம்பரியமாக அரசியலிலே நேர்மையையும், நாகரிகத்தையும் கடைப்பிடிக்க ஒரு மாபெரும் ஈடும் இணையுமற்ற இயக்கத்தை தோற்றுவித்தவரிடம் நாடு எதை எதிர்பார்க்க முடியுமோ--அதையேதான் சீரும் சிறப்புடன் அகிலமே புகழ்ந்து கூறிடும் அளவிலும், முறையிலும் நடைமுறையாக்கித்தருகிறார்,

இத்தகு சிறப்பும் சீலமும் இருந்திடும் காரணத்தால்தான் ஏனைய கட்சியைச்சார்ந்த ஏடுகளும், ஏற்றமிகு கருத்தினைக் கொண்ட கற்றறிவாளர்களும் அண்ணாவின் தன்னலமற்ற தனி ஆற்றலைப்புகழ்ந்தனர்.

குறிப்பாக இல்லஸ்டிரேடட் வீக்லி (Illustrated Weekly) என்ற வார இதழ் அண்மையில் அண்ணா பற்றி குறிப்பிட்டு எழுதியபோது...

"Anna Will no Longer Remain as Elder Brother, But Develop Into A Bie Brother Let us Hope Annaduri Will so Conduct Himself as to Become an Anna not Onlyto the Tamils but to the Whole Nation"

என்ற தனது அடக்க முடியாத ஆசையைத்தெரிவித்தது வீக்லி. அண்ணாவின் சிறப்பு மிகு சேவை எல்லா தேசீய இனங்களுக்கும் பயன்பட்டிடவேண்டுமென்ற தத்துவம் வீக்லியின் இதயத்தில் மலர்ந்த எண்ணத்தின் எதிரொலியாகும்.

வீக்லி போன்ற ஏடுகளுக்குப்புரிகிறது இந்தத் துணைக் கண்டம் முழுவதிலுமே தட்டிக்கேட்கும் ஆற்றலும் தகுதியும் பெற்ற தலைவர் அண்ணா ஒருவரேதான் எனபது.

மாநிலங்களவையில் அண்ணா பேசியபோது.........

வாத்து ஒன்று இருந்தது
முன்பொரு காலந் தன்னில்
உள்ளத்து உணர்ச்சியினை வாலுக்கு உணர்த்த
நேரம் எவ்வளவு பிடிக்கும் என்பது
அறியாதிருந்தது வாத்து!
ஆகவே, அதன் கண்களில்

துக்கம் தோய்ந்திருந்த போதிலும்
அதன் சின்னஞ்சிறு வால் ஆடிக்கிடந்ததாம்
முன்னாள் பெற்ற மகிழ்ச்சியின் நினைவால் !

நீங்கள்--ஆளுங்கட்சியினர்--பழைய மகிழ்ச்சிலே திளைத்துக்கிடக்கிறீர்கள். 'சென்ற தலை முறையினர் அறுத்தெடுத்துக்கொடுத்த மகிழ்ச்சியைக் கொண்டே வாழ்ந்துவிட முடியாது; இப்போது புதிய தலை முறை தோன்றிவிட்டது! என்று அகில இந்திய காங்கிரசுத் தலைவர் எச்சரித்திருக்கிறார்''

என்று இடித்துரைத்துக்கூறினார். இப்படிப்பட்ட அற உரைகளை அந்த மன்றம் அண்ணாவுக்கு முன் கேட்டதில்லை. எனவேதான் வீக்லி' போன்ற ஏடுகள் அண்ணாவின் சேவை 'புத்துலக சமுதாயத்துக்கு மிகுதியும் தேவையென்று கருதுகின்றன தொல்லை கண்டு அஞ்சிடாதபோக்கும், மக்களின் துயர் துடைக்கும் தூயபணியும் கொண்டு நாட்டிலே வலம் வரும் பேரறிஞராம் அண்ணாவின் அருஞ்சேவை மேலும் மலர்ந்து வளருகின்ற பொன்நாட்களிலே கழகம் அரியணை தனிலமர்ந்து ஆட்சி புரிந்திடும் பொற்காலந்தன்னை ஆவலுடன் பலரும் எதிர் பார்த்திருக்கின்றனர். மாநகராட்சியினை ஆறாண்டு காலமாகக் கைப்பற்றி கழகம்ஆட்சி யின் மாட்சிதனை மக்களுக்கு செப்பியுள்ளது போன்றே வரு நாட்களில் தென்னகத்தின் இருளகற்றிட, தேம்பிடும் திராவிடர் தம் துயர் துடைத்திட ஜனநாயக பீடத்தின் வைர முடிதனை அண்ணா ஏற்றிடும் நிகழ்ச்சிதனை எல்லாரையும் போலவே எதிர் பார்த்து நிற்கிறேன்.

வணக்கம்